# உதயன்

வானிலை
கூ.வெ. 32 °C
கு.வெ. 23 °C
தெளிவான காலநிலை

சுடர் 30 | கதிர் 139 | வள்ளுவர் ஆண்டு 2046 | சித்திரை 1, செவ்வாய்க்கிழமை 14.04.2015



வாசகர்கள்
விளம்பரதாரர்கள்
முகவர்கள்
அனைவருக்கும்
உதயனின்
இனிய
சித்திரைப்
புத்தாண்டு
வாழ்த்துக்கள்


# இராணுவச்சூழல் இல்லாதொழிந்து புது வசந்தம் மலரட்டும்

## வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் புதுவருட வாழ்த்து

யாழ்ப்பாணம், ஏப்ரல்14
இன்று மலரும் புத்தாண்டில் எம்மை சுதந்திரம் அற்ற மனிதக் கூட்டமாக செயற்பட வைத்து எம்மைச் சுற்றி இராணுவச் சூழலைத் தொடர்ந்து வைத்திருப்பதை இனியாவது நீக்கவேண்டும் எனபிரார்த்திப்போம்.- இவ்வாறு தெரிவித்தார் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன்.

யாழ்.இந்தியத் தூதரகமும், வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சும் இணைந்து நடத்திய 'மலரட்டும் புதுவசந்தம்' என்னும் புத்தாண்டு இசை நிகழ்வு நேற்று நெல்லியடி மத்திய கல்லூரியில் நடைபெற்றது. அதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"புத்தாண்டை வரவேற்கும்

பக்.02



## உள்ளக விசாரணை குறித்து குழப்ப நிலையில் புதிய அரசு

கொழும்பு, ஏப். 14
போர்க் குற்றம் தொடர்பிலான உள்ளக விசாரணையை ஆரம்பிப்பது தொடர்பில், புதிய அரசு தெளிவான நிலைப்பாட்டில் இல்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. ஜூன் மாதம் அளவில் விசாரணை ஆரம்பமாகும் என்று ஜனாதிபதி மைத்திரி தெரிவித்திருந்த நிலையில், செப்ரெம்பர் மாதமே விசாரணை ஆரம்பிக்கப்படும் என்று வெளிவிவகார பிரதி அமைச்சர் அஜித் பெரேரா குறிப்பிட்டுள்ளார்.

"போரின் போது இடம்பெற்ற மீறல்கள் குறித்த குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக விசாரிக்க, உள்நாட்டு விசாரணை உடனடியாக ஆரம்பிக்கப்படாது. எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நடக்கவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் சபைக் கூட்டம் முடிந்த பின்னரே அது ஆரம்பிக்கப்படும்"– என்று அஜித் பெரேரா தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு அவர்

பக்.02

## கச்சதீவு இந்தியாவுக்கு மீளவும் வழங்கப்படாது

### சென்னையில் தெரிவித்தார் லக்ஷ்மன் கிரியெல்ல

சென்னை, ஏப்.14
கச்சதீவு ஒருபோதும் இந்தியாவுக்கு மீண்டும் வழங்கப்படமாட்டாது என்று பெருந்தோட்டத்துறை அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

தனிப்பட்ட பயணமாக இந்தியா சென்றுள்ள அவர் சென்னையில் செய்தியாளர்களைச் சந்தித்துக் கருத்துத் தெரிவிக்கும்போதே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

"கச்சதீவை ஒரு உடன்பாட்டின் மூலம் இலங்கைக்கு இந்தியா வழங்கியது. அதனைத் திருப்பிக் கொடுப்பதற்கு வாய்ப்பில்லை."– என்று தெரிவித்துள்ளார்.

"கச்சதீவின் மீதான இலங்கையின்

பக்.02


விடுவிக்கப்பட்ட பகுதிகளில் திருடர்கள் கைவரிசை

பக்கம் 4

பங்குனி திங்களில் ரூ. 10 லட்சம் பெறுமதியான நகைகள் திருட்டு

பக்கம் 3

விக்ரோறியாவும் மகாஜனவும் வலிகாமத்தில் மகுடம் சூடின

பக்கம் 23


## தமிழ் அரசியல் கைதிகளுடன் சரவணபவன் எம்.பி. சந்திப்பு

யாழ்ப்பாணம், ஏப்.14
யாழ்.சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை நேற்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் சந்தித்து அவர்களது பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்ந்தார். அத்துடன் அவர்களுக்கு புதுவருடத்துக்கான உடுபுடைவைகளையும் வழங்கினார்.

நேற்றுக்காலை யாழ்.சிறைச்சாலைக்குச் சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் மகஸின் சிறைச்சாலையில் இருந்து யாழ்.சிறைச்சாலைக்குக் கொண்டுவரப்பட்ட எட்டு அரசியல் கைதிகளையும், யாழ்.சிறைச்சாலையில் உள்ள ஐந்து அரசியல் கைதிகளையும் சந்தித்துப் பேசினார்.

தமது விரைவான விடுதலைக்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுதியான நடவடிக்கைகளை முன்னெடுப்பதுடன் அரசியல் கைதிகளின்

பக்.02



யாழ்.இந்தியத் தூதரகமும், வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சும் இணைந்து நடத்திய 'மலரட்டும் புதுவசந்தம்' என்னும் புத்தாண்டு இசை நிகழ்வு நேற்று நெல்லியடி மத்திய கல்லூரியில் நடைபெற்றது. அதில் பல கலை நிகழ்வுகள் நடைபெற்றன. ( விரிவு இரண்டாம் பக்கத்தில்)


குற்றவாளிகளை ஆதரிப்பதுதான் இலங்கை அரசியலின் நாகரீகமா?

பக்கம் 09


## புலிகளைத் தோற்கடித்த அதிகாரிகள் அனைவருக்கும் பீல்ட் மார்ஷல் பதவி

### இப்படிக் கோருகின்றார் கோத்தபாய ராஜபக்ஷ

கொழும்பு, ஏப். 14
தமிழீழ விடுதலைப் புலிகளைத் தோற்கடிப்பதில் தொடர்புடைய சகல இராணுவ அதிகாரிகளுக்கும் பீல்ட் மார்ஷல் பதவி வழங்கப்பட வேண்டும் என்று பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ கூறியுள்ளார். அத்துடன், ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்ற இரவு, இராணுவ சதிப்புரட்சிக்கான திட்டம் எதுவும் முன்னெடுக்கப்படவில்லை என்றும் அவர்

பக்.02

## தமிழரசுக் கட்சிக்கு 51 வீதம் ஏனைய கட்சிகளுக்கு 49 வீதம்

### அவ்வாறான உடன்படிக்கையிலேயே கைச்சாத்து: தமிழரசுக் கட்சிக் கூட்டத்தில் முடிவு

யாழ்ப்பாணம், ஏப். 14
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சிகளில், இலங்கை தமிழரசுக் கட்சிக்கு 51 சதவீதமும் ஏனைய மூன்று கட்சிகளுக்கு 49 சதவீதமும் வழங்கும் வகையிலேயே புரிந்துணர்வு உடன்படிக்கை மாற்றப்பட வேண்டும். அவ்வாறு மாற்றப்படும் புரிந்துணர்வு உடன்படிக்கையிலேயே, இலங்கைத்

பக்.02

# புதுவருடத்தை வரவேற்கும் 'மலரட்டும் புது வசந்தம்'

## நேற்று சிறப்புற நடைபெற்றது

கரணவாய், ஏப்.14

இந்தியத் துணைத் தூதரகமும் வடமாகாண கல்வி பண்பாட்டலு வல்கள் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சும் இணைந்து நடத் திய புதுவருடத்தை வரவேற்கும் 'மலரட்டும் புது வசந்தம்' நிகழ்வு நேற்று நெல்லியடி மத்திய கல்லூரி மண்டபத்தில்சிறப்பாகஇடம்பெற்றது.

இந்திய துணைத்தூதுவர் வ. நட ராசா தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் வடமாகாண சபை முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரன் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், வட மாகாண சபை எதிர்க்கட்சித் தலைவர் எஸ். தவராசா, வடமாகாண சபை உறுப்பினர்களான க. பரஞ்சோதி, எஸ். சுஜதீபன் மற்றும் எம்.கே. சிவாஜிலிங்கம், வடமாகாணக்கல்விப் பணிப்பாளர் சி. உதய குமார், வடமாகாண கல்வி பண் பாட்டலுவல்கள் அமைச்சின் செய லாளர் சி. சத்தியசீலன் பிரதேச சபை தவிசாளர்கள், கல்வித் திணைக்கள அதிகாரிகள் உட்பட பலரும் கலந்துகொண்டனர்.

அதில் உடுப்பிட்டி மகளிர் கல்லூரி மாணவர்களின் சுளகு நடனம் பருத் தித்துறை மெதடிஸ்த பெண்கள் கல்லூரி மாணவர்களின் மயில் நடனம் வடமராட்சி மத்திய கல் லூரி மாணவர்களின் செம்பு நட னம், தொண்டமானாறு வீரகத்தி மகா வித்தியாலய மாணவர்களின் வாள் நடனம்,பருத்தித்துறை ஹாட் லிக் கல்லூரி மாணவர்களின் பின் னல் நடனம் உட்பட பல்வேறு கலை நிகழ்வுகள் இடம்பெற்றன.

(ந-108,422)

# வடமராட்சி பாடசாலைகளுக்கு இசைக்கருவிகள்

வடமராட்சி, ஏப்.14

வடமராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த பாடசாலைகளுக்கு சுமார் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான இசைக் கருவிகள் இந்தியத் துணைத் தூதரகத்தால் வழங்கப்பட்டன.

நெல்லியடி மத்திய கல்லூரி மண்ட பத்தில் இடம்பெற்ற மலரட்டும் புது வசந்தம் நடன நிகழ்வில் வைத்து இவ் உபகரணங்கள் அந்தந்தப் பாடசாலை அதிபர்களிடம் கைய ளிக்கப்பட்டன.

உடுப்பிட்டி பெண்கள் கல்லூரி வட இந்து மகளிர் கல்லூரி, மெதடிஸ்த பெண்கள் உயர் தரப் பாடசாலை, வடமராட்சி மத்திய மகளிர் கல் லூரி, நெல்லியடி மத்திய கல் லூரி,தொண்டமானாறு வீரகத் திப் பிள்ளை மகா வித்தியாலயம்,பருத் தித்துறை ஹாட்லிக் கல்லூரி ஆகிய பாடசாலைகளுக்கே இவ் இசைக் கருவிகள் வழங்கப்பட்டன. (ந-108)

# தமிழர்களின் நல்வாழ்வுக்கு புத்தாண்டு வழி சமைக்கட்டும்

## வாழ்த்துச் செய்தியில் சரவணபவன் எம்.பி.

யாழ்ப்பாணம், ஏப். 14



தமிழர்கள் வாழ்வில் அமைதியை யும் நிலையான சமாதானத்தை யும் கொண்டுவரும் ஆண்டாக இந்தப் புத்தாண்டு அமையட்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவ ணபவன் தனது புத்தாண்டு வாழ்த் துச் செய்தியில் தெரிவித் துள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள் ளதாவது:-

காலம் காலமாக தொடர்ந்து இன் னல்களுக்கு முகம் கொடுத்து வரும் எமது தமிழ் இனம் பிறக்கும் இந்த புதிய ஆண்டிலாவது உரிமை களை அடைந்து துன்ப துயரங்கள் நீங்கி நிரந்தர சமாதானத்துடன் நிலையான தீர்வுடனும் வாழ இந் தப் புத்தாண்டு வழிசமைக்கட்டும்.

புதிய ஆண்டில் தமிழர்கள் தமது உரிமைகளை அடைந்து அனைத்து இனங்களையும் போல சம அந் தஸ்துடன் வாழ்வதற்கான சூழலை ஆட்சியில் உள்ள அரசு ஏற்படுத்த வேண்டும்.

தமிழர்கள் நிலங்கள் முற்றாக விடு விக்கப்பட்டு படைகளின் அச்சுறு தல் நீங்கி சுதந்திரமாகவும் வெளிப் படையாகவும் கருத்துக்களை முன் வைப்பதற்கான ஜனநாயக சூழல் ஏற்படுத்த வேண்டும்.

காணாமற்போன உறவுகள் குறித் தும் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை குறித்தும் அரசு அக் கறை காட்டி ஒரு நிம்மதியான வாழ்வை தமிழருக்கு ஏற்படுத்த இதயசுத்தியுடன் செயற்பட வேண் டும்.

பிறக்கும் புத்தாண்டில் அனைவ ரும் ஒன்றிணைந்து உரிமைகளை அடைய திடசங்கற்பம் கொள்வோம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# புதிய அரசில் திருப்தியில்லை - ரஜீவ விஜேசிங்க

கொழும்பு, ஏப் 14

புதிய அரசின் நடவடிக்கைகளில் திருப்தி அடைய முடியாது என லிப ரல் கட்சியின் தலைவரும், நாடா ளுமன்ற உறுப்பினருமான ரஜீவ விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை நியமனம் குறித்து ஆரம்பத்தில் பல்வேறு தீர்மானங் கள் மேற்கொள்ளப்பட்ட போதி லும் கடைசியில் அந்தத் தீர்மானங்கள் நிறைவேற்றப்படவில்லை. இந்த நிலையிலேயே அரசின் இந்த நட வடிக்கைகள் வெளிப்படைத்தன்மை யற்ற வகையில் அமைந்துள்ளன என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசின் நடவடிக்கைகள் குறித்து தீர்மானம் எடுக்கும் பொறுப்பு பொது மக்களுக்கு மாத்திரமே உண்டு என அவர் தெரிவித்துள்ளதுடன், ஜனாதிப தியின் அதிகாரங்களைப் பிரதம ருக்கு வழங்குவதற்காக மக்கள் இந்த அரசை ஆட்சியில் அமர்த்தவில்லை எனவும் சுட் டிக்காட்டியுள்ளார்.

மேலும் தற்போதைய அரசின் நிதிக் கொள்கைகள் தொடர்பிலும் அதி ருப்தி வெளியிட்டுள்ள ரஜீவ விஜே சிங்க, ஊழல் மோசடிகளுக்கு எதி ராக நடவடிக்கைகள் மேற்கொள் ளப்பட வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (த)

## கச்சதீவு

உரிமையை இந்தியா 1974ஆம் ஆண்டு உடன்பாட்டின் மூலம் அங்கீகரித்துள்ளது. இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் பயணத்தின் மூலம் இரு நாடுகளுக்கும் இடையி லான உறவுகள் வலுப்பெற் றுள்ளன. இரண்டு நாடுகளும் இயல்பான உறவுகளை பேணிக் கொள்ள வேண்டும்."- என்று அவர் அங்கு மேலும் தெரிவித் துள்ளார். (ந)

## தமிழ்

விடயத்தை முன்னுரிமைப்ப டுத்திச் செயற்பட வேண்டும் என் றும் அரசியல் கைதிகள் நாடா ளுமன்ற உறுப்பினரிடம் கோரிக்கை விடுத்தனர்.

இதுகுறித்து கட்சி உயர்மட்டத் துடன் பேசி ஆக்கபூர்வமான நட வடிக்கைகளை மேற்கொள்வ தாக நாடாளுமன்ற உறுப்பினர் கைதிகளிடம் உறுதியளித்தார்.

அத்துடன் அவர்களுக்குப் புது வருடத்துக்கான உடுபுடைவை களை அவர் வழங்கினார்.(த)

## உள்ளக

வழங்கிய நேர்காணலிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

"கடந்த மார்ச் மாதம் பெரிய தொரு இராஜதந்திர வெற்றி யைப் பெற்றுள்ளோம். போர்க் குற்றச்சாட்டுகள் மற்றும் மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகள் குறித்து விசாரிக்க, நடுநிலை யான உள்நாட்டு விசாரணை ஒன்றை நடத்துவதாக, ஐ.நா. அதிகாரிகளுக்கு வலியுறுத்திக் கூறியுள்ளோம்.

சர்வதேச விசாரணை தேவை யற்றது என்றும், எம்மிடம் சுதந் திரமான நீதித்துறை மற்றும் சுதந் திரமான பொதுச்சேவைகள் உள்ளன என்றும் ஐ.நா.விடம் தெரிவித்துள்ளோம்.நீதி,பொலிஸ் துறை மற்றும் ஏனைய அமைப் புகளின் சுதந்திரத்தை உறுதிப் படுத்துமாறு ஐ.நா. எம்மிடம் கேட்டது.

எனவே, உள்நாட்டு விசார ணையை நாம் மேற்கொள் வோம். இது ஒரு உள்நாட்டு விவகாரம். இதில் எந்தவொரு வெளிநாட்டு தலையீடுகளுக் கும் இடமளிக்கக் கூடாது என்ப தால், நடுநிலையான உள்நாட்டு விசாரணைக்குத் தயாராக இருக்கிறோம்."- என்று அவர் தெரிவித்துள்ளார்.

"எவ்வாறு நாம் உள்நாட்டு விசாரணையை மேற்கொள்ளப் போகிறோம் என்பது குறித்த அறிக்கை ஒன்றை ஐ.நா. மனித உரிமைகள் சபையிடம் சமர்ப் பிக்க வேண்டியுள்ளது. அதற்கு செப்ரெம்பர் மாத அமர்வில் அனுமதி கிடைத்த பின்னரே, உள் நாட்டு விசாரணைகள் ஆரம் பிக்கப்படும்."- என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை, ஜனாதிபதி மைத் திரிபால சிறிசேன ஆரம்பத்தில், உள்ளக விசாரணை ஏப்ரல் மாதம் ஆரம்பிக்கப்படும் என்று தெரிவித்திருந்தார். பின்னர் கடந்த வாரம் அமெரிக்காவில் இருந்து வெளியாகும் 'ரைம்' ஊடகத்துக்கு வழங்கிய நேர் காணலில் ஜூன் மாதத்தில் ஆரம் பிக்கப்படும் என்று தெரிவித் திருந்தார். (ந-5)

## இராணுவச் சூழல்

இந்த இசைநடன நிகழ்வு மலரட்டும் புதுவசந்தம் எனப்பெயரிடப்பட் டுள்ளது. வடக்கின் வசந்தம் என்ற பெயரின் கீழ் மத்திய அரசு மாகா ணத்தை தன் கட்டுப்பாட்டிற்குள் வைத்து அரசியல் செயற்பாட்டை கடந்த வருடம் நடத்தி வந்தது. அப் போது வசந்தம் என்னும் சொல் ஆக்கிரமிப்பை காட்டும் ஒரு சொல்லாக இருந்ததால் அப்படி யான வசந்தம் போய்விட்டது. ஆனால் இந்திய தூதரகமும், மாகாண கல்வி அமைச்சும் இந்த நிகழ்வை ஆக்கித்தந்துள்ளமை சாலப் பொருந்துவதாக அமைந் துள்ளது. புதிய வசந்தம் ஒன்று மலர வேண்டுமானால் தேவை யற்ற கட்டுப்பாடுகள் தளர்த்தப் பட்டு எம்மீது திணிக்கப்பட்டிருக் கும் அடிமைத்தனங்கள் நீக்கப்பட வேண்டும்."- என்று அவர் குறிப் பிட்டார்.

"இயற்கையோடு இணைந்த வாழ்க்கையே எமது தமிழ் மக்கள் வாழ்ந்து வருகின்றார்கள். இந்த நிகழ்வை பார்க்கும் போது எமது பாரம்பரியத்தை நினைவு படுத்து வதாக அமைந்துள்ளது.

நடனங்கள் வேறுமனே கை, கால் களை ஆட்டும் ஒரு நிகழ்வாக அல் லாது அவற்றை பற்றிய உள்ளாற்ற லையும் ,உயர்ந்த கருத்துக்களை யும் எடுத்தியம்பி எம்மை அவை சம்பந்தமாக அறிவுடையவர்க ளாக ஆக்குவது இந்த நடன முறை கள் பல காலத்திற்கு அழியாது இருக்க உதவி புரியும் . இப்படிப் பட் கலைகள் சம்பந்தமான நிகழ்ச்சிக ளில் எமது இந்திய இணைத்தூதர கம் கரிசனை காட்டி வருகின்றது. எமக்கு கலாசார மண்டபம் ஒன்றை அமைப்பதற்கும் இவர்கள் உதவி புரிந்து வருகிறார்கள்."- என்றும் அவர் தெரிவித்தார்.

"இனி வரும் காலங்களில் கலைக ளின் வெளிப்பாடு நவீன கலாசார மண்டபத்தில் யாழ்ப்பாணத்தில் நடைபெறும் என எதிர்பார்க்க லாம். பிறக்கப்போகும் புதுவருட வாழ்த்துக்களை அனைவருக்கும் தெரிவிக்கின்றேன்."- என்றும் முதல மைச்சர் தெரிவித்தார்.

(ந-108,422)

## புலிகளைத்

மறுத்துள்ளார்.

கொழும்பு ஆங்கில ஊடகத் துக்கு வழங்கியுள்ள நேர்கா ணலிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

"புதிய அரசில் உள்ள சிலர் கூறு வது போன்று சீஷெல்சில் எனக்கு எந்த வங்கிக் கணக்கும் கிடை யாது. இலங்கையில் எனக்கு ஒரே ஒரு வங்கிக் கணக்கு மாத் திரம் உள்ளது. அமெரிக்காவில் ஒரு வங்கிக் கணக்கு இருந்தது. பின்னர் அதனையும் மூடி விட்டேன்."- என்று அவர் கூறி யுள்ளார்.

"கடந்த ஜனவரி 8 ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் அன்று, அலரி மாளிகையில் நடந்த கூட் டத்தில், பாதுகாப்பு விவகாரங் கள் குறித்தே ஆராயப்பட்டன. தேர்தலுக்குப் பின்னர், சில குழுக்கள் வன்முறைகளை ஆரம் பிக்கலாம் என்று பொலிஸ் தரப்பில் கவலைகள் இருந்தன. எனவே, அந்தக் கூட்டத்தில் ஜனாதிபதியாக இருந்த மஹிந்த ராஜபக்ஷ, பாதுகாப்புப் படை கள், பொலிஸ் தரப்பினர், சட் டமா அதிபர் ஆகியோர் அது பற்றிக் கலந்துரையாடியிருந்த னர். தேர்தலுக்குப் பின்னர் மேற் கொள்ள வேண்டிய பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து கலந்து ரையாடுவதற்காக மட்டுமே அந் தக் கூட்டம் நடத்தப்பட்டது."- என்றும் அவர் தெரிவித்தார்.

"அப்போதைய எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க வைச் சந்திப்பதற்கும், அமைதி யான முறையில் அதிகாரத்தைக் கைமாற்றம் செய்வது குறித்து கலந்துரையாடவும் தீர்மானிக் கப்பட்டது.

2010 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியுற்ற பின் னர், முன்னாள் இராணுவத் தள பதி பீல்ட் மார்ஷல் சரத் பொன் சேகா, கைது செய்யப்பட்டதை நான் ஆதரிக்கவில்லை. பொன் சேகா மீது பல்வேறு குற்றச் சாட் டுகள் சுமத்தப்பட்டாலும், அவரை வெலிக்கடைச் சிறை யில் அடைக்காமல், இராணுவ முகாம் ஒன்றில் தடுத்து வைக் குமாறு அப்போதைய ஜனா திபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் கேட்டிருந்தேன். சரத் பொன் சேகாவுக்கு அண்மையில் பீல்ட் மார்ஷல் பதவி நிலை வழங் கப்பட்டுள்ள நிலையில், விடு தலைப் புலிகளைத் தோற்கடிப்ப தில், தொடர்புபட்டிருந்த ஏனைய எல்லா இராணுவ அதிகாரிக ளுக்கும், அதுபோன்ற அங்கீ காரம் அளிக்கப்பட வேண் டும்."- என்றும் அவர் தெரிவித் துள்ளார். (ந-5)

## தமிழரசுக்

தமிழரசுக் கட்சி கையொப்ப மிடும் என்று தெரிவிக்கப்பட் டுள்ளது.

இலங்கைத் தமிழரசுக்கட்சியின் யாழ்ப்பாண அலுவலகத்தில் கடந்த சில தினங்களுக்கு முன் னர், கட்சியின் முக்கிய மற்றும் சிரேஷ்ட தலைவர்களுடனான கலந்துரையாடல் நடைபெற் றது. இதிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பதிவு செய்வது தொடர்பில், அங்கத்துவக் கட்சிகளிடையே கொழும்பில் கடந்த மாத இறுதி யில் கலந்துரையாடல் இடம் பெற்றது. இதன் போது, இலங் கைத் தமிழரசுக் கட்சி தவிர்ந்த ஏனைய மூன்று கட்சிகளினா லும், முன்வைக்கப்பட்ட புரிந் துணர்வு உடன்படிக்கையை ஆராய்ந்து அதனடிப்படையில் செயற்படுவது என்று முடிவெ டுக்கப்பட்டது.

இதன் பின்னர், கடந்த 7 ஆம் திகதி அடுத்த சந்திப்பு கொழும் பில் இடம்பெற்றது. இதன் போது, புரிந்துணர்வு உடன்படிக்கை தொடர்பில், இலங்கைத் தமிழ ரசுக் கட்சியின் உறுப்பினர்களு டன் பேசியே, ஓர் முடிவைச் சொல்ல முடியும் என்று கட்சி யின் தலைவர் மாவை. சேனா திராசா தெரிவித்தார். அதனடிப் படையில் எதிர்வரும் 17 ஆம் திகதி இது தொடர்பில் இறுதி முடிவு எட்டுவது என்று தீர்மா னிக்கப்பட்டது.

இதற்கிடையில், யாழ்.நகரி லுள்ள இலங்கைத் தமிழரசுக் கட்சிப் பணிமனையில் கலந்து ரையாடல் இடம்பெற்றது. இந் தக் கலந்துரையாடலில் பல் வேறு விடயங்கள் ஆராயப்பட் டுள்ளன. நான்குகட்சிகளுக்கும் சமனான தேர்தல் ஆசனப் பங்கீடு உள்ளிட்ட பல்வேறு விட யங்கள் புரிந்துணர்வு உடன் படிக்கையில் குறிப்பிடப்பட்டி ருந்தன.

இதன் போது தமிழரசுக் கட்சி உறுப்பினர்கள், தமிழரசுக் கட் சிக்கு 51 சதவீதம் வழங்கப்பட வேண்டும். அவ்வாறு இணங் கும் பட்சத்திலேயே புரிந்து ணர்வு உடன்படிக்கையில் கையெ ழுத்திட வேண்டும் என்று தெரி வித்துள்ளனர். (ந-5)



வரலாற்றுப் புகழ் மிக்க பன்றித்தலைச்சி அம்மன் ஆலயத்தில் பங்குனித் திங்கள் இறுதி நாளான நேற்று பல நூற்றுக்கணக்கான அடியவர்கள் குடாநாட்டின் பல பகுதிகளில் இருந்தும் கலந்துகொண்டிருந்தனர். அவர்கள் அம்மனுக்குப் பொங்கிப் படைப்பதில் மிகவும் பக்திப்பரவசமாக ஈடுபட்டார்கள். அத்துடன் பெய்த மழையையும் பொருட்படுத்தாது தூக்குக்காவடிகள், பறவைக்காவடிகள் மற்றும் காவடிகள் கற்பூரச்சட்டி எடுத்தும் அடியவர்கள் தமது நேர்த்திகடன்களை நிறைவேற்றுவதில் பக்திபூர்வமாக ஈடுபட்டார்கள். (ற-86)

# மன்னாரில் சிக்கியது கொள்ளையர் கும்பல்

## பெண் உட்பட நால்வர் கைது: பல லட்சம் பெறுமதியான நகைகள் மீட்பு



மன்னார், ஏப்.14

மன்னார் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கிராமங்களில் தொடர்ச்சியாக இடம்பெற்று வந்த திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய பெண் ஒருவர் உட்பட நான்கு பேரை நேற்று மன்னார் பொலிஸார் கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து திருடப்பட்ட பல லட்சம் ரூபா பெறுமதியான பொருள்களும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

மன்னார் பொலிஸ் நிலைய புலனாய்வுத்துறை அதிகாரிகள் வழங்கிய இரகசிய தகவலின் அடிப்படையில் மன்னார் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சந்தன அலகக்கோன் அவர்களின் பணிப்புரைக்கு அமைவாக மன்னார் உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஐ.பி.ரி.சுகதபால அவர்களின் வழி நடத்தலில் மன்னார் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி அஜந்த றொட்ரிகோ தலைமையில் மன்னார் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த விசேட பொலிஸ் குழுவினர் மேற்கொண்ட நடவடிக்கையிலேயே குறித்த நால்வரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களிடம் மேற்கொண்ட விசாரணைகளின் அடிப்படையில் பதுக்கி வைத்திருந்த மடிக்கணனி ஒன்றும், ஒரு தொகுதி கையடக்கத் தொலைபேசிகள், நகைகள், புகைப் படக் கருவி, தேசிய அடையாள அட்டைகள், சைக்கிள் என்பன மீட்கப்பட்டுள்ளன. விசாரணைகளின் பின்னர் குறித்த நால்வரும் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மன்னார் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கிராமங்களில இந்த ஆண்டின் ஆரம்பம் முதல் தற்போது வரை சுமார் 9 லட்சத்து 63 ஆயிரத்து நூறு ரூபா பெறுமதியான நகை, பணம் மற்றும் மின்சாதன பொருள்கள் திருட்டுப்போயுள்ளன என்று பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

அதேவேளை 2014 ஆம் ஆண்டு மன்னார் பொலிஸ் பிரிவில் 14 இலட்சத்து 58 ஆயிரம் ரூபாய் பெறுமதியான நகை, பணம் திருட்டுப்போயின என்று மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று மன்னார்பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ற-56)

## புதுவருடத்தை முன்னிட்டு இரத்ததான நிகழ்வு



யாழ்ப்பாணம், ஏப். 14

புதுவருடப்பிறப்பு தினமான இன்று கொக்குவில் பொற்பதி அறிவாலயத்தில் இரத்ததான நிகழ்வு இடம்பெறவுள்ளது.

இன்று முற் பகல் 9 மணிக்கு இந்த நிகழ்வு இடம்பெறவுள்ளது என்று இதனை ஏற்பாடு செய்துள்ள பொற்பதி இந்து விளையாட்டுக் கழக நிர்வாகம் அறிவித்துள்ளது. (ற-4)

# பங்குனித் திங்களில் ரூ. 10 லட்சம் பெறுமதியான நகைகள் திருட்டு

## மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் ஆலயத்தில் நேற்று

வலி.வடக்கு, ஏப்.14

மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் ஆலயத்தில் இடம்பெற்ற பங்குனித் திங்கள் உற்சவ பொங்கல் திருவிழாவுக்கு வந்திருந்த அடியார்களின் நகைகள் திருட்டுப் போயுள்ளன. அவற்றின் பெறுமதி சுமார் 10 லட்சம் ரூபாவெனத் தெரிவிக்கப்படுகின்றது.

பங்குனித் திங்களான நேற்று பன்றித்தலைச்சி அம்மன் ஆலயத்தில் பக்தர்கள்பெரும் எண்ணிக்கையில் திரண்டிருந்தனர். அதனைப் பயன்படுத்தித் திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டியுள்ளனர். ஆலய உள் வீதியில் வைத்து சிறுவர்களிடத்திலேயே அதிக நகைகள் திருடப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

சங்கிலிகள், கைச்சங்கிலிகள், காப்புகள் போன்ற தங்க நகைகள் திருடப்பட்டுள்ளன என்று ஆலய வீதியில் அமைக்கப்பட்டிருந்த சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தின் தற்காலிக அலுவலகத்தில் முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்ட வண்ணம் இருந்தன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-86)

## புதுவருட கைவிசேஷ தினங்கள்

### வாக்கிய பஞ்சாங்கம்

| | | |
|---|---|---|
| 15.04.2015 | புதன் முற்பகல் | 09.57 – 10.15 மணி வரை |
| 15.04.2015 | புதன் முற்பகல் | 10.23 – 11.58 மணி வரை |
| 15.04.2015 | புதன் பிற்பகல் | 02.10 – 04.06 மணி வரை |

### திருக்கணித பஞ்சாங்கம்

| | | |
|---|---|---|
| 15.04.2015 | புதன் காலை | 07.52 – 09.50 மணி வரை |
| 15.04.2015 | புதன் முற்பகல் | 10.00 – 11.50 மணி வரை |
| 17.04.2015 | வெள்ளி காலை | 06.01 – 06.49 மணி வரை |

## கைதிகளை பார்வையிட இன்று விசேட சந்தர்ப்பம்

யாழ்ப்பாணம், ஏப்.14

புதுவருடத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் உட்பட நாட்டிலுள்ள சிறைச்சாலைகளில் இன்று கைதிகளைப் பார்வையிடுவதற்கு விசேட சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

வழமையாக சிறையிலுள்ள ஒருவரைப் பார்வையிட ஒரு நாளைக்கு ஒரு தடவை 3 பேருக்கு மாத்திரமே அனுமதி வழங்கப்படும். விளக்கமறியல் கைதிகளை ஒவ்வொரு நாளும் சென்று பார்வையிட முடியும். சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட கைதிகளை மாதத்தில் ஒரு தடவையே பார்வையிட முடியும். ஆனால் புதுவருட தினமான இன்று சிறைச்சாலையில் உள்ளவர்களைப் பார்வையிட 3 பேர் என்ற வரையறை நீக்கப்பட்டுள்ளது என்று சிறைச்சாலைத் தரப்புத் தெரிவித்தது.

வழமைபோன்று முற்பகல் 9 மணி தொடக்கம் மதியம் 12.30 வரையும் பிற்பகல் 2 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணி வரையும் கைதிகளைப் பார்வையிடச் சந்தர்ப்பம் வழங்கப்படுகிறது என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-4)

# செழிப்பான இல்லம் திட்ட நிதியை மீளப்பெறும் சமுர்த்தி வங்கிகள்

## மஹிந்த தேர்தலில் தோற்றதால் சமுர்த்திப் பயனாளிகளுக்கு சோதனை

யாழ்ப்பாணம், ஏப். 14

மஹிந்த ராஜபக்ஷ தேர்தலில் தோல்வியடைந்ததால், சமுர்த்திப் பயனாளிகளுக்கு செழிப்பான இல்லம் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கொடுப்பனவு மீளப் பெறப்படுகின்றது எனக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் அவரது சகோதரர் பஸில் ராஜபக்ஷவின் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் சமுர்த்தி அதிகார சபை செயற்பட்டது. ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாக, கடந்த வருடம் நவம்பர் மாதம் செழிப்பான இல்லம் திட்டத்தின் கீழ் சமுர்த்திப் பயனாளிகளுக்கு கொடுப்பனவு வழங்கப்பட்டது. வீட்டுத்திருத்த வேலைகள், அழகுபடுத்தல் வேலைகளுக்காக இந்த நிதி வழங்கப்படுவதாகக் குறிப்பிடப்பட்டது.

முதற்கட்டமாக 2 ஆயிரத்து 500 ரூபா சமுர்த்திப் பயனாளிகளின் வங்கிக் கணக்கில் வைப்பிலிடப்பட்டது. குறித்த நிதியை மீளச் செலுத்தத் தேவையில்லை. சமுர்த்தி வங்கிகளுக்கு அரசு குறித்த நிதியை வழங்கும் என்று தெரிவித்தே, வங்கி நிதி பொதுமக்களுக்கு வழங்கப்பட்டது. ஆனால் ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷ தோல்வியைத் தழுவினார். இதனால், வங்கிகளுக்கு வழங்கப்பட வேண்டிய நிதி புதிய அரசால் வழங்கப்படவில்லை.

அதையடுத்து சமுர்த்தி வங்கிகள், செழிப்பான இல்லத்தின் வழங்கிய நிதியை மீளவும் அறவிடும் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளன. சமுர்த்திப் பயனாளிகளுக்குரிய முத்திரைக் கொடுப்பனவிலிருந்து பகுதி பகுதியாக அந்த நிதியை அறவீடு செய்கின்றன.

இந்த நடவடிக்கை காரணமாக சமுர்த்திப் பயனாளிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். கடந்த அரசு வங்கிகளுக்கு வழங்குவதாக கூறிய தொகையை வழங்காமையே இதற்கு காரணம் என்று தெரிவித்த சமுர்த்தி அதிகாரிகள், புதிய அரசு குறித்த நிதியை வழங்கினால் சமுர்த்தி வங்கிகள், வழங்கிய பணத்தை மீளஅறவிடமாட்டாது என்று தெரிவித்தனர். (ற-5)

# கஞ்சாவை வாங்கிச் சென்றவர் காட்டிக்கொடுத்தார் விற்றவரை

## தற்போது இருவரும் பொலிஸ் பிடியில்

யாழ்ப்பாணம், ஏப்.14

கஞ்சா வாங்கிச் சென்றவர் பொலிஸாரிடம் மாட்டியவுடன் தனக்கு விற்றவரைச் காட்டிக் கொடுத்தார். தற்போது இரண்டு பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். நேற்றுமுன்தினம் இந்தச் சம்பவம் நடந்துள்ளது.

யாழ். பூம்புகாரில் வீட்டில் வைத்து கஞ்சா விற்பனை செய்யப்பட்டு வந்துள்ளது. அங்கு சென்ற ஒருவர் ஒரு பைக்கட் கஞ்சாவை விலைக்கு வாங்கிச் சென்றபோது பொலிஸாரிடம் மாட்டிக்கொண்டார்.

பொலிஸ் விசாரணையில் அந்த நபர் தனக்குக் கஞ்சா விற்ற நபரைக் காட்டிக் கொடுத்தார். பூம்புகாரிலுள்ள வீட்டுக்குச் சென்று கஞ்சா விற்பனை செய்த நபரைக் கைது செய்ததோடு அவரிடமிருந்து 2 கஞ்சா பைக்கட்டுக்களையும் கைப்பற்றினர் பொலிஸார்.

அதையடுத்து இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

கடந்த சில நாள்களாக யாழ். நகரில் கஞ்சா போதைப் பொருள்களுடன் சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டு வருகின்றனர். ஹெரோயின் போதைப் பொருள் வைத்திருந்தவர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர். தவிர சில நாள்களுக்கு முன்னர் சுமார் 87 கிலோ கிராம் கஞ்சா போதைப் பொருளை யாழ்ப்பாணத்துக்குக் கடத்திவர முயன்ற இரண்டு பேர் கைது செய்யப்பட்டிருந்தனர். (ற-4)



## அனுமதியின்றி மணல் வைத்திருந்தவர் கைது

யாழ்ப்பாணம், ஏப்.14

யாழ். அரியாலை, பொன்னம்பலம் வீதியிலுள்ள வீடொன்றில் அனுமதியின்றி மணல் களஞ்சியப்படுத்தி வைத்திருந்ததாகக் கூறப்படும் ஒருவரை கடந்த சனிக்கிழமை யாழ்ப்பாணப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அத்துடன், சந்தேகநபரிடமிருந்து 14 கியூப் மணல் கைப்பற்றப்பட்டு, பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் சந்தேக நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார். (ற)

## வேப்ப மரக் குற்றி கடத்தியவர் கைது

யாழ்ப்பாணம், ஏப்.14

ஈவினைப் பகுதியிலிருந்து சுன்னாகம் பகுதிக்கு வேப்பமரக் குற்றிகளைக் கடத்திக்கொண்டு சென்றதாகக் கூறப்படும் டிப்பர் ரக வாகன சாரதி ஒருவர் கடந்த சனிக்கிழமை இரவு கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

தமக்குக் கிடைத்த தகவலை அடுத்து, ஈவினைப் பகுதியில் மேற்படி டிப்பர் வாகனத்தை மறித்துச் சோதனையிட்டதாகவும், அதன்போது அனுமதிப்பத்திரம் இன்றி வேப்பமரக் குற்றிகள் கடத்திக்கொண்டு வந்தமை தெரியவந்ததாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (ற)

## சந்தேகத்தில் மூவர் கைது

யாழ்ப்பாணம், ஏப்.14

யாழ்ப்பாணம் அச்சுவேலிப் பகுதியில் சந்தேகத்துக்கு இடமாக நடமாடிய மூவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படு கின்றது.

கடந்த சனிக்கிழமை இரவு குறித்த நபர்கள் வீதியில் சந்தேகத்துக்கு இடமான முறையில் நடமாடினர் என்றும், அவர்களிடம் பொலிஸார் விசாரணை மேற்கொண்டபோது முன்னுக்குப்பின் முரணான தகவல்களைத் தெரிவித்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

குறித்த நபர்கள் தங்களை அடையாளப்படுத்தும் ஆவணங்கள் எதையும் வைத்திருக்காத நிலையில், அவர்கள் கைது செய்யப்பட்டனர் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (ற)

# விடுவிக்கப்பட்ட பகுதிகளில் திருடர்கள் கைவரிசை

## பொலிஸார் நடவடிக்கை எடுக்க வேண்டுமென மக்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப். 14

வலி.வடக்கில் மக்கள் மீள்குடியமர்வுக்கு அண்மையில் அனுமதிக்கப்பட்ட பிரதேசங்களில், இரும்புத் திருடர்களின் நடமாட்டம் அதிகரித்துள்ளது. பகல் வேளைகளிலேயே, வாகனங்களை வாடகைக்கு அமர்த்திக் கொண்டுவந்து, இரும்புத் திருடர்கள் குறித்த பகுதிகளில் உலாவுகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின் றது.

வலி.வடக்கில் 7 கிராம சேவையாளர் பிரிவுகள் மக்கள் பாவனைக்காக கடந்த சனிக்கிழமை கையளிக்கப்பட்டன. குறித்த பகுதிகள் பற்றைக்காடாக இருப்பதுடன், எஞ்சியுள்ள ஒரு சில வீடுகளும் மக்கள் உடனடியாக குடியமர முடியாத நிலையில் இருக்கின்றன. மக்கள் குடியமராததை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டுள்ள திருடர்கள், விடுவிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள இராணுவத்தினர் பயன்படுத்திய வீடுகளில் காணப்படும் கதவு, ஜன்னல், நிலைகளைப் பிடுங்கி எடுப்பதிலும், அந்தப் பகுதியிலுள்ள இரும்புப் பொருள்களைப் பொறுக்குவதில் தீவிரம் காட்டி வருகின்றனர்.

பகல் வேளைகளிலேயே 'படி ரக' வாகனங்களை வாடகைக்கு அமர்த்தி வந்து குறித்த பகுதிகளில் திருட்டு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். நேற்று முன்தினம் மாலையும்– இவ்வாறு திருட முற்பட்டவர்களை அயலிலுள்ளவர்கள் இனங்கண்டதைத் தொடர்ந்து அவர்கள், தமது நடவடிக்கைகளைக் கைவிட்டு ஓட்டம் பிடித்துள்ளனர்.

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலுக்கு அருகில் காங்கேசன்துறை பொலிஸ் நிலையம் அமைந்துள்ளது. அங்குள்ள பொலிஸாரை, விடுவிக்கப்பட்ட பகுதிகளில் பாதுகாப்புக்கு நிறுத்த வேண்டும் என்று, அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ற–5)

## உயிரைப் பறித்த புத்தாண்டு உடை

### சகோதரர்களுக்கு இடையே ஏற்பட்ட மோதலில் ஒருவர் சாவு

யாழ்ப்பாணம், ஏப்.14

புத்தாண்டுக்கான உடைகளைப் பங்கிடுவதில் சகோதரர்களுக்கு இடையே ஏற்பட்ட கைகலப்பால் ஒருவர் உயிரிழந்தார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு முல்லைத்தீவு, முள்ளியவளையில் இடம்பெற்றுள்ளது.

முள்ளியவளை, தண்ணீரூற்று பகுதியில் அரச உத்தியோகத்தில் உள்ள தாய் ஒருவர் அவரது பிள்ளைகள் இருவருக்கும் புத்தாண்டுக்காக புதிய உடைகளை வாங்கிக் கொடுத்துள்ளார். இந்த புதிய உடையால் இரு சகோதரர்களுக்கும் இடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கைகலப்பாக மாறி இருவரும் ஒருவரை ஒருவர் மாறி மாறி தள்ளி சண்டையில் ஈடுபட்டனர். இளைய சகோதரர் வேகமாக தள்ளியபோது 19 வயதான மூத்த சகோதரர் அருகிலே இருந்த அலுமாரியில் மோதுண்டு உயிரிழந்தார் என்று கூறப்படுகின்றது.

இது தொடர்பில் முள்ளியவளை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ற–21)

## தடம்புரண்டது பவுஸர்; மண்ணெண்ணெய் நாசம்



ஓமந்தை சோதனைச் சாவடிக்கு அண்மையாக பவுஸர் ஒன்று தடம்புரண்டதில் அதில் கொண்டுவரப்பட்ட மண்ணெண்ணெய் வெளியேறி மண்ணோடு மண்ணானது. இந்தச் சம்பவம் நேற்றுப் பிற்பகல் 2 மணியளவில் நடந்துள்ளது. வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணம் பயணித்த பவுஸரே தடம்புரண்டுள்ளது. பவுஸர் தடம்புரண்டதும் அருகில் உள்ளவர்கள் அதிலிருந்து சிந்திய மண்ணெண்ணெயைப் பாத்திரங்களில் ஏந்திச் சென்றதைக் காண முடிந்தது என்று தெரிவிக்கப்படுகின்றது. சில மணி நேரத்தின் பின்னர் கனரக வாகனத்தின் உதவியுடன் பவுஸர் மீட்கப்பட்டது. (ற)

## பணம் செலுத்தி பலமாதங்கள் கடந்தும் மோட்டார் சைக்கிள் கிடைக்கவில்லை

### அரச ஊழியர்கள் கவலை

அச்சுவேலி, ஏப்.14

மானிய விலையில் மோட்டார் சைக்கிள் பெறுவதற்கு 50 ஆயிரம் ரூபா வீதம் கட்டுப்பணம் செலுத்திய யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த அரச ஊழியர்கள் தமக்கான மோட்டார் சைக்கிள்களுக்காக பல மாதங்கள் காத்திருக்கின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

யாழ். மாவட்டத்தில் வெளிக்கள உத்தியோகத்தராகப் பணிபுரியும் அரச ஊழியர்களுக்கு 50 ஆயிரம் ரூபா மானிய விலை யில் கடந்த ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்பட்டன. அதில் மோட்டார் சைக்கிள்களைப் பெற்றுக்கொள்ளத் தவறியவர்களுக்கு ஜனாதிபதி தேர்தல் முடிவடைந்த பின்னர் பணத்தைச் செலுத்துமாறு அறிவிக் கப்பட்டது. அவர்கள் 50 ஆயிரம் ரூபாவை யாழ். மாவட்டச் செயலகத்தில் செலுத்தி பற்றுச்சீட்டுக்களைப் பெற்றுக்கொண்டனர்.

பணம் செலுத்தி நான்கு மாதங்கள் கடந்துள்ள போதிலும் இதுவரை மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. மானிய விலையில் மோட்டார் சைக்கிள் விநியோகம் உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்களுக்கு வழங்கப்படுகின்றபோதிலும், பணம் செலுத்திவிட்டுக் காத்திருக்கும் அரச ஊழியர்களுக்கு இன்னமும் வழங்கப்படவில்லை என்று, அவர்கள் கவலை தெரிவிக்கின்றனர். (ற–11)

## ஊரத்தியிலுள்ள குடும்பங்களுக்கு காணி உறுதி வழங்க நடவடிக்கை

வலி.மேற்கு பிரதேச சபைக்கு உட்பட்ட அராலி – ஊரத்தியில் உள்ள குடும்பங்களில் முதற்கட்ட தேவைகளைப் பூர்த்தி செய்துள்ள குடும்பங்களுக்கு காணி உறுதிப் பத்திரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சபையின் விதிமுறைகளைப் பின்பற்றும் குடும்பங்களுக்கே காணி உறுதிப் பத்திரம் வழங்க சபை அனுமதி வழங்கும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

ஊரத்தியில் உள்ள செந்தமிழ் சனசமூக நிலையம் அந்தப் பிரதேசத்தில் வாழும் குடும்பங்கள் அனைவருக்கும் காணிப் பகிர்வு தொடர்பான கூட்டங்களை நடத்தி ஆலோசனைகளை வழங்கிவருகின்றது. (ற–50)

## வெங்காய விதை உற்பத்தி யாழ்ப்பாண மாவட்டத்தில் வெற்றி

### சுயதேவையைப் பூர்த்தி செய்யும் அளவையும் எட்டியுள்ளது

அச்சுவேலி, ஏப்.14

வேதாள வெங்காய உண்மை விதை உற்பத்தியில் யாழ்ப்பாண மாவட்டம் சுயதேவையைப் பூர்த்தி செய்யும் நிலையை எட்டியுள்ளது. 105 முன்மாதிரி விவசாயிகள் ஊடாக மேற்கொள்ளப்பட்ட வெங்காய விதை உற்பத்தி வெற்றி அளித்திருப்பதால் மேலும் பல விவசாயிகள் விதை உற்பத்தியில் ஈடுபடுவதில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

யாழ்ப்பாண வெங்காய பயிர்ச்செய்கையில் வேதாள வெங்காய உண்மை விதையைப் பயன்படுத்தி செய்கை பண்ணும்முறை உற்பத்தி செலவைக் குறைத்திருப்பதோடு நல்ல தரமான வெங்காயத்தையும் அறுவடை செய்யக்கூடியதாக உள்ளது. உண்மை வெங்காய விதை இதுவரை காலமும் இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டு வந்தது. ஒரு கிலோ விதையின் விலை 10 ஆயிரம் ரூபாவுக்கு மேல் 13 ஆயிரம் ரூபா வரையில் காணப்பட்டது.

யாழ்.மாவட்ட காலநிலையில் வெங்காய விதையை உற்பத்தி செய்யலாம் என்ற முடிவுக்கு அமைய யாழ்.மாவட்ட விவசாயத் திணைக்களம் விதை உற்பத்தி தொடர்பான எண்ணக் கருவை விவசாயிகளுக்கு ஏற்படுத்தியதோடு பரீட்சார்த்த அடிப்படையில் விதை உற்பத்தியை மேற்கொண்டிருந்தது.

இந்த வருடம் தெரிவு செய்யப்பட்ட முன்மாதிரி விவசாயிகள் 105 பேர் வேதாள வெங்காய உண்மை விதை உற்பத்தியில் ஈடுபடுத்தப்பட்டனர். அதில் 50 விவசாயிகளுக்கு யுஎஸ்எயிட்ஸ் நிறுவனம் உதவிகளை வழங்கியது. 55 விவசாயிகளுக்கு மத்திய அரசின் ஈட்டு நிதிமூலம் உதவி வழங்கப்பட்டது. விதை உற்பத்தி வெற்றி அளித்துள்ளது.

விதை உற்பத்தி மூலம் கிடைக்கும் விதையை யாழ்.மாவட்ட விதை உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் கொள்வனவு செய்து விவசாயிகளுக்கு நியாய விலையில் விற்பனை செய்யவுள்ளது. வெங்காய விதை உற்பத்தி எதிர்பார்த்த அளவு வெற்றி அளித்திருப்பதால் மேலும் பல விவசாயிகள் சிறுபோக வெங்காயச் செய்கையின்போது விதை உற்பத்தியில் ஈடுபடுவதில் ஆர்வம் கொண்டுள்ளனர்.


யாழ்.மாவட்டத்தின் பயன்பாட்டுக்கு காலபோகம் – சிறுபோகம் இரண்டுக்கும் சேர்த்து வருடம் 400 கிலோவுக்குக் குறையாத அளவு வெங்காய விதை பயன்பாட்டளவு எனக் கூறப்படுகின்றது. (ற–11)

# வர்ணம் தீட்டலாம் வாங்க...






# செய்யும் தொழிலே சிறந்தது



பரந்தாமன் கல் உடைப்பவன்.கல் உடைப்பதைவிட நல்ல வேலை கிடைக்கக் கடவுளை வேண்டினான். ஒரு நாள் அவன் முன்னால் கடவுள் தோன்றி 'உனக்கு என்ன வேண்டும்' என்றார். 'சூரியன் உலகம் முழுக்கத் தெரியும்..நானும் அவ்வாறு தெரிய ஆசைப்படுகிறேன் எனவே சூரியனாக வேண்டும் ' என்றான். கடவுள் சம்மதம் தெரிவிப்பதற்குள் சூரியனை மேகம் மறைத்தது . உடனே 'மேகம் ஆக வேண்டும்' என்றான். மேகத்தை மழை மேகங்கள் மறைக்க ..தான் 'மழை மேகமாக' ஆக வேண்டும் என்றான். மேகம் மழையாகப் பெய்தபின் 'மழையாக' வேண்டும் என்றான். மழைநீர் நதியாக ஓடியதைப் பார்த்து 'நதியாக மாறவேண்டும்' என்று ஆசைப்பட்டான். ஓடி வந்த நதியை ஒரு பெரிய பாறாங்கல் தடுத்ததைப் பார்த்து 'கல்லாக வேண்டும்' என்றான். உடனே கடவுள் அந்தக் கல்லையே உடைக்கும் நீ சிறந்தவன் தானே..என்றார்.சற்று சிந்தித்த பரந்தாமன் ஆமாம்..ஆமாம்..என்றான். சிரித்த கடவுள் 'இருக்கும் இடமே சொர்க்கம் 'இருக்கும் நிலையே நல்ல நிலை 'செய்யும் தொழிலே சிறந்த தொழில்' என்பதை அனைவரும் உணர்ந்து கொள்ள வேண்டும் என்றார்.

# நீங்களும் நிச்சயம் வெற்றிபெற முடியும்



பாத்திரம் எவ்வளவு பெரிதாக இருந்தாலும், தண்ணீர் வரும் குழாயின் வாய்க்கு (விழுவதற்கு) கீழ் நேராக இருந்தால் தான் அந்த பாத்திரத்தில் தண்ணீர் நிறையும். என்னுடைய 'தன்னம்பிக்கை ' ஊட்டும் பயிற்சி வகுப்பில் நடந்த நிகழ்ச்சியை இங்கு பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். எப்போதும் எனது பயிற்சி வகுப்பில் முதலில் பங்கெடுத்துக் கொள்கிறவர்களுக்கு ஆர்வம் உண்டாக்கும் வகையில் வாழ்க்கைக்குப் பயனுள்ள வகையில் ஒரு விளக்கத்தைச் செய்முறையுடன் கொடுப்பேன். அப்போது தான் அவர்கள் ஒருபோதும் அதனை மறக்கமாட்டார்கள். அதன்படி, நான் ஒரு பாத்திரத்தை (தூக்கு வாளி போன்று வாய் அகலமுள்ளது) எடுத்துக்கொண்டேன். பிறகு ஒரு சிறிய டம்ளரில் தண்ணீரை மேஜையின் மீது வைத்தேன். அவர்களிடத்தில் 'எவராவது ஒருவர் முன்வந்து இந்த சிறிய டம்ளரில் இருக்கும் தண்ணீரை அந்த பாத்திரத்தில் ஊற்றுகிறீர்களா ?' என்று கேட்டேன். எல்லோரும் நான்! நீ! என்று போட்டி போட்டுக்கொண்டு வந்தனர். ஒருவரிடத்தில் அந்த தண்ணீர் உள்ள சிறிய டம்ளரை கையில் கொடுத்தேன். கொடுத்த வேகத்தில் அந்த பாத்திரத்தில் ஊற்றப் போனார். நான் உடனே அவரைத் தடுத்து 'இப்போது வேண்டாம். நான் சொல்லும்போது ஊற்றினால் போதுமென்றேன்.' பிறகு அந்தப் பாத்திரத்தை சுமார் 20 அடி தூரத்தில் வைத்தேன். இப்போது அவரிடத்தில் 'இந்த டம்ளரில் இருக்கும் தண்ணீரை அந்தப் பாத்திரத்தில் கொஞ்சம் கூட சிந்தாமல், வீணாக்காமல் முழு தண்ணீரையும் ஊற்றும்படிச் சொன்னேன்.' சொன்னவுடன் முழிமுழியென்று முழித்தான். 'முடியாது' என்பதற்கு பாவனையாகத் தலையை ஆட்டினான். அதன் பிறகு அந்தப் பாத்திரத்தை அவர் வைத்திருக்கும் டம்ளரை நோக்கி 5 அடிக்கு முன்னால் இழுத்து வைத்தேன். மீண்டும் 'முடியாது 'என்றான். மேலும் ஒரு 5 அடி முன்னால் வைத்தேன் (இப்போது 10 அடி தூரத்தில் பாத்திரம் உள்ளது). அதற்கு மேலும் 5அடி முன்னால் ... ம்ஹும் ... கடைசியாக 5 அடி முன்னால் வரும்போது அவன் வைத்திருக்கும் டம்ளருக்கு நேராக அந்தப் பாத்திரம் இருந்தது. இப்போது ஊற்றச் சொன்னேன். ஒரு சொட்டும் சிந்தாமல் சரியாக ஊற்றினான். அதற்கு எல்லோரையும் கையை தட்டச் சொல்லி பாராட்டைத் தெரிவித்தேன். இதிலிருந்து நான் சொல்ல விரும்புவது என்னவென்றால், நான் பாடம் நடத்தும்போதும் அல்லது எவராவது ஒரு விஷயத்தை பேசும்போதும் (அது டம்ளரில் இருக்கும் தண்ணீர் போன்றது) பாத்திரம்போல கவனத்தை எங்கேயோ வைத்துக் கொண்டால் நான் என்ன சொன்னாலும் பிரயோஜனம் இருக்காது. அவைகள் உங்களது காது வழியாக நுழைந்து மூளையில் பதியாது. இந்தச் செய்முறை பயிற்சியிலிருந்து , அவர்களுக்கு வாழ்க்கையில் தெரிந்து கொள்ள வேண்டிய பாடத்தைப் போதித்தேன். அதாவது நான் உங்களுக்கு பாடம் நடத்துவது என்பது வாழ்க்கையில் உங்களுக்கு கிடைக்கும் நல்ல வாய்ப்புகள், மகிழ்ச்சியான நேரங்கள், நல்ல சிந்தனைகள். அதை வாங்கிக்கொள்ளவேண்டுமென்றால், உங்கள் கவனம் பாத்திரம் போல மிகவும் தள்ளி இருந்தால் நான் என்ன சொன்னாலும் உங்கள் மூளையில் ஏறாது. 'ஆகவே உங்கள் கவனத்தை ஒருநிலைப்படுத்தி உங்களது பார்வையை ஒருமனதோடு நேருக்கு நேராக வைத்து கொண்டு என்னை நன்கு கவனித்தால் தான் நான் சொல்லும் விஷயங்களும். கொடுக்கும் சிந்தனைகளும் உங்கள் மனதில் ஆழமாக பதியும்' என்று சொன்னேன். அதாவது உனது கவன பாத்திரம் ஏன் தள்ளியிருக்கின்றது? (எடுத்துக் காட்டாக 20 அடி). உங்களுடைய பிரச்சினைகளை நினைப்பது (5 அடி என்று கொள்), நீங்கள் அடைந்த ஏமாற்றங்கள் (அது ஒரு 5 அடி), எதிர்கொண்ட தோல்விகள் (அதுவும் ஒரு 5 அடி), உங்களுக்கு ஏற்பட்ட ஆறாத வடுக்கள் (அது ஒரு 5 அடி). இவைகள் தான் தள்ளி வைப்பது. ஆகவே வாய்ப்புகளை, மகிழ்ச்சிகளை, நல்ல விஷயங்களை எதிர்கொள்ளும்போது உங்களது கவனம் தள்ளிப்போகும் அல்லது சிதறும் படியாக பிரச்சினைகளை நினைப்பதைத் தூக்கி எறிந்து விடுங்கள். அதன் பிறகு ஏமாற்றங்கள், தோல்விகள் மற்றும் வடுக்கள் என்று எல்லாவற்றையும் அகற்றுங்கள். இப்போது உங்கள் கவனம் 100% கிடைத்த வாய்ப்புகளை, மகிழ்ச்சிகளை, நல்ல விஷயங்களில் செலுத்தும்போது நீங்கள் கட்டாயம் வெற்றி பெறமுடியும்.



# நம்பினால் நம்புங்கள்!

உலகிலேயே மிகப்பெரிய பாறை ஆஸ்திரேலியாவில் உள்ளது. 'உலுறு' என்ற இந்தப்பிரமாண்டமான பாறை 114 மாடிக் கட்டடத்தை விடவும் உயரமானது.

சில மேகங்களின் உயரம் 16 கிலோமீற்றரை விடவும் அதிகம்!

வாளைமீன்கள் வாயுவை வெளிப்படுத்துவதன் மூலமாக தகவல் பரிமாறிக் கொள்கின்றன.

குதிரைகளால் ஒரே நாளில் 160 கிலோமீற்றர் வரை பயணம் செய்ய முடியும்.

கைரேகையைப் போலவே நாக்கின் ரேகைகளும் தனித்துவம் மிக்கவை.

ஈபிள் டவரின் 1665 படிகளில் ஒருவர் ஒருமுறை சைக்கிள் ஓட்டிச் சென்றிருக்கிறார்.

வெண் சுறாக்கள் 15 கொரில்லாக்கள் அளவு எடை கொண்டவை.

30 கோடி ஆண்டுகளுக்கு முன்னர் 6 அடி நீளமுள்ள மரவட்டைப் பூச்சிகள் உலகில் சுற்றிக் கொண்டிருந்தன.

கடலில் இதுவரை பொங்கிய அலைகளில் மிகப்பெரியது எம்பயர் ஸ்டேட் பில்டிங்கை விட உயரமானதாக இருந்தது.

விண்கலத்தில் உருளைக்கிழங்குச் செடியை வளர்த்து சோதனை செய்திருக்கின்றனர் விஞ்ஞானிகள்.

கிரிஸ்லி வகை கரடியால் குதிரைக்கு இணையான வேகத்தில் ஓட முடியும்.



## நம்பிக்கையையும் அன்பையும் பகிர்ந்து கொள்வோம்

ஐக்கியத்தின் மூலம் மாற்றங்களை உருவாக்கிய தமிழ் மக்கள் அந்த மாற்றங்களூடாகப் பயன்களை அனுபவிக்கவும், எமது ஒற்றுமை நிரந்தரமானது என நிலை நிறுத்திக் காட்டவும் இந்தப் புதிய ஆண்டில் மீண்டுமொரு தடவை உறுதி செய்து கொள்வோம். நாளும் பொழுதும் தென்னிலங்கை அரசியலில் அதிரடி மாற்றங்களும், குழப்பங்களும், அறிவிப்புக்களும் என்றுமில்லாதவாறு ஏட்டிக்குப் போட்டியாக நடந்தேறுகின்றன. அனைத்துமே பெரும்பான்மை சமூகத்தின் நலன் சார்ந்த விடயங்களே தவிர, சிறுபான்மை தமிழ் பேசும் இனம் சார்ந்தவைகள் அரிதே. சிறுபான்மைக்குள்ளும் சிறுபான்மையாக வன்னி மக்கள் புறந்தள்ளப்படுவது இன்னும் வேதனையான விடயம்.

காணாமற் போயிருக்கும் உறவுகளுக்காகக் கதறும் சத்தம் வானைத் தொடுகிறது. ஆனால் கொழும்பின் காதுகளுக்கு மட்டும் அது கேட்பதில்லை. தமிழ் அரசியல் கைதிகளின் நீடித்த சிறை வாழ்வுக்கு முடிவு காண மாற்றங்கள் உதவவில்லை. சொந்த நிலங்களிலும், வீடுகளிலும் குடியிருக்கும் உரிமை, மாற்றத்திலும் மறுக்கப்படுகின்றது. தமிழ் மக்களின் அவல வாழ்வும், துன்பங்களும், துயரங்களும் தொடர்கதையாகவே நீள்கின்றன. எம்மை ஆள்வோரையும், அடக்க நினைப்போரையும் நல்வழிப்படுத்த, நல்ல சிந்தனைகளை அவர்களின் நெஞ்சங்களில் நிலைநிறுத்த இந்தப் புதிய ஆண்டில் இறைவன் அவர்களை ஆட்கொள்ளட்டும் என இந்தப் புதிய ஆண்டில் பிரார்த்தனை செய்வோம். நம்பிக்கையையும், சமாதானத்தையும், அன்பையும் பரஸ்பரம் மற்றவர்களோடு பகிர்ந்து கொண்டு புதிய ஆண்டில் கால் பதிக்கும் அனைத்து மக்களுக்கும் இனிய புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்து நிற்கின்றேன்.

வினோநோகராதலிங்கம்,
நாடாளுமன்ற உறுப்பினர், வன்னி மாவட்டம்.

## இன்பமே சூழ்க! எல்லோரும் வாழ்க



இன்று பிறக்கின்ற மன்மத வருஷம் உலகமெல்லாம் வாழுகின்ற தமிழர்களுக்கெல்லாம், இந்துக்களுக்கெல்லாம் நலம் நல்கும் வருடமாக அமையப் பிரார்த்திக்கின்றோம். மன்மத என்று சொன்னாலே அழகு. ஒரு மனிதனுக்கு அழகைக் கொடுப்பவை கல்வியும் நல்ல பண்புகளும் தான்.

எம்மவர்க்கெல்லாம் கல்வியில் அறிவில், ஆற்றலில் மேன்மையையும் விழுமியங்கள், பண்பாடு, கலாசாரத்தில் எழுச்சியையும் இம் மன்மத வருடம் ஏற்படுத்த வேண்டும் என்று எல்லாம் வல்ல சிவப்பரம் பொருளையும், குருதேவர் சுவாமி சின்மயானந்தரையும் பிரார்த்திக்கின்றோம்.

இன்பமே சூழ்க! எல்லோரும் வாழ்க!!

உதயன் வாசகர்கள் அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்கள்!

இறைபணியில் ஜாக்கிரத சைதன்யா,
வதிவிட ஆச்சாரியார்,
சின்மயா மிஷன் யாழ்ப்பாணம்


TCT Multi Trade Centre
527, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

Para Lights
சோலார் மின் விளக்குகள் விற்பனையாகின்றது!

சிறிய முதலீட்டுடன் செலவின்றி ஒளி!
குறைந்த செலவில் நிறைய பயன்!
மின்சாரம் இல்லாத வேளையில் 60 வாட்ஸ் மின்குமிழின் வெளிச்சத்தை பெற்றுடுங்கள்!
சூரியசக்தியை (Solar Energy) பயன்படுத்தி இக்கருவியை சார்ஜ் செய்யுங்கள்!
சோலார் பேனல் இணைக்கப்பட்டுள்ளது!

ரீச்சார்ஜபிள் பேட்டரிகளை ரீச்சார்ஜ் செய்யுங்கள்!
நேற்றைய அரிக்கன் விளக்கு
இன்றைய LED தொழில்நுட்பத்துடன்!
விலை 990/=

மொத்த கொள்வனவிற்கு, 0789 13 08 13 / 0788 745 253 அழையுங்கள்!



வாடிக்கையாளர் அனைவருக்கும் MMS இன் இனிய சித்திரைப் புத்தாண்டு வாழ்த்துக்கள்

FREE HOME DELIVERY

(19L சுத்திகரிக்கப்பட்டு போத்தலில் அடைக்கப்பட்டு குடி தண்ணீர்)

புத்தாண்டு சிறப்பு சலுகையாக இன்று அழைக்கும் வாடிக்கையாளர்கள் உங்கள் வீட்டு வாசலில் ரூபா. 250 ரூபா. 230 இற்கு பெற்றுக்கொள்ளலாம்.

உங்கள் நேரம், உழைப்பு, பணத்தை மீதப்படுத்தி அழைத்தவுடன் வாசலில் தண்ணீர் கொண்டுவர அழையுங்கள். MMS (Mobile Marketing Service)

அழையுங்கள் : 077 151 6013, 077 654 0655



அனைவருக்கும் சித்திரைப் புத்தாண்டு வாழ்த்துக்கள்

Abi Travels

இதோ உங்களுக்காகவே அபி ட்ராவல்ஸ்

வல்வையிலும்....

உங்கள் தேவைகளையறிந்து புத்தம் புதுப் பொலிவுடன்
ஆரம்பித்துள்ள எமது சேவையானது
மிகவும் சிறப்பாகவும் அனுபவம்
மிக்க ஓட்டுநர்களால் செலுத்தப்படும்
வாகன ஒழுங்குகளையும்
உங்கள் தேவைகளை அறிந்து மிகவும்
விரைவாக சென்று வர நாள் வாடகையாக
பெற்றுக் கொள்ள இன்றே
உங்கள் முற்பதிவுகளை மேற்கொள்ளுங்கள்.

இணையதளம்: WWW.abitravels.info
தொலைபேசி: 077 555 4455

நெடியகாடு,
வல்வெட்டித்துறை.

தொலைபேசி
Viber, Whatsapp
077 555 4455



அன்பர்கள், நண்பர்கள்,
வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
இனிய சித்திரைப் புதுவருட
வாழ்த்துக்கள்

ஒரு முறை விஜயம் செய்து பாருங்கள்

RALEIGH
1887 இல் இருந்து
பாரம்பரியம் மிக்கது

RALEIGH இல் சவாரி செய்து வித்தியாசத்தை உணர்ந்துக் கொள்ளுங்கள்

குழந்தைகள் தாய்மார்களுக்கு
வேண்டிய அனைத்து
பொருள்களையும் பெற்றுக்
கொள்ளலாம்

Ahtus
Ahtus Enterprises (Pvt) Ltd.
அதுஸ் என்ரபிறைசஸ் (பிறைவேற்) லிமிட்
இல. 30, கன்னாதிட்டி றோட்
(வண்.சிவன் கோயில் முன்பாக) யாழ்ப்பாணம்.
Tel: 0777 427322

# 2015 புத்தாண்டு ஆசிச் செய்திகள்



## அனைவருக்கும் சுபிட்சமான வாழ்வு மலரட்டும்



கடந்த காலம் தந்த மாற்றங்கள் இந்தப் புதுவருடத்தில் நிரந்தரமாக வேண்டும் என்று இறைவனை வேண்டுகின்றோம்.

தமிழ் சிங்கள புத்தாண்டு என்பது வெறுமனே வார்த்தைகளால் ஒன்று சேராமல் உணர்வு பூர்வமாக உண்மையாகவே ஒன்றிணைய வேண்டும். அதன் மூலமாக ஒவ்வொரு மக்களும் சுதந்திரமாகவும் – மகிழ்ச்சியாகவும் அமைதியாகவும் வாழக் கூடியதாக இருக்கும். ஒவ்வொருவரும் மற்றவர்களுடனான வேற்றுமைகளை மறப்பதோடு அவர்களது அபிலாஷைகள் பூர்த்தியாக புதுவருடம் வழியமைக்கட்டும்.

அனைவருக்கும் மன்மத ஆண்டில் இறையாசிகளுடன் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**வித்தியாசாகரம் சிவஸ்ரீ சபா.வாசுதேவக்குருக்கள்,**
*தலைவர் சர்வதேச இந்துகுருமார் ஒன்றியம்.*

## மாற்றம் - நிலையான அபிவிருத்திக்கு வித்திட வேண்டும்



மக்களின் மனமாற்றம் புதிய அரசைத் தோற்றுவித்துள்ளது. புதிய அரசு புதிய பரிமாணத்துடன் தமிழ் – சிங்கள புத்தாண்டில் புதிய அத்தியாயம் படைக்கும் என்ற நம்பிக்கையுடன் மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

இந்த எண்ணம் – சிந்தனை நிறைவேற வழிபிறக்க வேண்டும்.

நாட்டில் இடம்பெற்ற கொடிய போரின் பின்னரான சாந்தி, சமாதானம், அமைதி என்பன ஏற்படுவதுடன் வடக்கிலும் துன்ப துயரங்களில் வாழும் ஒவ்வொரு மக்களினதும் வாழ்வில் மறுமலர்ச்சி – சுபிட்சம் ஏற்பட இறையாசி வேண்டி வலி.தென் மேற்கு மக்களின் சார்பில் மன்மத ஆண்டில் அனைவருக்கும் இனிய புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**சி.சி.மகேந்திரன்,**
*தவிசாளர், வலி.தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்.*

## வளம் தரட்டும் புத்தாண்டு



நடந்து முடிந்த வருடம் முடிந்து , புத்தாண்டாக மன்மத வருடமாக இந்த ஆண்டு எம்மை வந்தடைகின்றது. இந்த நன்னாளில் எல்லோர் உள்ளங்களிலும் இந்த வருடம் எமக்கு என்ன மகிழ்ச்சியை, என்ன நன்மையைத் தரப் போகின்றதோ என்ற கேள்வியுடன்தான் புத்தாண்டை வரவேற்கத் தயாராகுவோம்!

இறைவன் எமக்கு தகுந்ததையே உண்டு பண்ணியுள்ளான் எனவே, அதை எதிர்கொள்ளும் அவாவுடன் தான் இப்புத்தாண்டை எதிர்கொள்வோம் நாம்.

மனம் போல வாழ்வு என்பதைப் போல இறந்த காலத்தை மறந்து எதிர்காலம் சிறக்க.புலரும் புத்தாண்டு எமக்கு நன்மைகளை அள்ளித்தரும் என்ற நம்பிக்கையுடன் வாழ்த்தி வரவேற்போம் இந்தப் புத்தாண்டை. தன்னம்பிக்கை, நேர்மை, அன்பு, கடமையுணர்வு, உழைப்பு என்பனவற்றை மூலதனமாக்கி உதயமாகும் புதுவருடம் எம் அனைவருக்கும் நன்மையே தரும் என்ற நம்பிக்கையுடன் அனைத்தையும் படைத்த இறைவன் அனைத்தையும் பரிபக்குவப்படுத்துவான் என்ற உணர்வுடன், மலரும் மன்மத வருடத்தை மன மகிழ்வுடன் வருக வருக என்று வரவேற்போம்! ஒற்றுமை என்ற கயிற்றைப் பற்றிப்பிடித்து ஒரு தாய் மக்களாக வாழ்வோம்! வளம் பல பெறுவோம்!....

**அல்ஹாஜ் மௌலவி ஏ.எம்.ஏ.அஸீஸ் (காஸிமி),**
*யாழ். கிளி. மாவட்ட உலமா சபைத் தலைவர்.*

## புத்தாண்டு நங்காய்! நீ வருகவே

புத்தாண்டு நங்காய்! சிரிப்பினைச் சிந்தியே.
இத்தரைதனிலே கால் பதிக்கின்றாய்.
எல்லோருக்கும் ஏதெது தருவாய்.
வல்லவளே; மன்மத நங்கையே.
பாரிலே பாங்காய் நீ பாதம் பதிக்க,
ஊர்களெங்கும் உள்ள ஏழையர் கூட.
பட்ட கடன்களோடு கடன்களாய் வாங்கி.
குடிசைகளை அலங்கரித்து குதூகலமாய்.
கோடித் துணிகள் வாங்கித் தைத்து.
பச்சரிசிப் பொங்கல்கலிட்டு
பட்சணங்களும் ஆக்கி வைத்து.
மலர் மாலைகளும் சூட்டியே - நின்னை
மகிழ்வித்து நின் பாதங்கள் பணிகின்றார்
கேட்பவை யாவும் கிடைத்திட,
பாட்டினை ஓலையில் வைக்கின்றோம்.
மன்மத நங்காய்; மண்ணிலே,
மக்கள் யாவரும் நிம்மதியாய் வாழ்வதற்கு.
நீ மனம் வைக்க வேண்டும்.
நங்காய் நீ வருக வருக வருகவே.

– மீசாலையூர் கமலா.

## மலரும் சித்திரைப் புத்தாண்டே

தமிழர் திருநாள் கூற வரும் தமிழ்ப்புத்தாண்டே
தரணியில் நாம் பட்ட பெரும் பாடே
தீராத வலிகளை உணர்ந்தோம் நாளுமே
தாகம் தணித்திடுவாய் என்றுமே!

நீர் வளம் இருந்தும் நஞ்சானதேயம்மா
நில வளம் இருந்தும் அதை இழந்தோமம்மா
நிர்க்கதியானோம் இன்றேயம்மா— அதை நீக்கி
நிம்மதி வாழ்வினை தந்திடம்மா!

யாழ் குடாதனை பாழ்பட்டுப் போகவிடாதேயம்மா
நாள் தோறும் வழிசமைத்திடம்மா
மீள வாழ்வு தந்திடம்மா
கால காலமாய் நாம் வாழ்ந்திடவே!

அரியாலையூர்.
**செல்வி மிஷாந்தி செல்வராஜா**

## வருகின்ற மன்மதமே நல்வழிகாட்டி வருக! வருக!

பட்டதை மறக்க வைத்தாய்
பழசெல்லாம் இழக்க வைத்தாய்
இட்டம் போல் வாழ வைத்தாய்
இறு மாப்பை இழக்க வைத்தாய்
திட்டத்தை மாற்றி விட்டு
திகைத்திட மாற்றம் தந்து
விட்டதே சனி என்றேத்த
விரைகின்றாய் 'ஜயமே'செல்க
மாற்றம் ஒன்றேதான் இங்கு
மாறாதது என்று
நேற்றுவரைக்கும் அழுத தமிழர் (சிலர்)
நிம்மதியுறும் வண்ணம்
மண்ணினை எட்டிப் பார்த்து
மகிழ்வோடு கால்பதிக்கும்
வண்ணமாய் வருகின்றாய் எம்
"மன்மதமே "வருக! வருக!
மன்மத லீலைகள் மண்ணில் பெருகியதால்
வன்முறைகளோடு வாழ்க்கை முறை மாறலாச்சு
சின்னஞ்சிறு பெண் தொட்டு
பென்னம் பெரும் பெண்வரை
தன்னந்தனியே செல்லும்
தன்மையைத் தந்து இங்கே
அரசியல் தொட்டு வேடஆன்மிகம் வரைக்கு மானோர்
பழசினைப் பேசிப் பேசி பாழாகும் நிலையை மாற்றி
உரமிழந்து உறவிழந்து உதவியின்றித் தவிப்போர்
வளமோடு வாழும் வழி காட்ட நீ வருக! வருக!!

**கவிமணி அன்னைதாஸன், ஊரெழு**

## உயரிய ஜனநாயகம்!

விண்ணில் ஆதவன் இளமை
குன்றாது இருக்க வேண்டும்!
மண்ணில் மனித நீதி மறையாது
என்றும் இருக்க வேண்டும்!
உண்மையான மனித உரிமைகள்
மதிக்கப்படவும் வேண்டும்!
பண்பாட்டின் உயரிய ஜனநாயகம்
பாதுகாக்கப்படவும்வேண்டும்!
எண்ணத்தில் எல்லோரும் அதை
அனுபவிப்பதாய் உணரப்பட வேண்டும்!
வன்முறைகளுடைய குறுகிய இலாப
அறியாமைகள் அகல வேண்டும்!
வன்முறையை வன்முறையால் வெல்ல
நினைக்கும் நிலை வராதிருக்க வேண்டும்!
அன்பினால் அரவணைத்து அனைவர்
உரிமைகளை வழங்கும் நிலை வேண்டும்!
கண்டடைந்து புதிய ஆராய்ச்சி கண்டு
பிடிப்பு மனித இனம் முன்னேற வேண்டும்!
மன்மத ஆண்டே மொத்தமாய்
எல்லாம் தருவதாய் நீ வர வேண்டும்!

**இராம ஜெயபாலன், கொக்குவில்**



## புத்தாண்டே புது வாழ்வு தருவாயா?

புத்தாண்டே எங்களுக்குப் புதுவாழ்வு தருவாயா?
எக்காலும் தமிழருக்கு விடிவே கிடையாதா?
அறுபத்தைந்தாண்டுகள் பட்ட அவலம் தொலையாதா?
அறுநூறு ஆண்டுகள் ஆனாலும் ஆறுமா?
மனிதாபிமானப் போர் என்ற போர்வையில்
மஹிந்த செய்த இனக்கொலை மறக்குமா?
முள்ளி வாய்க்காலில் பட்ட கொடுமை மறக்குமா?
முட்கம்பி வேலிச் சிறைத் தண்டனை மறக்குமா?
போர் முடிந்த பின்னாலும் புலம் பெயர்ந்தலைகிறோம்
புத்தாண்டே எங்களுக்குப் புதுவாழ்வு தருவாயா?

எறிகணை வீச்சுகள், கொத்துக்குண்டுகள், வான் தாக்குதல்கள்
எத்தனை விதமாகக் கொன்று குவித்தார்கள்.
உலக நாடுகளையும் சேர்த்து உயிர்க்கொலை செய்தார்கள்
சாட்சிகளின்றியே தமிழரைச் சங்காரம் செய்தார்கள்
கை கால் இழந்தவர்கள், கருகிமாண்டவர்கள்
எடுத்துப் புதைப்பாரின்றி ஏதிலியாய்ச் செத்தவர்கள்
மார்பில் குடித்தபால் மரணப்பாலாகவே
மாதாவுடன் சேர்ந்து மரணித்த குழந்தைகள்
இந்தத் துயரங்கள் மனதை விட்டகலாதா?

புத்தாண்டே தமிழருக்குப் புனர்வாழ்வு தருவாயா?
மீள்குடியேற்றம் என்று மீண்டும்மோர் அகதிவாழ்வு
தகரமும் தறப்பாளுமே சாஸ்வத மாகிறது
எங்கள் தமிழ்ப் பூமியெல்லாம் அபகரிக்கப்படுகிறது
சிங்களக் குடியேற்றம் சிறப்பாய் நடக்கிறது
பார்க்குமிடமெல்லாம் படைகளின் பிரசன்னம்
படைகளுடே பலிக் கடாவாய் எம்மக்கள்
வீடில்லை, வாசலில்லை விழி மூட இடமேஇல்லை
கஞ்சிக்கும் வழியில்லை கசக்கிக் கட்டக்கந்தலில்லை
இந்த நிலை மாறி இன்னல்கள் தீர்ந்திடப்
புத்தாண்டே எங்களுக்குப் புதுவாழ்வு தருவாயா?
"சர்வதாரி" வந்தது சஞ்சலமே தந்தது
"விரோதி"வந்தது துரோகமே செய்தது
"விகிர்தி"வந்தும் நமக்கு விடிவு கிடைக்கவில்லை
"கர" வருடம் தொடர்ந்து வந்தும் கவலைகள் தீரவில்லை
"நந்தன"வந்தும் நன்மையேதுமில்லை
"ஜய"வருடம் வந்தது ஜெயம் ஏதும் நமக்கில்லை
"மன்மத"வருடம் வந்தா இன்னல் தீரப்போகிறது
எந்த வருடம் வந்தாலும், கந்தல் ஆட்சிசெய்யும்
கயவர் திருந்தும் வரை எங்களுக்கேது புத்தாண்டு?

கந்த பேரின்பம்,தீவான்.

## தீர்வு தருவளோ?

ஆண்டு "ஜய"வும் ஆண்டு போயினள்!
ஈண்டுத் தீர்வும் கிடைத்ததோ? — வேண்டும்
நன்மையை நாடும் நலன்களை யெமக்கு
"மன்மத" ஆண்டாள் தருவளோ?

நாயன்மார்கட்டு
ப.மகேந்திரதாசன்.

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com


## பிறக்கும் புதிய ஆண்டை நன்மை தர ஆக்கிடுவோம்

நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் நலம் பல விளைந்திடும் நல்லதொரு ஆண்டாக, இன்று பிறக்கின்ற மன்மத ஆண்டு விளங்கட்டும். இதுவே இன்றைய வேண்டுதலாகவும் அமையட்டும் என்று விழைந்து நிற்போமாக.

பிறக்கின்ற மன்மத ஆண்டின் பெறுபேறுகள் நாட்டுக்கும் மக்களுக்கும் நலமாக இருக்குமென்றே, சோதிடர்கள் பொதுவில் எதிர்வு கூறியுள்ளார். கடந்த ஆண்டில் நடந்து முடிந்த சிலபல தேசிய நிகழ்வுகளும், புத்தாண்டு பொலிவுதரும் ஆண்டாகவே இருக்கப் போகின்றது என்பதற்குக் கட்டியம் கூறுபவைபோல் அமைந்திருந்தன.

அரசியல் மட்டத்தில் தமிழ், முஸ்லிம் மக்கள் பிரிந்திருந்தாலும், நினையாப் பிரகாரமாக ஒன்றுபட்டு ஜனாதிபதித் தேர்தலில் வாக்களித்திருந்தமை ஆக்கபூர்வமான செயலாக அமைந்திருந்தது. சமய ரீதியிலும் மொழி, கலை, கலாசார முறைகளிலும் சிறுபான்மையோரை ஓரம் கட்டி ஒரவஞ்சனையுடன் செயற்பட்ட ஒரு கொடூர ஆட்சியைக் கவிழ்க்கும் சக்தி அவர்களிடமிருந்து வெளிப்பட்டுச் சாதனை புரிந்திருந்தது.

இந்தச் சக்தியை இந்த மக்கள் இனிமேலும் இழந்து விடலாகாது. மேலும் அதற்கு வலுச்சேர்த்துக் கொள்ளும் விதத்தில் காரியங்கள் நிகழ வேண்டும். முரண்பாடுகள் இருக்கலாம். கருத்து வேறுபாடுகளும் இருக்கலாம். ஆனால் ஒரே மொழி- பெரும்பாலும் ஒரே பிரதேசம் என்ற நிலையில் உறவினர் போல் இணைந்து வாழும் பண்புகளைக் கொண்ட இரு சாராரும் எதிர்காலத்தில் நாட்டின் ஆட்சியில் அமர்பவர்களை நிர்ணயிக்கும் சக்தியாக நிரந்தரமாகத் திகழும் விதத்தில் ஆக்கபூர்வமான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட வேண்டும். இந்த மக்களின் இருப்பும் அதன்மீது தங்கியுள்ள உரிமைகளும் பாதுகாக்கப்படுவதற்கு அவசியமான பொறிமுறையாக அது கருதப்பட வேண்டும்.

கடும் போக்கு மஹிந்த ராஜபக்ஷ அரசு தோற்கடிக்கப்பட்டு, புதிய அரசு தோற்றுவிக்கப்பட்டதன் காரணமாக, எவர் என்ன தான் சொல்லிக் கொண்டிருந்தாலும், சிறுபான்மை மக்களுக்கு, குறிப்பாக வடக்கு, கிழக்கு தமிழ் மக்களுக்கு, ஒரு சில நன்மைகள் விளைந்து வருகின்றன என்பதனை மறுப்பதற்கு இல்லை.

இடம்பெயர்ந்த மக்களின் காணிகளில் ஒருபகுதி விடுக்கப்பட்டிருப்பதை உதாரணத்துக்குக் கூறலாம். புதிய அரசின் 100 நாள் திட்டத்தில் இவை நிகழ்ந்துள்ளனவென்றால் நிரந்தரமான அரசு ஒன்று மத்தியில் சிறுபான்மையோர் ஆதரவில் நிலைபெறும் போது இன்னும் பலவற்றை நிறைவேற்றிக் கொள்ளும் சாத்தியங்கள் அதிகரிக்கலாம்.

பெரும்பான்மைக் கட்சிகளுக்குள் இப்போது அடிபாடுகள், முரண்பாடுகள் பெருகி வருகின்றன. பதவிக்கும் அதிகாரத்துக்கும் மல்லுக் கட்டுகிறார்கள். பிரதமராக யார் வரவேண்டும் என்பதில் கடும் போட்டி மேல் எழுந்துள்ளது

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை, வரும் பொதுத் தேர்தலில் பிரதமருக்கான வேட்பாளராகக் களம் இறக்கி, அவர் நிழலில் தம்மைக் காப்பாற்றிக்கொள்ள ஒரு பகுதியினர் முன்னிற்கிறார்கள்.

மறு பக்கத்தில் சிறுபான்மை அரசின் பிரதமராக இருக்கும் ரணில் விக்கிரமசிங்க, தமது கட்சியையும் தன்பதவியையும் வலுப்படுத்திக்கொண்டு ஆட்சியை மீண்டும் பிடிக்க முயன்றுவருகிறார்.

இதற்கிடையில் ராஜபக்ஷவை ஓரம் கட்டுவதற்கு, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை களம் இறக்கவும் முயற்சிகள் நடப்பதாகத் தகவல்கள் கசிகின்றன.

எதுவானாலும், பிறக்கும் வருடத்தில் சிறுபான்மை இனத்தவர்கள் சாணக்கியமாக நடந்து, காய்நகர்த்தல் களை மேற்கொண்டால் மட்டுமே, தங்கள் உரிமைகளையும் அபிலாசைகளையும் நிலைநாட்டிக் கொள்ள முடியும். அதன் மூலம் மட்டுமே மன்மத ஆண்டின் வருகையை, சிறுபான்மையோருக்கும் இந்த நாட்டின் எதிர்காலத்துக்கும் நன்மை தரும் ஆண்டாக மாற்றிக் கொள்ள முடியும்.

# உலகை உலுக்கிவரும் விமான விபத்துக்கள்

■ சோபனா

பயணங்களில் கொஞ்சம் வித்தியாசமான பயணம் என்றால் அது விமானப் பயணம் என்று தான் சொல்ல வேண்டும். உலகில் உள்ள ஏனைய போக்கு வரத்து வசதிகளை விட விமானப் போக்குவரத்துக்கு நிறையவே பணம் செலவாகும்.

விமானப் பயணம் என்றால் உயிர் பற்றிய அச்சம் எல்லோருக்குமே இருக்கும், ஏனெனில் கார், பஸ் விபத்துக்கள் ஏற்பட்டால் கால் கைகளை இழந்த நிலையில் குற்றுயிராகக் கிடக்கும்போது கூட காப்பாற்றுவதற்கு எவராவது உதவுவார்கள். ஆனால் விமான விபத்து என்றால் பயணிகளது உடல்கள் பூமியில் எங்கு சென்று விழும் என்பது தெரியாது. உயரத்தில் பறந்து கொண்டிருக்கும் விமானத்தில் இயந்திரக் கோளாறு என்றால் கூட அந்தச் சமயத்தில் சரிசெய்ய எவர் வருவார்கள்?

விமானம் கண்டுபிடிக்கப்பட்ட நாள் முதல் பல்வேறு விபத்துக்கள் நடைபெற்று வரும் நிலையில் கடந்த 2014ஆம் ஆண்டு தொடக்கம் தற்போது வரை அடுத்தடுத்து நடைபெற்ற விமான விபத்துக்கள் மக்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளன.

### காணாமல் போன மலேசிய விமானம்

கடந்த வருடம் மார்ச் மாதம் 8 ஆம் திகதி கோலாலம்பூரில் இருந்து 239 பயணிகளுடன் பிஜீங் நோக்கிப் பயணித்த ஆர்--370 விமானம் திடீரென நடுவானில் மாயமானது. இந்த விமானம் எங்கே சென்றது? விபத்துக்குள்ளானதா? என்று பல் வேறுவிசாரணைகள் நடத்தப்பட்டதைத் தொடர்ந்து, விமானம் இந்தியப் பெருங்கடலில் விழுந்து விட்டதாக அறிவிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து அமெரிக்கா, ஆஸ்திரேலியா, இந்தியா உள்ளிட்ட நாடுகள் தேடுதல் பணியில் களமிறங்கின.

தேடுதல் பணி நடைபெற்று வரும் போதே, அதன் கறுப்புப்பெட்டி கிடைத்துவிட்டது. விமானத்தின் பாகங்கள் அங்கு உள்ளன, இங்கு உள்ளன என்று ஒவ்வொரு நாளும் புதுப்புது தகவல்கள் வெளியான வண்ணம் இருந்தன. ஆனால், வெளிவந்த தகவல்கள் அனைத்தும் இதுவரை உறுதிசெய்யப்படவில்லை. விமானம் மாயமாகி ஒரு வருடம் கடந்துவிட்ட நிலையில் இன்று வரை தேடுதல் வேட்டை தொடர்கிறதே தவிர இதுவரை அதில் பயணித்தவர்களது ஒரு உடல்கூட கிடைக்கவில்லை.

### உக்ரைன் விமான விபத்து

மாயமான மலேசிய விமானம் பற்றிய அதிர்ச்சியான தகவல்கள் மக்கள் மனங்களில் இருந்து மறைவதற்கு முன்பாகவே மற்றொரு மலேசியன்எயர்லைன்ஸ் நிறுவனத்துக்குச் சொந்தமான போயிங் 777 ரக விமானம் கடந்த வருடம் ஜூலை மாதம் 17ஆம் திகதி உக்ரைனில் சுட்டு வீழ்த்தப்பட்டது. அம்ஸ்டர் டாமிலிருந்து, மலேசிய தலைநகர் கோலாலம்பூருக்கு போயிங் 777 ரக மலேசிய விமானம் பயணித்துக்கொண்டிருந்தபோது, உக்ரைன் வான்பரப்பில், ரஷ்ய எல்லைக்கு 50 கி.மீ.க்கு முன்னால் 33 ஆயிரம் அடி உயரத்தில் திடீரென விபத்துக்குள்ளானது. இதில், 298 பயணிகள் உடல் கருகி உயிரிழந்தாலும், அவர்களில் 181 பேரின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளன. உக்ரைனில் ரஷ்ய ஆதரவுக் கிளர்ச்சியாளர்களுக்கு எதிராக அந்த நாட்டு அரசுப் படைகள் தாக்குதல்கள் நடத்தியதில் இந்த விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டதாக தெரியவந்தது. விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டமை தொடர்பாக உக்ரைன் அரசும், ரஷ்ய ஆதரவு கிளர்ச்சியாளர்களும் பரஸ்பரம் ஒருதரப்பை மற்றையதரப்பு குற்றம் சாட்டியுள்ளனர்.

### இந்தோனேசியா விமான விபத்து

இந்தோனேசியாவின் சுரபயா நகரில் இருந்து சிங்கப்பூர் சாங்கி விமான நிலையம் நோக்கி சென்று கொண்டிருக்கையில் 155 பயணிகள் மற்றும் 7 பணிக்குழுவினரோடு விமானமொன்று கடந்த வருடம் டிசெம்பர் மாதம் 28 ஆம் திகதி காணாமல் போனது.

ஏர்பஸ் ஏ320-200 வகையான அந்த விமானம் காணாமல் போய் இரண்டு நாள்களின் பின்னர் டிசெம்பர் மாதம் 30 ஆம் திகதியன்று விமானத்தின் சிதைந்த பாகங்கள் கரிமட்டா நீரிணையில் கண்டுபிடிக்கப்பட்டன. குறைந்தது 40 பேரின் உடல்கள் கடலில் மிதந்த நிலையில் மீட்கப்பட்டன.

விமானம், புறப்பட்ட 45 நிமிடங்களில் விமானப் போக்குவரத்து கட்டுப்பாட்டு நிலையத்துடனான தொடர்பு துண்டிக்கப்பட்டது. விமானம் காணாமல் போவதற்கு முன்பாக, மோசமான வானிலை காரணமாக விமானி மாற்றுப் பாதை வழங்கக் கோரியதாகவும், வழக்கத்தை விட அதிக உயரத்தில் பறக்க அனுமதி கோரியதாகவும் இந்தோனேசியா தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மாயமான எயர் ஏசியா விமானம் கடலில் விழுந்ததாக இந்தோனேசியா அறிவித்தது.

### தைவான் விமான விபத்து

தைவான் நாட்டின் டிரான்ஸ்ஏசியா எயர்வேஸ் விமான நிறுவனத்தின் விமானம் கடந்த பெப்ரவரி மாதம் 3ஆம் திகதி சுமார் 58 பயணிகளுடன் தைபேயில் உள்ள சாங்ஷான் விமானநிலையத்தில் இருந்து கின்மென் தீவை நோக்கிப் பறந்து கொண்டிருந்தபோது விமானம் தனது கட்டுப்பாட்டை இழந்ததில் அருகில் உள்ள கீலங் ஆற்றில் விழுந்தது.

விமானம் கட்டுப்பாட்டை இழந்து தலைகீழாகக் கவிழ்ந்தபோது அங்கிருந்த மேம்பாலத்தில் சென்று கொண்டிருந்த வாகனங்களை நசுக்கி விட்டு பாலத்தின் கைபிடிச் சுவரை உடைத்துக் கொண்டு ஆற்றில் விழுந்தது. இதில் 48 பயணிகள் உயிரிழந்தனர், 10 பேர் உயிர் பிழைத்தனர். விமானத்தின் கறுப்புப் பெட்டியைச் சோதனையிட்டதில், விமானம் பறக்க ஆரம்பித்த 37 விநாடிகளில் வலதுபுற என்ஜின் செயலிழந்துவிட்டமை தெரியவந்துள்ளது. மற்றொரு என்ஜினை பயன்படுத்தியேனும் சிறிது நேரம் பறந்துவிட்டு உடனடியாக விமான நிலையத்துக்குத் திரும்பித் தரையிறக்கியிருக்க முடியும். ஆனால், அடுத்த 48-வது விநாடியில் செயல் பட்டுக் கொண்டிருந்த இடதுபுற என்ஜினும் நிறுத்தப்பட்டுள்ளது. இது விமானிகளின் தவறாகவே கருதப்படுகிறது.

### பிரான்ஸ் விமானம் விபத்து

பிரான்ஸ் நாட்டில் அல்ப்ஸ் மலைப் பகுதியில் விமானமொன்று விழுந்து நொறுங்கியதில் விமானத்தில் பயணித்த 150 பேர் உயிரிழந்தனர். ஐரோப்பிய கண்டத்தின் மிகப்பெரிய விமான நிறுவனம், லுப்தான்சா. இதன் துணை நிறுவனமான 'ஜேர்மனி விங்ஸ்', மலிவுக் கட்டண விமானப் பயணங்களை நடத்தி வருகிறது. இந்த நிறுவனத்தின் எயர் பஸ் ஏ320 ரக விமானம் ஒன்று, ஸ்பெயின் நாட்டில் உள்ள பார்சிலோனா விமான நிலையத்தில் இருந்து ஜெர்மனியின் டசல்டார்ப் நகருக்கு கடந்த 24 ஆம் திகதி புறப்பட்டுச் சென்றது. இதில் 144 பயணிகள், 2 விமானிகள், 4 பணியாளர்கள் என 150 பேர் பயணம் செய்தனர். இந்த விமானம், காலை 11.49 மணிக்கு டசல்டார்ப் நகரைச் சென்றடைந்திருக்க வேண்டும். ஆனால் காலை 11 மணிக்கே அந்த விமானம் ரேடார் திரையில் இருந்து மறைந்தது. இதனால் பதற்றம் ஏற்பட்டது. இந்த நிலையில், அந்த விமானம் பிரான்ஸ் நாட்டில் அல்ப்ஸ் மலையின் தென்பகுதியில், பார்சிலோனட் நகருக்கு அருகே விழுந்து நொறுங்கியது. இந்த விமானத்தில் பயணம் செய்த அத்தனைபேரும் பலியாகி விட்டனர். விபத்துக்குள்ளான விமானம் 24 ஆண்டுகளாக இயங்கி வந்த விமானம் ஆகும். விமானத்தின் சிதைவுகளை பார்சிலோனட் அருகே பிரான்ஸ் ஹெலிக்கொப்டர்கள் கண்டறிந்ததாக தகவல்கள் கூறுகின்றன. இதற்கிடையே விபத்து நடந்த பகுதிக்கு தரை வழியே வாகனங்கள் செல்ல முடியாது என்பதால் ஹெலிக்கொப்டர்கள் சென்று, மீட்புப் பணியைத் தொடங்கியன. விபத்து நேர்வதற்கு முன்பாக காலை 10.47 மணிக்கு, அந்த விமானம் 5 ஆயிரம் அடி உயரத்தில் பறந்தபோது, விமானத்தில் இருந்து ஆபத்து சமிக்ஞைகள் வந்ததாகவும் தெரிய வந்துள்ளது.

### காரணம் தான் என்ன

வளர்ந்து வரும் தொழில்நுட்ப உலகில் பல பல புதிய தொழில்நுட்பங்களை கண்டுபிடித்து வெற்றியடைந்து வரும் நிலையில், விமானப் பயணங்களின் பாதுகாப்பில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடையவில்லை. தொழில்நுட்பக் கோளாறுகள், விமானிகளின் கவனக்குறைவு, வானிலை மாற்றங்கள், விமானம் அதனது கட்டுப்பாட்டை இழப்பது, காரணங்கள் தெரியாத நிலை போன்றவைகளால் விமானம் விபத்துக்குள்ளாவது அதிகரித்துக் கொண்டே இருக்கிறது. இதனால் பல்வேறு உயிர்கள் விண்ணிலும், மண்ணிலும் சிதறுகின்றன. விரைவில் ஓர் இடத்தை அடைவதற்கு உதவும் விமானப் பயணம் சில வேளைகளில் உயிராபத்தையும் ஏற்படுத்தக் காரணமாகி விடுகின்றன.


விமானம் கண்டு பிடிக்கப்பட்ட நாள் முதல் பல்வேறு விபத்துக்கள் நடைபெற்று வரும் நிலையில் கடந்த 2014ஆம் ஆண்டு தொடக்கம் தற்போது வரை அடுத்தடுத்து நடைபெற்ற விமான விபத்துக் கள் மக்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளன.

ராஜராஜன்





# குற்றவாளிகளை ஆதரிப்பது தான் இலங்கை அரசியலின் நாகரிகமா?

> புறமொதுக்கி வைக்கப்பட்டாலும் மோசடி அரசியல்வாதிகள் தமது நலன்களைப் பேணுவதில் ஒரு குறையும் வைப்பதில்லை. நேர்மையான அரசியல் என்பது ஜனநாயகத்தின் ஆணி வேர் என்ற கோட்பாடு என்றோ குப்பைக் கூடைக்குள் வீசப்பட்டு விட்டது. பிழைக்கத் தெரிந்தவனுக்கு அரசியலே தஞ்சம் என்பது மெய்ப்பிக்கப்பட்டு விட்டது.

குற்றவாளிகளென இனம் காட்டப்பட்டவர்களைக் கூட ஏற்றுக்கொண்டு அவர்களுக்கு ஆதரவு வழங்கும் கலாசாரம் இலங்கையில் உருவாகியுள்ளது. ஊழல், மோசடி, அதிகார துஷ்பிரயோகம் என அடுக்கடுக்காகக் குற்றம் சுமத்தப்பட்ட மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியடைந்த போது அவரது எதிர்காலம் அஸ்தமனத்தை எட்டிவிட்டதாகவே பலரும் எண்ணியிருந்தனர். அதிலும் எவருக்கும் அஞ்சாது தான் நினைத்ததைச் சாதித்துக்கொள்ளும் வகையில் சகல அதிகாரங்களையும் தன்னகத்தே கொண்டிருந்த அவர், ஒரு சர்வாதிகாரிபோன்றே நடந்துகொண்டார். அவரை எதிர்த்தவர்களின் உயிருக்கு உத்தரவாதம் இருந்ததில்லை. இந்த நாட்டின் செல்வங்களை ஒரு தனிக் குடும்பம் மொத்தமாகக் சூறையாடி ஏப்பம் விட்ட வரலாறும் மஹிந்தவின் ஆட்சிக்கே உரியது. இதனால்தான் பதவியில் இருக்கும் போதே தோற்கடிக்கப்பட்டவர் என்ற பெருமையை அவர் ஈட்டிக்கொண்டார்.

ஆனால் தமது தோல்வியைக் கூட ஒரு துருப்புச் சீட்டாகப் பயன்படுத்தி தமது எதிர்கால அரசியல் பயணத்துக்கான பாதையை அவர் அமைத்துக் கொண்டுள்ளமை அவர் பக்கம் ஏராளமானவர்கள் திரும்பியுள்ளதன் மூலமாகத் தெரிகின்றது.


அண்மையில் குருநாகலில் இடம்பெற்ற சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஏற்பாடு செய்த கூட்டத்துக்குச் சென்ற முன்னாள் ஜனாதிபதியும் அந்தக் கட்சியின் ஸ்தாபகரான எஸ்.டபிள்யூ ஆர்.டி. பண்டாரநாயக்க மற்றும் முன்னாள் பிரதமரான சிறிமாவோ பண்டாரநாயக்கவின் புதல்வியுமான சந்திரிகாவுக்கு அவமானத்தை ஏற்படுத்தும் வகையில், அந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களே ஈடுபட்டமை தெரிய வந்துள்ளது. அவருக்கு எதிராக மோசமான வார்த்தைப் பிரயோகங்கள் கூட மேற்கொள்ளப்பட்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதேவேளை சந்திரிகாவைத் தூசித்தவர்கள் மஹிந்தவின் புகழைப் பாடி, அவர்தான் இந்த நாட்டின் எதிர்காலத் தலைவர் என்று கூறியதாகவும் தெரிகின்றது.



அங்கு நடந்த சம்பவங்களைக் கூட்டிக் கழித்துப் பார்க்கும் போது மஹிந்தவுக்கும் இதற்கும் நெருங்கிய தொடர்புகள் இருப்பதைக் கண்டுகொள்ள முடியும். இதை உறுதிப்படுத்துமாப் போன்று சந்திரிகாவைத் தூசித்தவர்களே மஹிந்த பாராட்டியதாக இன்னுமொரு தகவல் தெரிவிக்கின்றது.

உலகில் வேறு நாடுகளை எடுத்துக் கொண்டால் ஊழல், மோசடிகளில் ஈடுபட்டு அதிகார துஷ்பிரயோகத்தின் மூலமாக நாட்டு மக்களைச் சீரழித்த எந்த ஆட்சியாளரையும் அவர் பதவியிலிருந்து அகற்றப்பட்ட பின்னர் மக்கள் மீண்டும் ஏற்றுக்கொள்வதில்லை. ஆனானப்பட்ட உகாண்டா நாட்டின் கொடுங்கோலனான இடி அமீன் ஆடாத ஆட்டமெல்லாம் ஆடிவிட்டு, இறுதியில் நாட்டைவிட்டே தப்பியோடி அயல் நாடொன்றில் தஞ்சம்புக வேண்டிய அவல நிலைக்குத் தள்ளப்பட்டான். இதே கதிதான் ஈரான் நாட்டின் முன்னாள் மன்னர் ஷாவுக்கும் ஏற்பட்டது. மக்களே அவரை நாட்டை விட்டுத் துரத்தியடித்தனர். லிபியாவை நாற்பது ஆண்டுகளுக்கும் மேலாகத் தமது இரும்புக் கரங்களால் நசுக்கிய கடாபி கூட மக்களின் தாக்குதல் காரணமாகவே தனது உயிரை இழக்க நேரிட்டது. பிலிப்பைன்ஸ் நாட்டை ஏப்பம் விட்டு ஆடம்பர வாழ்வு வாழ்ந்த மார்க்கோஸின் இறுதித் தருணங்களும் நரகமாகவே அமைந்து விட்டன. இவ்வாறு பலரை இங்கு உதாரணமாகக் கூற முடியும்.



ஆனால் எமது நாட்டைப் பொறுத்த வரையில் நிலைமை தலைகீழாகக் காணப்படுகின்றது. எவரையும் மறந்து மன்னிக்கும் பெருங்குணம் படைத்தவர்கள் இங்குதான் உள்ளனர். இல்லையென்றால் தாம் நிராகரித்த மஹிந்தவை அதே மக்கள் ஏற்றுக் கொள்வார்களா?

அரசியல் என்பது சாக்கடைக்கு ஒப்பானதெனக் கூறப்பட்டாலும், அரசியல்வாதிகளுக்கு அதுவே தங்கச் சுரங்கமாகக் காணப்படுகின்றது. மக்களின் நலன்கள் கவனிக்கப்படாது புறமொதுக்கி வைக்கப்பட்டாலும் மோசடி அரசியல்வாதிகள் தமது நலன்களைப் பேணுவதில் ஒரு குறையும் வைப்பதில்லை. நேர்மையான அரசியல் என்பது ஜனநாயகத்தின் ஆணி வேர் என்ற கோட்பாடு என்றோ குப்பைக் கூடைக்குள் வீசப்பட்டு விட்டது. பிழைக்கத் தெரிந்தவனுக்கு அரசியலே தஞ்சம் என்பது மெய்ப்பிக்கப்பட்டு விட்டது.

மஹிந்தவின் ஆட்சியில் இடம்பெற்ற மோசமான சம்பவங்கள் வெளிவரத் தொடங்கியபோதே மக்கள் கிளர்ந்தெழுந்து ஊழல்வாதிகளையும் மோசடிக்காரர்களையும் நாட்டை விட்டே துரத்தும் பணியில் ஈடுபட்டிருக்க வேண்டும். ஆனால் இங்கு நடப்பதென்ன? குற்றம் சுமத்தப்பட்டவர்களுக்கு செங்கம்பள வரவேற்பு அளித்துப் போற்றிப் புகழப்படும் நிலையே காணப்படுகின்றது. அதை விட அத்தகையவர்கள் மீண்டும் பதவிக்கு வரவேண்டுமென ஒரு பகுதி மக்கள் ஆதரவு தெரிவித்து வருகின்றமையும் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல.

இந்த நாடு உருப்பட வேண்டுமானால் குற்றவாளிகள் தராதரம் எதுவுமின்றித் தண்டிக்கப்படல் வேண்டும். அவர்கள் ஆட்சிக்கதிரை பற்றிச் சிந்திக்கவே முடியாத அளவுக்கு மக்களின் போராட்டங்கள் இடம்பெற வேண்டும்.

இதைவிடுத்து குற்றவாளிகளை ஆதரிப்பதும் அவர்களையே மீண்டும் ஆட்சியில் அமர்த்துவதற்குத் துடிப்பதும் இந்த நாட்டை என்றுமே மீள முடியாத நரகத்தினுள் தள்ளிவிடும்.

இதை இந்த நாட்டு மக்கள் என்று உணர்ந்து கொள்வார்களோ அந்தக் கணமே நாடு சொர்க்கபுரியாக மாறி விடுவதற்கான ஆரம்பச் சுழி இடப்பட்டு விடும்.

# மரக்கறிகளின் நேற்றைய நிலைவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல் வேலி | கிளிநொச்சி | மன்னார் |
|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 50 | 40 | 50 | 50 | 40 | 60 | 50 |
| கத்தரி | 50 | 40 | 50 | 40 | 30–40 | 40 | 40–50 |
| கரட் | 90 | 110 | 100 | 110 | 80–90 | 110 | 100–110 |
| மரவள்ளி | 30 | 50 | 30 | 50 | 30–40 | 50 | 30–40 |
| பயிற்றை | 80 | 80 | 80 | 90 | 60–70 | 90 | 60–80 |
| பாகல் | 80 | 80 | 90–100 | 60 | 60–70 | 70 | 80–90 |
| கருணைக்கிழங்கு | 60 | 50 | 50 | 40 | – | – | 50–70 |
| பெ.வெங்காயம் | 90 | 70–80 | 70–80 | 80 | 70–80 | 80 | 80–90 |
| சி.வெங்காயம் | 50 | 60–80 | 70 | 70 | 50–60 | 80 | 80–100 |
| பூசணி | 30 | 30 | 40 | 20 | 25–30 | 60 | 40–50 |
| தக்காளி | 40 | 40 | 30 | 40 | 30–40 | 40 | 50–80 |
| வாழைக்காய் | 40 | 40 | 40 | 40 | 50–70 | 40 | 50–70 |
| கீரை | 20 | 20 | 30 | 10 | 20–30 | 20 | 30–40 |
| பொன்னாங்காணி | 25 | 40 | 30 | 30 | 20–30 | 20 | 10–15 |
| பச்சை மிளகாய் | 50 | 50 | 50 | 40 | 30–40 | 60 | 30–40 |
| புடோல் | 40 | 30 | 30 | 30 | 30–50 | 30 | 30–50 |
| கோவா | 40 | 40 | 40 | 30 | 20–30 | 30 | 50–80 |
| வெண்டி | 50 | 40 | 40 | 40 | 40–50 | 30 | 30–40 |
| போஞ்சி | 90 | 100 | 80 | 80 | 70–80 | 120 | 40–60 |
| லீக்ஸ் | 140 | 150 | 140 | 120 | 140–150 | 200 | 60–70 |
| தேங்காய் | 60 | 35–55 | 60 | 50–60 | 50–60 | 70 | 35–50 |
| உருளைக்கிழங்கு | 90 | 90 | 80–90 | 80 | 80–90 | 100 | 80--100 |
| தேசிக்காய் | 90 | 80 | 90 | 60 | 100–120 | 80 | 80–100 |
| வல்லாரை | 20 | 20 | 20 | 20 | 30 | 20 | 10–15 |
| கறிமிளகாய் | 110 | 70 | 60–90 | 80 | 70–80 | 110 | 80–90 |
| இராசவள்ளி | 100 | – | 100 | 80 | 100–110 | 130 | 140--150 |

# கடலுணவுகளின் நேற்றைய நிலைவரம்

| | யாழ்ப் பாணம் | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித் துறை | மாதகல் |
|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 600 | 700 | 500 | 400 |
| நண்டு | 300 | 350 | 400 | 250 | 400 |
| கணவாய் | 500 | 500 | 600 | 500 | 400 |
| பாரை | 350 | 400 | 600 | 450 | 350 |
| சுறா | 500 | 500 | 600 | 550 | – |
| சீலா | 400 | 400 | 500 | 350 | 300 |
| விளை | 400 | 400 | 550 | 430 | 300 |
| முரல் | 350 | 350 | 500 | 350 | 270 |
| கும்பிளா | 400 | 300 | 550 | – | – |
| கிழாக்கன் | 300 | 400 | 500 | – | – |
| ஓரா | 300 | 350 | 400 | – | – |
| திரளி | 250 | 250 | 300 | 250 | – |
| நகரை | 250 | 250 | 400 | 300 | – |
| சூடை | 130 | 150 | 200 | – | 100 |
| ஒட்டி | 180 | 200 | 250 | 200 | – |
| திருக்கை | 150 | 350 | 200 | 250 | 130 |
| பாலை | 300 | 300 | 350 | 250 | – |
| வாழை | 180 | 150 | 250 | 300 | 200 |
| கொய் | 80 | 150 | 80 | 100 | – |
| மதனம் | 300 | 250 | 350 | 300 | 250 |

# விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



## தைரியசாலியாய் இரு

உலக இயந்திரத்தின் சக்கரங்களில் இருந்து தப்பி ஓட நினைக்காதே. வாழ்வின் சூட்சுமம் அறிந்து கொள்ள முயற்சி செய். சண்டையிடுவதாலும், பிறரைக் குறை சொல்வதாலும் உலகில் ஒரு நன்மையும் உண்டாகப் போவதில்லை.

சுயநலமின்மையே நல்லொழுக்கம். இது தான் ஒழுக்கத்திற்குரிய ஒரே இலக்கணம். கோழை தான் பாவம் செய்கிறான். தைரியசாலியோ ஒருபோதும் பாவம் செய்வதில்லை. உலகைப் பற்றிய கவலை வேண்டாம். முதலில் உன் வாழ்வை நெறிப்படுத்தி மனத் தூய்மையுடன் இரு.

## நாளை

**சித்திரை-02**
**புதன்கிழமை**
**15.04.2015**

திதி: ஏகாதசி மு.ப.10.19 வரை
நட்சத்திரம்: சதயம் மு.இ.10.14 வரை
சுபநேரம்: 04.34–06.04 வரை
இராகுகாலம்: 12.04–01.34 வரை

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 1 | 2 | 6 | 9 | 4 | | | |
| | 3 | 8 | 1 | | | | | |
| 9 | | | | | | | 1 | 7 |
| | 6 | 7 | 5 | 8 | 3 | | | |
| 3 | | | 9 | | 2 | | | 1 |
| | | | 4 | 7 | 1 | 3 | 8 | |
| 4 | 9 | | | | | | | 3 |
| | | | | | 9 | 1 | 6 | |
| | | | 3 | 1 | 8 | 9 | 4 | |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற் படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக் கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண் டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப் படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 2 | 3 | 7 | 8 | 6 | 1 | 9 | 5 |
| 8 | 9 | 7 | 1 | 2 | 5 | 6 | 4 | 3 |
| 6 | 5 | 1 | 9 | 4 | 3 | 2 | 7 | 8 |
| 3 | 1 | 4 | 8 | 7 | 9 | 5 | 2 | 6 |
| 2 | 7 | 5 | 3 | 6 | 1 | 4 | 8 | 9 |
| 9 | 6 | 8 | 4 | 5 | 2 | 7 | 3 | 1 |
| 7 | 3 | 9 | 5 | 1 | 4 | 8 | 6 | 2 |
| 5 | 8 | 6 | 2 | 9 | 7 | 3 | 1 | 4 |
| 1 | 4 | 2 | 6 | 3 | 8 | 9 | 5 | 7 |

# கத்தரிக்காயின் மருத்துவ பயன்கள்

எடையை குறைக்க விரும்புபவர்களுக்கு ஏற்ற கத்தரிக்காயில் குறைந்த கலோரியும், அதிக சத்துக்களும் அடங்கியுள்ளன. கத்தரிக்காயில் போலேட், மக்னீசியம், பொட்டாசியம், விற்றமின் பி3, விற்றமின் பி6, மற்றும் பீட்டா கரோட்டீன்கள் நிறைந்துள்ளன. 100 கிராம் கத்தரிக்காய் உடலுக்கு 24 கலோரிகள் ஆற்றல் தருகிறது. 9 சதவீதம் நார்ச்சத்து உள்ளது. கத்தரிக்காயில் விற்றமின் சி குறைவாக இருப்பதால், அது ஒரு சிறந்த வைரஸ் மற்றும் பாக்டீரியா எதிர்ப்பானாக செயல்படுகிறது. கத்தரிக்காயில் பைட்டோ நியூட்ரி



யண்ட்டுகள் இரத்தத்தில் உள்ள கொலஸ்ட்ராலைக் குறைத்து இரத்த ஓட்டம் இதயத்தில் சீராகப் பாய உதவுகின்றன. மேலும் இந்த நியூட்ரியண்ட்டுகள் மூளையில் உள்ள நரம்பு மண்டலங்களைப் பாதுகாப்பதில் முக்கியப் பங்கு வகிக்கின்றன. ஞாபக சக்தியை கூர்மையாக வைத்திருக்கவும் கத்தரிக்காய் உதவுகிறது. கத்தரிக்காயில் நீர்ச்சத்து அதிகம் உள்ளது. இரத்தத்தில் உள்ள சீனியின் அளவைக் கட்டுப்படுத்துகிறது. இதில் உள்ள மெட்டபாலிசம் ஸ்பைக் கலோரிகளை எரிக்க வல்லது. எனவே கத்தரிக்காயை அதிகம் சாப்பிட்டால் உடல் எடை தானாகவே குறையும். அடர்நீலம் அல்லது பழுப்பு நிற கத்தரிக்காயின் தோலில் அந்தோசயானின் எனப்படும் பிளேவனாய்ட் உள்ளது. இது உடல் ஆரோக்கியத்தை அதிகப்படுத்தும் நோய் எதிர்ப்பொருளாகும். புற்றுநோய், முதுமை, நரம்புவியாதிகள், உடல் எரிச்சல் ஆகியவற்றுக்கு எதிர்ப்புத்தன்மை வழங்கும். மேலும், பைல்ஸ் என்னும் மூல வியாதிகளைப் போக்குவதற்கு கத்தரிக்காயின் பச்சைக் காம்புகள் பயன்படுகின்றன.

# சாப்பிட வேண்டிய காய்கறிகள்

அன்றாடம் வாழ்வில் காய்கறிகளை சேர்த்துக்கொண்டால் ஆரோக்கியமான வாழ்வு நிச்சயம். அவ்வாறு காய்கறிகளை உணவில் சேர்த்துக்கொள்ளும் நாம் அதன் பயன்களை அறிந்துகொள்வது நல்லது.

## வாழைக்காய்



இரும்புச்சத்து, பொஸ்பரஸ், விற்றமின் பி, சி, சத்துக்கள் அதிகம் உள்ளது. வாயுவைத் தூண்டும் குணமுள்ளதால் இதைச் சமைக்கும் போது அதிகளவில் பூண்டு சேர்த்துக்கொள்வது நல்லது. மலச்சிக்கலைத் தீர்க்கும்.

## மாங்காய்

மாங்காயில் நார்ச்சத்து, விற்றமின் ஏ உள்ளது. சரும நோய், வயிற்றுவலி உள்ளவர்கள் சாப்பிடக்கூடாது. ஏனெனில் இது சூட்டைக் கிளப்பும். மாங்காய் சாப்பிட்டால் மலக்குடல்புற்றுநோய் வராமல் தடுக்கும். செரிமானத்தைத்தூண்டி மலக்குடலைச் சுத்தம் செய்யும், பசியைத் தூண்டும்.



# ஈராக்கில் நினைவுச் சின்னங்களை மீண்டும் அழிக்கும் தீவிரவாதிகள்

பாக்தாத்,ஏப்.14



ஈராக்கில் கைப்பற்றிய பகுதிகளை உள்ளடக்கி, ஐ.எஸ். தீவிரவாதிகள் தனி நாடு அமைத்துள்ளதால், அங்குள்ள பழங்காலச் சின்னங்களை அழித்து வருகின்றனர்.

மொசூல் அருகேயுள்ள நிம்ரூத் நகரில் கி.மு 2 ஆயிரத்து 500 வருடங்கள் பேணப்பட்டு வந்த பழங்கால அசிரியன் மன்னர்களின் நினைவுச் சின்னங்களை ஐ.எஸ்.தீவிரவாதிகள் அழித்துள்ளனர். இந்த நிலையில் மீண்டும் நிம்ரூத் நகரில் மீத முள்ள பழங்கால நினைவு சின்னங்களையும் ஐ.எஸ். தீவிரவாதிகள் அழித்துள்ளனர். அசிரியன் மன்னர்கள் கட்டிய கோவில்கள், வழிபாட்டுத் தலங்கள், கல்வெட்டுகள், கலைநயம் வாய்ந்த அரிய சிலைகள் போன்றவற்றையும், பல கட்டிடங்களையும் அடித்து உடைத்துள்ளனர். இதற்கிடையே இடித்து அகற்றப்படும் அரிய கலைப்பொருள்களை கள்ளச் சந்தையில் கூடுதல் விலைக்கு விற்கவும் ஐ.எஸ். தீவிரவாதிகள் திட்டமிட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. (14)

# ஜனாதிபதியை பதவி விலகக் கோரி பிரேசிலில் போராட்டம்




ரியோ டி ஜெனிரோ, ஏப்.14

பிரேஸிலில் ஜனாதிபதியைப் பதவியை விட்டு விலகக் கோரி ஆயிரக்கணக்கானோர் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். பிரேஸில் ஜனாதிபதி தில்மா ரூசெப் தனது பதவியைப் பயன்படுத்தி பல்வேறு தரப்பட்ட ஊழல்களில் ஈடுபட்டுள்ளமை தெரிய வந்துள்ளது. அவர் மேற்கொண்ட ஊழல்கள் வெளியாகி மக்களிடையே கடும் எதிர்ப்பை ஏற்படுத்தியுள்ளது. ஊழல் காரணமாக அவரைப் பதவி விலகக் கோரி ஏராளமானோர் ரியோ டி ஜெனிரோவில் போராட்டங்களை மேற்கொண்டனர். அதில் நாடு முழுவதும் ஜனாதிபதி குறித்து கருத்துக் கணிப்பு நடத்தப்பட்டது. அதில் பலர் ஜனாதிபதியைக் குற்ற விசாரணைக்கு உட்படுத்த வேண்டும் என்றும், அவரை உடனே பதவி விலக்க வேண்டும் என்றும் தெரிவித்துள்ளனர். அதைத் தொடர்ந்து அந்த நாட்டு மக்கள் ஜனாதிபதிக்கு எதிராகப் பெரும் போராட்டத்தில் ஈடுபட்டனர். போராட்டத்தில் அதிபருக்கு எதிராகக் கண்டனக் குரல்களை எழுப்பியும், பதாதைகளை ஏந்தியும் தங்களது எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

அந்தப் போராட்டத்தில் பத்தாயிரத்துக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். பிரேஸில் நாட்டில் சுமார் 64 சதவீத மக்கள் ஜனாதிபதியைப் பதவிவிலகுமாறு கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (14)

# 65 வயதுப் பாட்டி கர்ப்பம் 4 சிசுக்களை சுமக்கிறார் அவர்





ஜேர்மனியில் 13 குழந்தைகளைப் பெற்றெடுத்த 65 வயது மூதாட்டி மீண்டும் கர்ப்பமடைந்துள்ள சம்பவம் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது. ஜேர்மன் தலைநகர் பெர்லினில் அனிகிரிட்ரவுனிக் என்ற மூதாட்டி ஆங்கில ஆசிரியையாகப் பணியாற்றி வருகிறார்.

கடந்த 10 வருடங்களுக்கு முன்னர் கடைசிக் குழந்தையாக, பெண் குழந்தை ஒன்றைப் பெற்றெடுத்த அவருக்கு, ஏற்கனவே 13 குழந்தைகள் உள்ளனர். இந்த நிலையில் கடைசியாக பெற்ற பெண் குழந்தையின் விருப்பத்துக்கு இணங்க மீண்டும் அவர் கர்ப்பமாகியுள்ளார். தற்போது அவர் நான்கு குழந்தைகளை வயிற்றில் சுமந்து வருவதாக அந்த நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன. (14)

# பங்களாதேஷ் முழுவதும் பலத்த பாதுகாப்பு ஏற்பாடு



டாக்கா,ஏப்.14

போர்க் குற்றத்தில் ஈடுபட்ட குற்றத்துக்காக முக்கிய எதிர்க்கட்சியான ஜமாத்–இ–இஸ்லாமிய கட்சியின் தலைவர் தூக்கிலிடப்பட்டதை அடுத்து நிலவும் பதற்றமான சூழ்நிலையால் பங்களா தேஷ் முழுவதும் பலத்த பாதுகாப்பு ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சிறுபான்மையின மக்களை ஒடுக்கி வந்த பாகிஸ்தானில் இருந்து பிரிந்து பங்களாதேஷ் என்ற தனி நாட்டை உருவாக்குவதற்காக 1971 ஆம் ஆண்டு பங்களாதேஷில் உச்சக்கட்ட உள்நாட்டுப் போர் நடைபெற்றது. அந்தப் போரின் போது துன்புறுத்தப்பட்டு பலர் கொல்லப்பட்டனர். பங்களாதேஷின் முக்கிய எதிர்க்கட்சியான ஜமாத்–இ–இஸ்லாமி கட்சியின் தலைவர் முகமது கமாருஸமான் மீதும் போர்க்குற்ற வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

அந்த வழக்கில் முகமது கமாருஸமானுக்கு தூக்குத்தண்டனை விதித்து உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது. இந்த நிலையில் கடந்த சனிக்கிழமை முகமது கமாருஸமான் தூக்கிலிடப்பட்டார். அந்த நாட்டின் முக்கியமான எதிர்க்கட்சியின் தலைவர் ஒருவர் தூக்கிலிடப்பட்டதால் அங்கு பதற்றமான சூழ்நிலை நிலவுகிறது. ஏதேனும் வன்முறை அல்லது கலவரங்கள் ஏற்பட்டால் அதை எதிர்கொள்ளத் தயாராக இருப்பதாக அந்த நாட்டின் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (14)

# ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட ஹிலாரி கிளிண்டன் முடிவு

வொஷிங்டன்,ஏப்.14



2016 ஆம் ஆண்டு நடைபெறவிருக்கும் அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட முடிவு செய்துள்ளதாக ஹிலாரி கிளிண்டன் அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளார்.

தற்போது அமெரிக்க ஜனாதிபதியாக இருக்கும் ஒபாமாவின் பதவிக் காலம் அடுத்த வருடத்துடன் முடிவடையவுள்ளது. அமெரிக்காவில் ஒருவர் இருமுறைக்கு மேல் அதிபராக இருக்க முடியாது என்பதால் ஒபாமா ஜனாதிபதித் தேர்தலில் மீண்டும் போட்டியிட முடியாது.

ஒபாமாவுக்கு அடுத்ததாக அதிக செல்வாக்குடன் இருக்கும் முன்னாள் ஜனாதிபதி கிளிண்டனின் மனைவியும், அமெரிக்காவின் முன்னாள் வெளிவிவகார அமைச்சருமான ஹிலாரி கிளிண்டன் ஜனநாயகக் கட்சியின் சார்பில் ஜனாதிபதி வேட்பாளராகக் களமிறங்க முடிவு செய்துள்ளார். மேலும் அதற்கான பரப்புரையையும் அவர் தொடங்கியுள்ளார். அமெரிக்கன் என்ற விளம்பர வரிகளுடன் அவர் தமது தேர்தல் பரப்புரையை ஆரம்பிக்கவுள்ளார். அதன் முதல்படியாக தனது டெயாரில இணையத் தளத்தில் 2 நிமிட நேரம் செயற்படும் வீடியோவையும் பதிவேற்றம் செய்துள்ளார். (14)

# பதனீர் இறக்கும் தொழிலில் சாதனை படைக்கும் பெண்கள்

கேரளா,ஏப்.14



இந்தியாவில் கேரளா மாநிலம் அரச மற்றும் தனியார் துறைகளில் பெண்களை உள்வாங்கிப் பல சாதனைகளைப் புரிந்துள்ளது. அந்த வகையில் பதனீர் (நீரா) இறக்குவதிலும் கேரளப் பெண்கள் சாதனை படைத்து வருகின்றனர்.

அதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட 40 பேருக்கு பதனீர் இறக்குவது தொடர்பான பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன. முதலில் அந்தப் பெண்களுக்கு தென்னை மரங்களில் ஏறி வேலைசெய்ய வெட்கம், பயம் இருந்து வந்தது. ஆனாலும் வழங்கப்பட்ட பயிற்சியின் மூலம் பதனீர் இறக்கும் தொழிலில் அந்தப் பெண்கள் சாதனை படைத்துள்ளனர்.

அந்தப் பெண்கள் தென்னந்தோப்பில் நுழையும்போதே அவர்களை வேடிக்கை பார்க்கக் கூட்டமும் கூடிவிடும். இந்தத் தொழிலில் எங்களுக்குத் தேவையான வருமானம் உள்ளது. காலை, மாலை என இரண்டு நேரங்கள் மரம் ஏற வேண்டும். ஒரு லீற்றர் பதநீரா இறக்கிக் கொடுத்தால் 50 ரூபாய் கிடைக்கும். ஒருவர் ஒரு நாளைக்கு 10 முதல் 12 லீற்றர் வரை சேகரிப்போம். இருப்பினும் இதுவோர் ஆபத்தான தொழில் ஆகும். சில பாதுகாப்பு ஏற்பாடுகள் உள்ளதால் அதனை நாங்களும் விரும்பிச் செய்து வருகிறோம் என்று அந்தப் பெண்கள் பெருமையுடன் தெரிவித்துள்ளனர். (14)

# சோமாலியர்களை வெளியேற்ற வேண்டும் ஐ.நா.வுக்கு கென்யா வேண்டுகோள்

நைரோபி,ஏப்.14

சோமாலியா நாட்டில் கடந்த 1991 ஆம் ஆண்டு உள்நாட்டுப் போர் மூண்ட போது ஏராளமானவர்கள் அண்டை நாடுகளில் அகதிகளாகத் தஞ்சம் புகுந்துள்ளனர். அவ்வாறு அண்டை நாடான கென்யாவில் மட்டும் 6 லட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் அகதிகளாக வாழ்ந்து வருகிறார்கள்.

ஐக்கிய நாடுகள் சபையின் உதவியுடன் அந்த அகதிகள் முகாம்கள் பராமரிக்கப்படுகின்றன. இந்த நிலையில் தங்கள் நாட்டில் உள்ள அகதிகளை 3 மாத காலத்துக்குள் வெளியேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என கென்யா அரசு திடீரென ஐ.நா.வைக் கேட்டுக்கொண்டுள்ளது.

அதுகுறித்து அந்த நாட்டு துணைத் தலைவர் வில்லியம் ரூடோ வெளியிட்டுள்ள அறிக்கையில், கென்யாவில் உள்ள அகதிகளை 3 மாத காலத்துக்குள் வெளியேற்ற வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் சபையைக் கேட்டுக்கொண்டுள்ளோம். தவறும்பட்சத்தில் நாங்களாகவே அவர்களை வெளியேற்றுவோம் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

கென்யாவில் உள்ள பல்கலைக் கழகத்தில் கடந்த 2 ஆம் திகதி புகுந்த சோமாலியத் தீவிரவாதிகள் அங்கு இருந்த மாணவர்கள் உள்ளிட்ட 148 பேரைக் கொலை செய்தனர். அந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து கென்யா, சோமாலிய அகதிகளை வெளியேற்ற நடவடிக்கை எடுத்திருப்பது குறிப்பிடத்தக்கது. (14)

# காலநிலை மாற்றத்துக்கான புதிய ஒப்பந்தம்

கனடாவில் காலநிலை மாற்றத்துக்கு எதிராகச் செயற்படும் வகையில், ஒன்ராறியோவும், கியூபெக் மாகாணமும் புதிய ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திடவுள்ளன.

அந்தப் புதிய ஒப்பந்தமானது மாசு வெளிப்பாடு வணிகத் திட்டம், காபன் வாயு வெளியேற்றத்தைக் கட்டுப்படுத்தும் வகையில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. கியூபெக் மாகாண முதல்வருடன் இணைந்து ஒப்பந்தம் தொடர்பான உத்தியோகபூர்வ அறிவித்தல் விடுக்கப்படவுள்ளது. அதனைத் தொடர்ந்து அடுத்த வாரம் கனடாவின் ஏனைய மாகாண முதல்வர்களும் ஒன்ராறியோ மற்றும் கியூபெக் முதல்வர்களுடன் காலநிலை மாற்றம் தொடர்பான மாநாடொன்றில் கலந்துகொள்ளவுள்ளனர். (14)

# மண்கும்பான் வெள்ளைப்புற்ற
# தேர்த்திருவிழா சிறப்




## அருளாசிச் செய்தி



தீராத வினைகளெல்லாம் தீர்த்துவைக்கின்ற தனக்கு மேல் வேறு தலைவன் இல்லாத தனித்துவம் வாய்ந்த அருள்மிகு ஸ்ரீ வீரகத்தி விநாயகருக்கு புதிய முகவுத்தா எண்கோண வடிவத்தில் அழகுற அமைக்கப்பெற்ற தேரிலே அடியார்களின் வினைபோக்குவதற்காக யாழ். தீவகம் மண்கும்பான் வெள்ளைப் புற்றடியில் எழுந்தருளி வீற்றிருந்து அருள் பாலிக்கின்றார்.

மண்கும்பான் என்னும் மாபதியில் விக்கினங்கள் தீர்க்கும் விநாயகர் ஓங்காரரூபமாக மலர்ந்துள்ள மன்மத வருடப்பிறப்பில் அவ்வூர் மக்களுக்கு வரும் இடர் தீர்க்க புதிய தேரினிலே மாபவனி வருகின்றார்.

எல்லாம் வல்ல வீரகத்தி விநாயகப் பெருமான் மண்கும்பான் மக்கள் அனைவரும் சீரோடும் சிறப்போடும் வாழப் பிரார்த்திப்பதோடு நல்லைக் குருமணியின் பாதம் பணிந்து இறையருள் சுரந்து உலகம் செழிப்புற்றோங்க ஆசி வழங்கி வாழ்த்துகின்றேன்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர
ஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்.

## ஆலயத்தின் வரலாற்றுச் சிறப்பு

மண் கும்பான்வெள்ளைப் புற்றடியில் வீற்றிருந்து அடியார்க்கு அருள் பாலிக்கும் விக்கின விநாயகர் மன்மத வருடப் பிறப்புச் சித்திரை முதலாம் நாள் இன்று (14.04.2015) எண்கோண முக பத்திரத் தேரேறி வருகிறார். அந்தத் தேர்த் திருவிழாவை முன்னிட்டு வெளிவரும் இம் மலரில் இவ் வாலயத்தின் தல வரலாற்றைக் குறிப்பிடுவதில் மகிழ்ச்சி அடைகிறேன். பண்டைக் காலத் துறைமுகமாக விளங்கியது ஊர்காவற்றுறை. அத்துறை வழியாக வைத்திலிங்கச் செட்டியார் என்பவர் பல விக்கிரகங்களை யாழ்ப்பாணத்தில் கோயில் அமைக்க எடுத்து வந்தார். வரும் வழியில் களைப்பு மிகுதியால் ஓய்வு எடுப்பதற்காகக் குறித்த இவ் வெள்ளைப் புற்றடியில் வைத்துள்ளார். களைப்பாறி மீண்டும் செல்வதற்கு விக்கிரகங்களை எடுத்த போது எம் பிள்ளையாரை தூக்க முடியவில்லை. அதனால் அவ் இடத்திலேயே விட்டு காவோலையால் நிழல் அமைத்து ஊரில் உள்ளவர்களைப் பராமரிக்குமாறு கூறிச் சென்று விட்டார். அதன் பின்னர் ஊரவர்களாகிய எமது மூதாதையர் குடில் அமைத்து ஆலயமாக்கி வழிபட்டு வந்தார்கள். இவ்வாலயத்தின் தொன்மையை கோயில் பதிவேடு எடுத்துக் காட்டுகிறது. யாழ்ப்பாணம் கச்சேரியில் உள்ள 1769, 1832 ஆம் ஆண்டுப் பதிவேடுகளில் இவ் ஆலயம் பதியப்பட்டுள்ளமை ஆலயத்தின் பழைமையைப் பறைசாற்றுகின்றன. ஆலயம் அமைந்துள்ள காணி உறுதி விநாயகர் பெயரிலேயே தோம்பு இருப்பது பழைமையின் சான்றாகும். இவ்வாலயம் அமைந்துள்ள சூழல் அன்று வெள்ளை மணல் கும்பிகளாகக் காணப்பட்டன. அம் மணல் கும்பிகளில் எலிகளாலோ உடும்புகளாலோ புற்றுக்கள் எடுக்கப்பட்டிருக்கலாம். அப் புற்றுக்கள் வெள்ளை மணல் புற்றுகளாக இருந்ததனால் அச் சூழலில் அமைந்த இந்த ஆலயத்துக்கு "வெள்ளைப்புற்றடி ஸ்ரீ வீரகத்திப் பிள்ளையார்" என அடியார்கள் பெயரிட்டு அழைத்திருக்கலாம் எனக் கொள்ள இடமுண்டு.

ஓலைக் குடிலாக இருந்த ஆலயம் கற்களால் அமைத்து கிணறுகளும் கட்டி உள் வீதியைச் சுற்றி ஏறக்குறைய இரண்டு அடி அகலம் கொண்ட சுண்ணாம்பால் கட்டப்பட்ட மதில்களும் அமைந் திருந்தன. ஆலயத்தின்வளர்ச்சியில் சுப்பிரமணியம் வினாசித்தம்பி அவர்கள் சிறப்பு இடம் பெறுவார். மூலஸ்தானத்தையும் அதனை அடுத்த அர்த்த மண்டபத்தினையும் வெள்ளை வைரக்கல்லால் அமைத்து ஆலய வளர்ச்சிக்கு வித்திட்டார். 1951 ஆம் ஆண்டு கும்பாபிஷேக நிகழ்வு அனைவராலும் சிறப்பாகப் பேசப்பட்டு வந்தது. அதன் பின்னர் குறிப்பிடத்தக்க வளர்ச்சி வந்தனை வழிபடுவோர் சபை யால் ஆலய நிர்வாகம் 1982 ஆம் ஆண்டு பொறுப்பேற்கப்பட்ட பின்ன ராகும். தொடர்ந்து பல கும்பாபிஷேகங்கள் சிறப்பாக நடைபெற்றன. 1982 இல் இருந்து 1990 ஆம் ஆண்டு காலப்பகுதியை ஆலய வளர்ச்சியின் பொற்காலமாகக் குறிப்பிடலாம். உள்வீதி, மண்டபம் அமைக்கப்பட்டு தேர்த்திருவிழா ஆரம்பிக்கப்பட்டது இக் காலப் பகுதியாகும். அழகான சுற்று மதில்கள் கட்டப்பட்டன. ஆலய வளர்ச்சியின் அடுத்தகால கட்டம் இடப் பெயர்வின் பின் மீள்குடியேறிய 2000 ஆம் ஆண்டுக்குப் பின்னராகும். இக் காலப்பகுதியில் ஆலயத்தில் பாலஸ்தாபனம் செய்யப்பட்டு 2005 ஆம் ஆண்டு ஆவணி 21 இல் கும்பாபிஷே கம் சிறப்பாக நடைபெற்றது. நிலத்துக்கு றொராசோ போடப்பட்டது. வசந்த மண்டபமும் தேர் முட்டியும் அமைக்கப்பட்டு உள்வீதி மண்டபம் புதுப்பிக்கப்பட்டு , கலியாண மண்டபமும் அமைக்கப்பட்டு ஆலயம் புதுப்பொலிவுடன் சிறப்புற்று விளங்குகிறது. மன்மத வருடப் பிறப்பில் நடைபெறும் தேர்த் திருவிழாவை முன்னிட்டு உதயன் பத்திரிகையி[illegible] வெளிவரும் இம் மலரில் எனக்குத் தெரிந்த சில தகவல்களை தருவ[illegible] மகிழ்ச்சி அடைகிறேன்.

தி. விவேகானந்தராசா - தலைவர், மண்கும்பான் வெள்ளைப்புற்றடி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்தானம்.

★★★★★★★★★★★★★ ★★★★★★★★★★★★★★★★ விளம்பர அனுசரணையாளர்கள் ★★★★★★★★★★★★★★★★

நாம் நாடுவோம் தவறாமல் நாடுவோம்
உதயா ஜுவல்லர்ஸ்
81, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
கிளை:
நியூ உதயா ஜுவல்லர்ஸ்
91, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.

நியூ நகுலா
ஜுவல்லர்ஸ்
தங்கப்பவுண் நகை வியாபாரம்
45, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 222 4101

அருள்நிலா
நகை மாடம்
தங்கப்பவுண் நகை வியாபாரம்
22 கரட் தங்க நகைகள் ஓடர்க்கு உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்.
74, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 077 710 6042

நியூ பிரியங்கா
நகை மாளிகை
இல.69, யாழ். வீதி, கிளிநொச்சி, (கச்சேரி முன்பாக)
Tel. 021 228 5433, 077 7175059
கிளை. இல.68, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
Tel. 021 222 5644,

Yarl Maithely Jewellers
79Z Sea street
Colombo- 11
T.P. 011 2396239
Nagai Madam
மைதிலி நகைமாடம்
தங்கநகை வியாபாரி
89 V, Kasthuriyar Road, Jaffna. T.P. 021 222 7902

நியூ லலிதாஸ்
ஜுவல்லர்ஸ்
தங்கப்பவுண் நகை வியாபாரம்
111, மின்சார நிலைய வீதி,
30,32, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 222 4134

சுபலக்ஷ்மி ஜுவல்லறி
22 கரட் தங்க நகைகள் ஓடர்க்கு உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்.
93, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 221 7529

நதியா நகை மாடம்
இல.02, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 222 3479
உங்கள் ஆதரவுக்கு நன்றி!
கிளை. கௌசன் நகைமாடம்
இல. 129, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

நியூ லலிதா
ஜுவல்லர்ஸ்
133, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 222 4648

புதிய நவீனா
நகையகம்
Navena Nakaiyakam Genuine 22 Kt Jewellery
Manufacturing jewellery
191, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 077 7115 625

அம்பிகை ஜுவலர்ஸ்
தங்கப்பவுண் நகை வியாபாரம்
22 கரட் தங்க நகைகள் ஓடருக்கு உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்
T.P. 021 222 2538
34 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

அருள் விநாயகர் மோட்டோர்ஸ்
இல. 108, ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம்
கிளை : இல. 262, கண்டி வீதி, சாவகச்சேரி.
அருள் விநாயகர் றேடேர்ஸ்
இல. 106, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
222 5558

கந்தவேலன்
றேடர்ஸ்
110, Stanley Road, Jaffna
T.P : 021 2222822,
Fax : 021 222 4496

பாலவிநாயகர்
மோட்டோர்ஸ்
NO. 8, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

ஹ
ரே
71, ஸ்ரா
யாழ்ப்

நிஜானந்தா ஜுவல்லறி
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
Dealers in 22 ct, Gold, Jewelleries

விசேட மேளக்கச்சேரி அனுசர
தேர்திருவிழா உபயகாரரும் கை.கணேசய

# ...றடி ஸ்ரீ வீரகத்தி விநாயகர்

...30 மணிக்கு வசந்தமண்டப பூசையைத் தொடர்ந்து
...தேரில் முற்பகல் 10.00 மணிக்கு ஆரோகணிப்பார்



## ...ப்பிதழ் – 14.04.2015

### மகோற்சவ குருவின் அருளாசியுரை

சிவபூமி என விளங்கும் இலங்கை மணித் திருநாட்டின் வடபால் அமைந்த மண்கும் பான் வெள்ளைப் புற்றடி என்னும் பதியில் எழுந்த ருளி அடியவர்களின் இடர் களைக் களைந்து அருள் பாலித்துக் கொண்டு இருக்கும் ஸ்ரீ வீரகத்தி விநாயகப் பெருமானின் திவ்விய மான மகோற்சவ விழா வில் சர்வமங் கலம் பொருந்திய மன்மத வருடப் பிறப்பான இன்று விக்கினங்களைத் தீர்க்கும் விநாயகப் பெருமான் அழகிய தேரில் ஆரோகணித்து மஹா ராஜவீதியில் வலம் வந்து அருள் பாலிக்கின்ற சுப வேளையில் ஆகமங்கள் கூறுகின்ற வகையில் அடியவர்களின் அனைத்துவித விருப்பங்களும் நிறைவேறவும் நீண்ட ஆயுள் பெறவும் லக்ஷ்மி கடாட்ஷம் கிடைக்கவும் பக்திநெறி வளரவும் விநாயகப் பெருமானின் பாதம் பணிந்து அருளாசி கூறு கின்றேன்.

"கணேச உபாசகர்", "சிவானுபூதி"
சிவஸ்ரீ ச. ஞானசுந்தரக் குருக்கள்
மஹா கணபதிப்பிள்ளையார் கோவில் சித்தன்கேணி

### "வேழமுகத்து விநாயகனைத் தொழ வாழ்வு மிகுந்து வரும்"

மன்மத வருஷத்திலே தேரேறி அருள் பாலிக்கும் மண்கும்பான் வெள்ளைப் புற்றடி ஸ்ரீ வீரகத்தி விநாயகப் பெருமானின் திருத்தாள்களைப் பணிந்து மலரும் ஜயவருஷம் அனைவருக்கும் வாழ்வில் நலம் பெருக்க வேண்டுமென பிரார்த்திக்கின்றோம். "கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்பது சான்றோர் வாக்கு. அதேபோல் "ஆறு இல்லா ஊருக்கு அழகு பாழ்" என்பார்கள். அதேபோல் சப்த தீவுகளுக்குப் பயணம் மேற்கொள்வோர் அனைவருக்கும் வெள்ளைப் புற்றடி விநாயகனை வழிபாடியற்றிச் செல்லும் மரபு நீளவளர் கின்றது.

மேலும் பெருமானின் தேரோட்டம் வருடப் பிறப்பன்றே நடைபெறு கின்றது. இத் தினத்தில் நாமும் விநாயகரை எண்ணி வழிபாடியற்றி வாழ் வாமாக..

[illegible]


நியூ மைதிலி
தரம் வாய்ந்த
தங்க நகைகளை
ஓடர் செய்து
பெற்றுக்கொள்ளலாம்
38, 40, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

சிறி மதனா
நகை மாளிகை
தங்கப்பவுண் நகை
வியாபாரம்
ஓடர் நகைகள் 22 கரட்டில் தரமான
தங்கத்தில் செய்து கொடுக்கப்படும்.
இல. 155/M கஸ்தூரியார்
வீதி,யாழ்ப்பாணம்.
தொ.பே 021 222 7772

புதிய நதியா நகை மாடம்
உங்கள் ஓடர் நகைகளை குறித்த
தவணையில் நாகரிகமான டிசைன்களில்
உத்தரவாதத்துடன் செய்து தரப்படும்
புதிய நதியா நகை மாடம்
103,73 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P : 021 2223261,
021 2228397

சன் ரான்ஸ்போட்
லொறி மற்றும்
வட்டா (TATA)
வாடகைக்குண்டு.
151, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P. 077 959 5142
077 345 5124

...ரன்
ரேடர்ஸ்
71, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்

லலிதா ஜுவல்லர்ஸ்
தங்கப்பவுண் நகை வியாபாரம்
Lalitha Jewellers
75, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P : 021 2222833


...சரணையாளர்
...சயா குடும்பத்தினரும்.





# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** எதிர்வரும் பிரச்சினைகளை நண்பர்களின் உதவியால் சமாளிப்பீர்கள். உங்களின் செல்வாக்கு உயரும். பொறுமையுடனும் நடந்து கொள்வீர்கள். உற்றார். உறவினர்கள் உங்கள் தயவை நாடி வருவர்.

**இடபம்:** தொழிலில் மாற்றம் செய்ய முயற்சி செய்து கொண்டிருப்பவர்களுக்கு நல்ல புதிய மாற்று வழிகள் புலப்படும். புதிய பொறுப்புகளை எதிர்பார்த்துக் கொண்டு இருந்தவர்களுக்கு நல்ல தகவல்கள் வந்துசேரும்.

**மிதுனம்:** சகோதர சகோதரர்களின் கஷ்டங்களைப் புரிந்து கொண்டு தக்க ஆலோசனைகளையும் வழங்குவீர்கள். உங்களுக்கென்று ஒருதலை பாணியை வகுத்துக் கொண்டு செயற்படுவீர்கள்.

**கடகம்:** உடலுழைப்புக்கு முக்கியத்துவம் கொடுத்து உழைப்பீர்கள். சமூகத்தில் பிரபலமானவர்களைச் சந்திப்பீர் கள். புதிய விடயங்களை கற்றுக் கொள்வீர்கள். உங்களின் யுக்திகள் வெளியுலகுக்குத் தெரியவரும்.

**சிங்கம்:** சிறந்தவர்களைத் தேர்ந்தெடுத்து நட்புக் கொள்வீர்கள். குடும்பத்தில் திருமணம் போன்ற சுப நிகழ்ச்சிகளையும் நடத்தி மகிழ்வீர்கள். இல்லத்திற்குத் தேவையான நவீன உபகரணங்களையும் வாங்குவீர்கள்.

**கன்னி:** சகோதர சகோதரிகளிடம் பிரச்சினைகளை பேசித் தீர்த்துக் கொள்வீர்கள். செய்ய வேண்டிய வேலை களைச் சரியாக முன்னுரிமை கொடுத்து முடிக்கும் திறனைப் பெறுவீர்கள்.

**துலாம்:** அலுவலகத்தில் உள்ள எதிர்ப்புகளைச் சாமர்த் தியமாகச் சமாளிப்பீர்கள். திட்டமிட்ட வேலைகளை சிறிது காலதாமதத்திற்குப்பிறகு நல்லபடியாக முடித்து விடுவீர்கள்.

**விருச்சிகம்:** பதவி உயர்வு கிடைக்கும். வருமானம் சீராகவே இருக்கும். புதிய அலுவலகப் பயிற்சிகளும் கிடைக்கும். வியாபாரிகளுக்கு புதிய தொழில் தொடங்கு வதற்கான வாய்ப்புகள் உருவாகும்.

**தனுசு:** கூட்டாளிகள் உங்களுக்கு ஆதரவு கொடுப்பார் கள். சமூகத்தில் உங்கள் மதிப்பு மரியாதை உயரும். புதிய முயற்சிகளை திடத்துடன் செயற்படுத்துவீர்கள். மேலிடத் தின் ஆதரவு இருப்பதால் புதிய பதவிகள் தேடிவரும்.

**மகரம்:** பிடிவாதங்களைத் தளர்த்திக் கொண்டு உழைக் கவும். இதனால் உங்கள் புகழும் செல்வாக்கும் உயரும். எதிர்க்கருத்து கொண்டவர்களிடம் கூட ஒற்றுமை ஏற்படும். சமூகத்தில் மதிப்பும் மரியாதையும் அதிகரிக்கும்.

**கும்பம்:** சக கலைஞர்களின் அபிமானத்தைப் பெறுவார் கள். இருப்பினும் தொழிலில் போட்டி இருப்பதால் அதிக கவனத்துடன் உழைத்து விருதுகளையும் பாராட்டு களையும் பெறுவீர்கள்.

**மீனம்:** உங்களின் அந்தஸ்து உயரும். குடும்பத்தினரிடம் ஒற்றுமையோடு நடந்து கொள்வீர்கள். ஆடை ஆபர ணங்களை வாங்குவீர்கள். உடன் பிறந்தோரிடமிருந்து எதிர்பார்த்த ஆதரவையும் உதவிகளையும் பெறுவீர்கள்.

# ரிலாக்ஸா வாசியுங்க...



புதிதாக பதவிக்கு வந்த ஓர் அமைச்சருக்கு பெரிய தொழில் அதிபர் விருந்து வைத்தார்.

தனது தொழிற்சாலையில் தயாரான உயர்ந்த கார் ஒன்றை அவருக்கு அன்பளிப்பாகக் கொடுக்க முன் வந்தார். உடனே அமைச்சர், 'இது ஊழலுக்கு வழி வகுக்கும். நான் என்னுடைய பதவி காலத்திலேயே எதையுமே இலவசமாக வாங்குவதில்லை என்று முடிவு செய்துள்ளேன்' என்றார்

தொழில் அதிபர் உடனே 'சரி, அப்படி நீங்கள் உறுதியாக இருந்தால் இந்தக் காரை இலவசமாகப் பெற்றுக்கொள்ள வேண்டாம். இந்தக் காரின் விலை ஒரு ரூபாய். ஒரு ரூபாய் கொடுத்துவிட்டு இந்தக் காரை வாங்கிக் கொள்ளுங்கள்' என்றார்.

உடனே அமைச்சர், 'ரொம்ப சந்தோசம்' என்று சொல்லிக் கொண்டே பையிலிருந்து ஒரு பத்து ரூபாய் நோட்டை எடுத்து அவரிடம் கொடுத்து, 'அப்படியானால் எனக்கு பத்து கார் கொடுங்கள்' என்றார்.

தொழில் அதிபரே அசந்து விட்டார். அரசியல்வாதியா, கொக்கா?

பெற்றோர்களால்
வாங்கி
கொடுக்கப்படும்
ஆபத்தான கருவிகள்...
வயசு பையனுக்கு
டூவீலரும்...
வயசு பொண்ணுக்கு
ஸ்மார்ட் போனும்...






# மலாலாவின் பெயரில் எரிகல்

பாகிஸ்தானில் பெண் கல்விக்காகப் போராடி, தலிபான்களின் தாக்குதலுக்குள்ளான நிலையில் உயிர் பிழைத்த, நோபல் பரிசு பெற்ற மலாலாவின் பெயரை எரிகல் ஒன்றுக்கு நாசா விஞ்ஞானி ஆமி மைன்ஸர் சூட்டியுள்ளார்.

விண்ணில் புதிதாக கண்டுபிடிக்கப்பட்ட '316201' என்ற எரிகல்லுக்கு மலாலாவின் பெயரை அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி அமைப்பான நாசாவின் ஜெட் உந்துவிசை ஆய்வுக்கூட வானியல் ஆராய்ச்சி விஞ்ஞானி ஆமி மைன் ஸர் சூட்டியுள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறுகையில்: எரிகல்லுக்கு மலாலாவின் பெயரைச் சூட்டியிருப்பது மிகுந்த மரியாதைக்குரியதாகும். ஏற்கெனவே எத்தனையோ எரிகற்களுக்கு பெயர் சூட்டியிருந்தாலும் பெண்களின் பெயர்களை சூட்டியதில்லை என்பதை எனது சக விஞ்ஞானி டாக்டர் கேரி நியூஜென்ட் நினைவுபடுத்தினார். அதைத் தொடர்ந்தே செவ்வாய், வியாழன் கிரகங்களுக்கு இடையே நான் கண்டுபிடித்துள்ள எரிகல்லுக்கு மலாலாவின் பெயரை சூட்டியுள்ளேன். இந்த எரிகல், சூரியனை 5.5 ஆண்டுகளுக்கு ஒரு முறை சுற்றி வரும் என்றார்.

# ஸ்கானிங் தொலைபேசி

விண்டோஸ் கைத்தொலைபேசியை மட்டும் நம்பியிருந்தால் போதாது என்ற முடிவுக்கு மைக்ரோசொப்ட் நிறுவனம் வந்து விட்டது. அதுதான் தனது பிரபலமான செயலிகளில் ஒன்றான 'ஓபிஸ் லென்ஸை' ஐபோன் மற்றும் அண்ட்ரொய்ட் கைத்தொலைபேசிகளுக்கு கொண்டு வந்துள்ளது.



அடிப்படையில் இந்தச் செயலி ஸ்மார்ட் போன் கமரா வசதியைக் கொண்டு அதை ஸ்கானராக மாற்ற வழிசெய்கிறது. விசிட்டிங் கார்டில் தொடங்கி, பல முக்கிய ஆவணங்களை இதில் ஸ்கான் செய்து சேமித்துக் கொள்ளலாம்.

ஏற்கெனவே விண்டோஸ் கைத்தொலைபேசிகளில் செயல்படும் இந்தச் செயலியை இப்போது ஐபோன் மற்றும் அண்ட்ரொய்ட் கைத்தொலைபேசிகளுக்கும் விரிவுபடுத்தியுள்ளது.

ஆவணங்களை ஸ்கான் செய்வதோடு அவற்றை மேலும் எடிட் செய்து மேம்படுத்தும் வசதியும் இருக்கிறது. ஸ்கான் செய்யும் படத்தை வேர்ட் கோப்பாக, பிடிஎப் கோப்பாக அல்லது பவர்பொயிண்டுக்கு ஏற்ற வடிவிலோ மாற்றிக் கொள்ளலாம்.

# அமீர்கானை அழவைத்த மார்கரிதா




பலதிரைப்பட விழாக்களில் திரையிடப்பட்டு, பார்வையாளர்களை பரவசத்தில் ஆழ்த்தி, சிறந்த நடிகை உட்பட பல சர்வதேச விருதுகளை குவித்துள்ள படம் தான் 'மார்கரிதா வித் எ ஸ்ட்ரா'. உடல் வளர்ச்சி குன்றியதால் சக்கர நாற்காலியிலேயே வாழ்ந்து வரும் இளம் பெண்ணின் வாழ்க்கையை துளியும் சினிமாத்தனமின்றி வெகு இயல்பாக சித்திரித்துள்ள படம் தான் மார்கரிதா.

இதில் நடித்துள்ள கல்கி கொச்லின் சக்கர நாற்காலியில் முடங்கியிருக்கும் பெண்ணின் மன உணர்வுகளை மிக நுட்பமாக பிரதிபலித்துள்ளார். அவரது தாயாக தமிழ் சினிமாவின் முன்னணி நடிகை ரேவதி நடித்துள்ளார்.

பொலிவூட் சூப்பர் ஸ்டார் அமிதாப் பச்சன், இயக்குநர் ஷோனாலி உட்பட பலர் கலந்து கொண்ட இந்த திரையிடலில், நடிகை கல்கிக்கு பக்கத்து சீட்டிலேயே அமர்ந்து இந்தப் படத்தை அமீர்கான் பார்த்துள்ளார்.

திரைப்படம் முடிந்து விளக்குகள் போடப்பட்ட போது தான் அமீர்கான், தன்னால் கட்டுப்படுத்த முடியாமல் அழுது கொண்டிருந்தது கல்கிக்கு தெரிய வந்தது. அழுது கொண்டே 'கல்கி இந்த படத்தை மக்களிடம் கொண்டு செல்வதற்காக நான் என்ன செய்ய வேண்டும்?' என்று அன்புடன் கேட்டுக்கொண்ட அமீர்கான், இது அனைவரும் பார்க்க வேண்டிய படம் இந்த படத்திற்காக நான் என்ன வேண்டுமானாலும் செய்கிறேன் என்று நெகிழ்ச்சியுடன் தெரிவித்தார்.



# பன்றித்தலைச்சி கண்ணகை அம்மன்

## ஆலய பங்குனித் திங்கள் உற்சவம்

அருணன், மட்டுவில்

இந்தப் புனித ஆலயம் தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவில் மட்டுவில் பகுதியில் அமைந்துள்ளது.

ஐரோப்பியர் ஆட்சிக் காலத்தில் மட்டுவில் என்ற பெயர் நிலை பெற்றுள்ளது. இந்தப் பகுதி 'மட்டுவாள்' என்ற பெயராலும் அழைக்கப்பட்டுள்ளது.

அம்மன் அருள்

மட்டுவில் பதியில் அமர்ந்து அருள் சுரக்கும் வாரி இறைக்கும் அழகுத் தெய்வம் தான் கண்ணகித் தெய்வமான அம்மனாகும். அன்றைய நாள்களில் இந்த இடத்தில் பனை ஓலையால் வேய்ந்த குடிலில் அமர்ந்து அருள் வழங்கியவள் மட்டுவில் அன்னை. தன்னைப் பூசித்து வணங்கும் அடியவர்களுக்கு அருளை அள்ளி வழங்கும் தெய்வம் அம்மனாகும். வேய்ந்த குடிலில் அமர்ந்த அன்னைக்கு விளக்கேற்றி வழிபட்டனர்.

அந்த நாள்களில் பூசித்து வழிபட்ட பக்தனொருவன் அவன் விவசாயியும் கூட. தனது வயலில் உள்ள பயிர்களை மேய்ந்த பசு மாடு ஒன்றை கையில் அக்கப்பட்ட பொருளால் எறிந்து துரத்திய சமயம் அந்த பொருள் மாட்டின் தலையில் பட்டதால் அது நிலை தடுமாறி வீழ்ந்து இறந்து விடுகிறது. இதனைக் கண்ட ஏழை விவசாயி விபரீதம் ஏற்படப் போகின்றமையை உணர்ந்து அதனை மறைக்க மண்ணில் குழி தோண்டிப் புதைத்து விட்டான். இந்த விடயமானது அந்த நாள்களில் நீதியை நிலை நாட்டும் பஞ்சாயத்து சபைக்கு விளக்கத்துக்கு எடுக்கப்பட்டது. அந்த விவசாயிக்கு எதிராக விசாரணைக்கு வழக்கு தொடரப்பட்டது. விவசாயி விசாரணைக்கு அழைக்கப்பட்டான்.

இதனால் பீதியடைந்த விவசாயி அன்னையிடம் ஓடிச் சென்று மன்றாடி வணங்கினான். கண்ணீர் விட்டு அழுது வேண்டினான். அவ்வேளையில் பஞ்சாயத்து சபையினர் சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டனர். பசு மாடு புதைத்த இடம் தோண்டப்பட்டது. என்ன அற்புதம் பசுமாடு புதைத்த இடத்தில் பன்றித் தலையுடன் கூடிய உருவம் வெளிப்பட்டது. இதனால் பஞ்சாயத்து சபையினர் செய்வதறியாது திகைப்படைந்தனர். ஏழை விவசாயி தன் மீது சுமத்தப்பட்ட குற்றத்திலிருந்து மீட்சி பெற்றான். அம்மனிடம் ஓடிச் சென்று கண்ணீர் பெருக வழிபட்டான். அன்றிலிருந்து அம்பாள் பன்றித்தலைச்சி கண்ணகை அம்மன் என அழைக்கப்பட்டு மக்களால் வழிபடப்பட்டு வருகின்றாள். அபயம் வேண்டி வருபவர்களைக் காத்து அருள் வழங்குபவள் கண்ணகை அம்மனாவாள்.

இந்த ஆலயச் சிறப்பு தனித்துவமானது. இங்கு வருபவர்கள் இங்குள்ள தீர்த்தக் கேணியில் நீராடிச் செல்வர். அத்துடன் தாங்களே பொங்கல் செய்தும் அன்னதானம் செய்தும் பலகாரப் பூசைகள் செய்தும், சர்க்கரைப் பொங்கல் செய்தும் தாங்களே அம்பாளுக்கு படைத்து தாமும் உண்டு பிறருக்கும் கொடுத்தும் ஆனந்தமடைவர். இங்கு வயலும் வயல் சார்ந்த பிரதேசமாகவும் உள்ள பகுதி சுற்று முற்றும் பச்சைப் பசேல் என இருக்கும். அருவி வெல் அறுவடை முடிந்ததும் விவசாயிகள் கத்தரிச் செய்கைகளில் ஈடுபடுவர். பங்குனித் திங்களுக்கும் மூட்டிக் கத்தரிக்காய்க்கும் தொடர்புண்டு. பொங்கல் செய்பவர்கள் கத்தரிக்காய் சமைத்து படைப்பது மரபாகிவிட்டது. வீடு செல்லும் போது கத்தரிக்காயுடன் செல்வதும் வழமையாகிவிட்டது. பொங்கலானது அதிகாலை தொடக்கம் பிற்பகல் வரை ஆலய வளாகத்தில் தொடர்ந்தும் நடைபெறும்.

இந்த நாள்களில் காலையிலும் மாலையிலும் ஆலயத்தில் அம்பாளின் வீதி உலா இடம்பெறும். இந்த உற்சவத்திலும் பெருமளவு பக்தர்கள் கலந்து வழிபடுவர்.

ஆலய மஹோற்சவம் மார்கழி மாத திருவெம்பாவைக் காலமான பத்துத் தினங்களிலும் நடைபெறுவதும் குறிப்பிடத்தக்கது.

தற்பொழுது ஆலயத்தில் கோபுரம் சிற்பவேலைகளுடன் மூன்று தளம் கொண்டதாக அமைக்கப்பட்டுள்ளது. அத்துடன் முகப்பில் சிற்ப வேலைகளுடன் மணி மண்டபம் அமைக்கப்பட்டுள்ளதும் ஆலயத்துக்குச் சிறப்பை அளிக்கின்றது.

எனவே நாம் எல்லோரும் அன்னையின் சந்நிதானம் சென்று அன்னை கண்ணகையின் அருள் பெறுவோமாக.

அன்னையே முதலிற்காணும் அருட்பெருங்கடவுளாவாள்
அன்னையே அன்பின் காட்சி அறிவினையூட்டும் தெய்வம்
அனையே உயிருனக்கு ஆதரவளித்துக்காப்பாள்
அன்னையே என்றும் நம்முள் அகங்களித்திருப்பாள் நன்றே.

“மட்டுவில் பதியில் அமர்ந்து அருள் சுரக்கும் வாரி இறைக்கும் அழகுத் தெய்வம் தான் கண்ணகித் தெய்வமான அம்மனா கும். அன்றைய நாள்களில் இந்த இடத்தில் பனை ஓலையால் வேய்ந்த குடிலில் அமர்ந்து அருள் வழங்கியவள் மட்டுவில் அன்னை. தன்னைப் பூசித்து வணங்கும் அடியவர்களுக்கு அருளை அள்ளி வழங்கும் தெய்வம் அம்மனாகும்.

# இளைஞர்களின் மனம் கவர்ந்த வர்த்தக நாமமாக மஞ்சி தெரிவு


சிலோன் பிஸ்கட்ஸ் லிமிடெட் (சிபிஎல்) நிறுவனத்தின் முன்னணி வர்த்தகநாமமான மஞ்சி ஆனது அண்மையில் கொழும்பில் இடம்பெற்ற 2015 சிலிம் நீல்சன் மக்கள் விருது வழங்கும் நிகழ்வில் மீண்டும் ஒரு முறை இளைஞர்களின் மனம் கவர்ந்த வருடத்திற்கான எவ்.எம்.சி.ஜி வர்த்தகநாமமாக தெரிவு செய்யப்பட்டுள்ளது. இந்த விருதானது மஞ்சி நாமத்தின் வலுவான கவனம் மற்றும் நாடு முழுவதுமுள்ள இளைஞர்களுடனான நெருங்கிய இணைப்பினை பிரதிபலிப்பதாக அமைந்துள்ளது.

இலங்கை சந்தைப்படுத்தல் கல்வியகம் மற்றும் முன்னணி ஆராய்ச்சி நிறுவனமான நீல்சன் இணைந்து வருடாந்தம் மேற்கொள்ளும் இந்த சிலிம் நீல்சன் மக்கள் விருதுகள் நாடு முழுவதிலும் மேற்கொள்ளப்படும் பரந்துபட்ட ஆராய்ச்சிகளை அடிப்படையாக கொண்டது. இதன் போது சேகரிக்கப்பட்ட தரவுகளின் அடிப்படையில் நாட்டில் குறிப்பிட்ட தாக்கத்தை உண்டாக்கிய வர்த்தகநாமங்கள் தொடர்பான இலங்கையரின் உண்மையான எண்ணங்கள் வெளிப்படுத்தப்படுகின்றன.

மேலும் அதே நிகழ்வில் சுப்பர் கிறீம் கிறக்கர் இன் புதுமையான சுப்பர்மேன் தொலைக்காட்சி விளம்பரத்திற்காக வருடத்திற்கான மக்கள் விளம்பர விருதினையும் மஞ்சி தனதாக்கிக் கொண்டது.

இந்தப் பெருமைக்குரிய இரு விருதுகளையும் வென்றதையிட்டு நாம் மிகவும் பெருமையடைவதுடன், வருடத்திற்கான இளைஞர்களின் மனம் கவர்ந்த எவ்.எம்.சி.ஜி வர்த்தகநாமமாக தெரிவு செய்யப்பட்டமையானது எமது இளைஞர்களின் குரலினை பிரதிபலிக்கிறது' என சிலோன் பிஸ்கட்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் குழும பணிப்பாளரும், சந்தைப்படுத்தல் மற்றும் விற்பனைப் பிரிவின் தலைவருமான நந்தன விக்ரமகே தெரிவித்தார். 'எமது இளைஞர்கள் மஞ்சியுடன் நெருங்கிய இணைப்பினைக் கொண்டிருப்பதை நாம் அறிவோம். எம் மீது வைத்த நம்பிக்கை மற்றும் வாக்களிப்பு செயல்பாடுகளில் பங்குபற்றியமைக்காக அவர்களுக்கு எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்' என அவர் மேலும் தெரிவித்தார்.

'மஞ்சி வர்த்தகநாமத்தின் புத்தாக்கம், தயாரிப்பு திருப்தி, நுகர்வோர்



போக்குகளை புரிந்து கொள்ளுதல் மற்றும் சிறந்த சமூக அபிவிருத்தித் திட்டங்கள் போன்ற அனைத்தும் மஞ்சியின் வெற்றிக்கு பங்களிப்பு வழங்கியுள்ளன' என மேலும் அவர் தெரிவித்தார்.

மஞ்சியானது சமூக அபிவிருத்தி மற்றும் குழந்தைகளின் கல்வி தொடர்பான பிரதான கூட்டாண்மை சமூகப் பொறுப்புணர்வுத் திட்டங்களின் போது தேசத்தின் இளைஞர்களுடன் இணைந்து செயல்பட்டு வருகின்றது. சி.பி.எல்லின் வர்த்தக குறியீட்டு விரிவாக்கல்கள் உள்நாட்டு இளைஞர்களுக்கான புதிய வேலை வாய்ப்புக்களை உருவாக்குவதில் பாரிய பங்கினை செலுத்தியுள்ளன.

சிலிம் நீல்சன் மக்கள் விருதுகள் நீல்சன் நிறுவனத்தினால் தொடர்ச்சியாக ஆறு மாதங்கள் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகளின் ஊடாக வெற்றியாளர்கள் தெரிவு செய்யப்படுவர். நாட்டின் 9 மாவட்டங்களையும் சேர்ந்த 15 முதல் 60 வயதுக்குட்பட்ட நபர்களிடம் மேற்கொள்ளப்பட்ட கருத்துக்கணிப்புகள் மூலம் விருதுகள் தேர்ந்தெடுக்கப்படுகின்றன. (த)

# டி.எவ்.சி.சி வர்த்தன வங்கியின் விசேட பணப் பொதிகள்

இலங்கையில் துரிதமாக வளர்ச்சியடைந்துவரும் வர்த்தக வங்கி[illegible] டி.எவ்.சி.சி வர்த்தன வங்கி எதிர்வரும் சித்திரைப் புத்தாண்டைக் கொண்டாடும் முகமாக பணப் பொதி என்ற விசேட ஊக்குவிப்புத் திட்ட[illegible] ஆரம்பித்துள்ளது.

ஏப்ரல் 6ஆம் திகதிக்கும் 20ஆம் திகதிக்கும் இடையே நாடெங்குமு[illegible] டி.எவ்.சி.சி கிளைகளின் மூலம் நடைமுறைப்படுத்தப்படும் இத்திட்ட[illegible] கீழ் வாடிக்கையாளர்கள் விசேட நன்மைகளைப் பெறுவார்கள்.

ஒரு வருட நிலையான வைப்பிற்கு [illegible] வீத வட்டியும் ஆறு மாதகால[illegible] யான வைப்பிற்கு 7.75 வீத வட்டியும் வாடிக்கையாளர்களுக்கு [illegible] கப்படும். இதனைத் தவிர, சேமிப்பு வைப்புக்[illegible] [illegible] திட்டத்தின் கீழ் விசேட வெகுமதிகளையும் டி.எவ்.சி.சி வழங்[illegible] ஊக்குவிப்புத் திட்டக் காலப்பகுதியில் ரூ.5,000க்கு மேற்[illegible] தொகையை சேமிப்புக் கணக்கில் வைப்புச் செய்யும் வாடி[illegible] யாளர்கள் வர்தன அன்பளிப்புச் சான்றிதழ்கள் மூலம் விசேட [illegible] மதிகளுக்கும் பணப் பரிசுகளுக்கும் தகுதி பெறுவார்கள்.

ஊக்குவிப்புத் திட்டக் காலப்பகுதியில் புதிய வாடிக்கையாளர்[illegible] உறவுகளை ஏற்படுத்தவும் தற்போதுள்ள வாடிக்கையாளர்[illegible] உறவுகளை வலுப்படுத்தவும் டி.எவ்.சி.சி தனது 137 [illegible] சேவை நிலையங்களில் பாரம்பரிய புத்தாண்[illegible] நிகழ்வுக்கு ஏற்பாடு செய்துள்ளது.

டி.எவ்.சி.சி வர்த்தன வங்கியின் பிரதம [illegible] சில்வா கருத்து வெளியிடுகையில்,

சிங்கள மற்றும் இந்து மக்களினால் [illegible] கொண்டாடப்படும் புத்தாண்டு மகிழ்ச்சியையும் [illegible] பரிமாறிக்கொள்ளும் காலமாகும். (த)




## தவறு செய்பவர்களைத் திருத்துவது யார்?

இலங்கை நாட்டில் நான் ஒரு பிரஜை என்ற கர்வத்தோடு எழுதும் மடல் இது.
இப்போது எனது திருநாட்டில் கொலை, கொள்ளை, கற்பழிப்பு, கஞ்சா கடத்துதல், நகை கடத்துதல் என்பன சாதாரண விடயங்களாகி விட்டன.
இவற்றைத் தடுப்பதற்குப் பலர் முயற்சிகளை மேற்கொண்ட போதிலும், இவை ஒழிவதாகத் தெரியவில்லை. பொலிஸாரும் தங்களால் இயன்ற வரை இவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு முயற்சி செய்து வருகின்றனர்.
நான் ஒரு படித்த, இந்த சமுதாயத்தில் அக்கறையுள்ளவன் என்ற வகையில் சில விடயங்களைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.
செய்யும் தவறுகளில் சிறிய தவறு, பெரிய தவறு என்று பிரிக்க முடியாது.
அவ்வாறு இருக்கையில் எந்தத் தவறு செய்தாலும் தவறு செய்பவர்களை மககள் முன்பாக அம்பலப்படுத்த வேண்டும்.
அவ்வாறு செய்தால் தவறு செய்பவன் அடுத்த தடவை தவறு செய்வதற்கு வெட்கப்படுவான்.
இப்படிப்பட்டவர்கள் இந்த நாட்டுக்கு அவசிய மற்றவர்கள். இவர்களின் படங்கள் பத்திரிகையில் வெளிவர வேண்டும். அப்போதாவது இத்தகையவர்கள் திருந்துகின்றார்களா எனப் பார்ப்போம்.

*கீ.அலன்.*

## தமிழில் தேசிய கீதம்

காங்கேசன்துறையில் அமைந்திருந்த இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபன அலுவலகத்தில் தேசிய கீதத்தைத் தமிழில் பாடிய பின்னர் தான் வேலைகள் ஆரம்பமாகும். இதனைப் பாடும்போது தொழிலாளர்களும் சேர்ந்து பாடுவார்கள். முன்பெல்லாம் தமிழில் தான் தேசிய கீதம் பாடப்பட்டு வந்தது. இப்போது இவை தொடர்பாக எதிரணியினர் மோதுவதில் பிரயோசனம் இல்லை.

*எஸ்.வரதன்.மட்டக்குளி.*

## அதிபர் இல்லாமல் இயங்கும் பாடசாலை

மட்டுவில் பகுதியில் இயங்கும் சமலாசனி பாடசாலை கடந்த பல மாதங்களாக அதிபர் இல்லா மல் இயங்கி வருகின்றமை வேதனை அளிக்கின்றது.
முன்னர் இங்கு பல தரமான அதிபர்கள் கடமையாற்றினார்கள். அந்த வகையில் கடைசியாக இருந்த அதிபரும் கடந்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் இடமாற்றம் பெற்று விட்டார்.
கடைசியாக இருந்த பிரதி அதிபரும் இடமாற்றம் பெற்று ஜனவரி மாதம் சென்று விட்டார். இதற்குப் பதிலாக வேறொரு அதிபரை நியமிக்காமல் இருப்பது மிகவும் கவலை அளிக்கிறது.
ஒரு குடும்பத்தில் அம்மா, அப்பா இல்லாமல் இருக்கும் குழந்தை எப்படிப் பரிதவிக்குமோ அவ்வாறு தான் இப்பாடசாலை மாணவர்களும் அதிபர் இன்றிப் பரிதவிக்கின்றார்கள்.
இப்பாடசாலை சரசாலை, மட்டுவில், மீசாலை, கெருடாவில் பகுதிகளில் இருந்து மாணவர்கள் வந்து கல்வி கற்கும் ஒரு மதிப்புமிக்க பாடசாலை ஆகும். இப்பாடசாலையை மகா வித்தியாலயமாகத் தரம் உயர்த்துவ தற்குப் பதிலாக இப்படி அதிபர் இல்லாமல் சீரழிப்பது முறையாகுமா?
எனவே இப்பாடசாலைக்கு செயல் திறன் மிக்க ஓர் அதிபரை நியமிக்க அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

*சிவாஜினி மாணவர்கள் சார்பாக*

கேலிச் சித்திரம்




நன்றி: மவ்பிம

## எதிர்பார்ப்புகள் நிறைவேறாது கடந்து போன புதுவருடங்கள்

முன்னேற்றமும் ஏற்படவில்லை. இந்த நிலையில் மற்றொரு சித்திரைப் புத்தாண்டு இன்று பிறந்துள்ளது.
பல எதிர்பார்ப்புக்கள், ஏக்கங்கள், கனவுகள், குறிக்கோள்கள் ஆகியவற்றுடன் தமிழ் மக்கள் பல புதுவருடத்தை எதிர்கொள்கின்றனர். ஆயினும் பிறக்கின்ற வருடங்கள் எல்லாம் தமிழனுக்கு ஒரு விடிவைத் தருவனவாக இல்லை. இந்நிலையில் இன்று பிறந்துள்ள புத்தாண்டாவது ஒரு மாற்றத்தை தருமா என்ற ஏக்கத்துடன் அதனை எதிர்கொண்டுள்ளார்கள் தமிழ் மக்கள்.
நல்லாட்சி என்று கூறிக்கொண்டு ஆட்சிக் கதிரையில் ஏறியுள்ள புதிய அரசின் மீது தமிழ் மக்களுக்கு அதிக எதிர்பார்ப்புக்கள் உள்ளன என்பதை மறுப்பதற்கில்லை. காரணம் தமிழ் மக்கள் வழங்கிய வாக்குகளே இந்தப் புதிய அரசை ஆட்சியில் அமர வைத்தது என்பதை யாரும் மறக்கவோ மறுக்கவோ மாட்டார்கள்.
போரின் கொடூரங்களினால் பாதிக்கப்பட்ட தமிழர்கள் இன்னமும் இன்னல்களையும், அவதிகளையும் எதிர்கொண்ட வண்ணமே தமது வாழ் நாள்களை எதிர்கொண்டுள்ளனர். அவர்களின் நீண்ட கால எதிர்பார்ப்பாகிய ஒரு நிரந்தர அரசியல் தீர்வுக்கான முன்னகர்வுகள் எதுவுமே இந்தப் புதிய அரசிடம் இல்லாதமை வேதனைக்குரிய விடயமாகும்.
பழையன களைந்து புதுப்பொலிவு பெறவேண்டும் என்பது ஒவ்வொருவரதும் புத்தாண்டு சிந்தையாக இருக்கின்ற போதிலும் அது எமது நாட்டின் தமிழினத்தைப் பொறுத்த வரையில் பொருந்தாத ஒன்றாகியுள்ளது. இதுவரை தமிழினம் கண்ட புத்தாண்டு மகிழ்ச்சியையோ மனநிறைவினையோ தந்துவிடவில்லை.
விட்டுக்கொடுப்புக்கு மனமில்லாத இனவாதச் சிந்தனையாளர்களால் முன்னெடுக்கப்படுகின்ற முன்னெடுப்புகள், தந்திரோபாயக் காய் நகர்த்தல்கள் தமிழ், முஸ்லிம் மற்றும் சிங்களம் என்ற பேதம் இல்லாத வகையிலும் ஒட்டுமொத்த மக்களையுமே பாதிக்கின்றது என்பதை யாரும் உணர்வதாக் இல்லை.
தமிழ் மக்கள் எதிர்நோக்கியுள்ள உண்மைத்தன்மைகளை சிங்கள சமூகத்தின் முன்னால் கொண்டு செல்லத் துணியாத பெரும்பான்மையின அரசியல்வாதிகளும் தலைவர்களும் தத்தமது பதவிகளையும் அதிகாரத்தையும் தக்க வைக்கவே முற்படுகிறார்கள். தமிழர் பிரச்சினைகள் சிங்கள மக்களிடத்தில் தெளிவுபடுத்தப்படுமேயானால் அது தீர்வை நோக்கிய பயணத்துக்கு வழியமைத்துக் கொடுக்குமே தவிர முட்டுக்கட்டையாக இருக்கப்போவதில்லை.
உள்நாட்டுப் போர் ஒன்று உக்கிர நிலையை அடைந்தமைக்கான உண்மையான காரணங்களை அரசு கண்டறிந்திருக்கின்றபோதும் அதனைப் பகிரங்கப்படுத்தி நேர்மையாகச் செயற்படுவதற்கான வழிகளை ஏற்படுத்துவதாகத் தெரியவில்லை. வருடங்கள் கடந்துகொண்டிருக்கின்றதே தவிர தமிழ் மக்களின் கவலைகள் மாறவில்லை.
பிரச்சினைகளைக் கண்டறிந்து தீர்வு காண்பதற்காக அரசினால் ஆணைக்குழுக்கள் அமைக்கப்படுகின்றபோதும் அவை வெறும் காகித அறிக்கைகளுடன் மட்டுமே நின்றுவிடுகின்றன. அவற்றுக்குச் செயல் வடிவம் கொடுக்கப்படுவதில்லை.
ஆனாலும் இவ்வாண்டு புதிய அரசு ஆட்சிக்கு வந்த பின்னர் தமிழ்மக்களின் மீள்குடியேற்ற விடயத்தில் சிறிது முன்னேற்றம் ஏற்பட்டுள்ளமை வரவேற்புக்குரியது.
வலி.வடக்குப் பகுதியில் உயர் பாதுகாப்பு வலயமாக இருந்த சில இடங்கள் கடந்த 30 வருடங்களின் பின்னர், மக்களின் மீள்குடியமர்வுக்காக கையளிக்கப்பட்டுள்ளன. பெரும்பகுதி இன்னும் விடுவிக்கப்படாதுள்ளபோதும் சிறிய பகுதியாவது விடுவிக்கப்பட்டமை ஓரளவு நிம்மதியைத் தருகிறது. இந்த நடவடிக்கை மேலும் விஸ்தரிக்கப்பட்டு தமிழர் காணிகள் முழுமையாக விடுவிக்கப்பட வேண்டும். சொந்த நிலங்களில் தமிழர்கள் வாழ்வதற்கான வழிவகைகள் ஏற்படுத்தப்பட வேண்டும். இவை எல்லாவற்றுக்கும் மேலாக ஒன்றுபட்ட இலங்கைக்குள் அனைத்து இனங்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு நீடித்த– நிலையான– நிரந்தர அரசியல் தீர்வு எட்டப்பட வேண்டும். அதனையே புதிய அரசிடம் எதிர்பார்க்கிறார்கள் தமிழர்கள்.

பத்தி எழுத்து

# துறைமுக நகரத் திட்டத்தினால் நன்மையை விட தீமையே அதிகம்

## கைவிடக் கோருகிறது விசாரணை மன்றம்

கொழும்பு, ஏப்.14
ஊழல்களுக்கு எதிரான இலங்கையின் சர்வதேச கண்காணிப்பு அமைப்பான ட்ரான்ஸ் பெரன்ஸி இன்ரநஷனலின் ஆதரவில் நிறுவப்பட்ட பொது விசாரணை மன்றம் ஒன்று துறைமுகநகர் (போர்ட் சிற்றி) திட்டம் கைவிடப்பட வேண்டும் என்று தீர்மானித்திருப்பதுடன் இந்தத் திட்டத்தின் மூலம் கிடைப்பதாக இருக்கும் நன்மைகளை விட அதனால் ஏற்படக் கூடிய பொருளாதார, சமூக, சுற்றுச் சூழல் மற்றும் அரசியல் தீங்குகள் அதிகமாக இருக்கப் போகின்றன என்றும் அறிவித்துள்ளது.

சீனக் கொம்யூனிகேஷன்ஸ் கொன்ஸ்ட்ரக்ஷசன் நிறுவனம் இந்தத் திட்டத்தின் மூலம் எதுவித தாக்கமும் ஏற்படப்போவதில்லை என்று வெகு சாதாரணமாகக் கூறுகின்றது. அதனால் ஏற்படும் பொருளாதார சுற்றுச் சூழல் மற்றும் சமூக தீங்குகள், நன்மைகளை விட அதிகமாகவே இருக்கப் போகின்றன. அதனால் அதனை நாம் தடுத்து நிறுத்த வேண்டும் என்று விசாரணை மன்றத்துக்கு தலைமை வகித்த சட்டத்தரணி எஸ்.ஜி.புஞ்சிஹேவா கூறியுள்ளார். சட்டத்தரணி சந்திரபால குமாரகே மற்றும் கரையோர பாதுகாப்பு விடயங்கள் தொடர்பான நிபுணர் டாக்டர் ஜயம்பதி சமரக்கோன் ஆகியவர்கள் மன்றத்தின் ஏனைய உறுப்பினர்களாகப் பணியாற்றியுள்ளார்கள்.

சட்டத்தரணி புஞ்சிஹேவா, தங்கள் முன் பல்வேறு நபர்களால் இந்தத் திட்டத்துக்கு எதிராக முன்வைக்கப்பட்ட கருத்துக்களை மேற்கோள் காட்டியதுடன் இந்தத் திட்டத்தின் காரணமாக 32,000 வகையான கடல்வாழ் உயிரினங்கள் அழிக்கப்பட்டுவிடும். கரையோரப்பகுதி சீரழிவுக்குள்ளாகும். மீன்பிடித் தொழிலை நம்பியுள்ள 500,000 உயிர்கள் பாதிக்கப்படும் என்று கூறினார்.

கரையோர உல்லாசப் பயணத்துறை கடுமையாகப் பாதிக்கப்படும். இது இந்தத் திட்டத்தினால் 83,000 தொழில்வாய்ப்புக்கள் மற்றும் துறைமுக நகரினால் வரப் போகும் உல்லாச பயண வாய்ப்புகளால் ஈடு செய்யக் கூடியதாய் இருக்காது. இந்தத் திட்டத்துக்காக 8.5 மில்லியன் தொன் மணல் மற்றும் கரும்பாறைகள் அகழ்ந்தெடுக்கப்படவிருக்கும் கிராமங்களும் பெரும் பாதிப்புக்குள்ளாகும் என்று அவர் மேலும் கூறினார்.

சுற்றுச் சூழல் தாக்கம் தொடர்பாகப் பகுப்பாய்வு முற்றுப் பெறவில்லை. மொரட்டுவ பல்கலைக்கழகத்தின் கல்வியியலாளர் ஒருவர் சமர்ப்பித்த அறிக்கையொன்றின் அடிப்படையிலேயே முழுத்திட்டமும் முன்னெடுக்கப்பட்டுள்ளது. இவர் பின்னர் சீன நிறுவனத்தால் பணியில் அமர்த்தப்பட்டுள்ளார். சரியான அகழ்வு ஆய்வுகளும் நடத்தப்படவில்லை என்றார் அவர்.

புஞ்சி ஹேவா மேலும் கூறுகையில், இந்தத் திட்டம் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டால் அரசமைப்புச் சிக்கல் ஏற்படவும் வாய்ப்பிருக்கிறது – என்றார்.

வெளிநாட்டவருக்கு நிலம் வழங்குவதானது சீனாவுக்கு விமானத் தளத்துக்கான உரிமை மட்டுமன்றி கடற்கரையோரம் 200 கடல் மைல் நீளத்துக்கு கடல் எல்லைப் பகுதி சீனாவுக்கு உரித்தாகும். அந்தப் பகுதியில் நமது நிறைவேற்று அதிகாரம், நீதித்துறை மற்றும் சட்ட சபை முதலியவை செல்லுபடியாகுமா? அந்தப் பகுதியில் வாழ்பவர்கள் சீனர்களாக இருப்பார்களா இலங்கை மக்களாக இருப்பார்களா? என்று அவர் கேள்வி எழுப்பினார்.

அவர் மேலும் கூறுகையில்; இது தொடர்பான இரு நாடுகளுக்கு மிடையிலான ஒப்பந்தம் வர்த்தக ரீதியிலானது. கடல் நிலத்தை மீட்டெடுப்பதற்காகவே ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. அங்கு கட்டடங்கள் எதுவும் கட்டுவதற்கு அல்ல என்றார்.

மன்றத் தலைவரும் ஏனையவர்களும் மேலும் கூறுகையில்; இப்போதைய அரசு இந்தத் திட்டம் குறித்து அக்கறை கொள்வதாக இல்லை. தேர்தல் காலத்தில் மட்டும் தடுத்து நிறுத்த விரும்புகிறார்கள். மன்றத்தின் முன் அரச தரப்பிலோ சீன நிறுவனம் தரப்பிலோ எவரும் தோன்றி தமது கருத்துக்களை முன்வைக்கவில்லை.

அரசு தன்தரப்பில் இந்தத் திட்டம் தொடர்பாக விசேட புலனாய்வு ஒன்றை நடத்தி வருகின்றது. சீன நிறுவனம் தன் தரப்பிலான சகல ஆவணங்களையும் சமர்ப்பித்து விட்டதாகக் கூறியிருக்கிறது.

கட்டுமானத் தொழில்சபை அண்மையில் துறைமுக நகர் திட்டத்தை தொடர்ந்து மேற்கொள்ள அனுமதிக்கும் படி அரசைக் கோரியிருந்ததுடன் அது தொடர்பாக முறையான நடைமுறைகள் பின்பற்றப்பட்டிருப்பதாக அரசுக்குத் தெரிவித்திருந்தது. அத்துடன் கையெழுத் திடப்பட்ட உடன்பாடு மீளப்பெறுவதானது வேறு முதலீட்டாளர்களின் மனங்களில் தவறான கருத்து உருவாக வழி வகுக்கும் என்றும் தெரிவித்திருந்தது.

விசாரணை மன்றத்தின் ஆய்வுகளும் கருத்துக்களும் ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் வழங்கப்படவிருக்கின்றன. (ப)



## கொடியேற்றம்

யாழ்ப்பாணம், ஏப். 14
நீர்வேலி கந்தசுவாமி கோயி லின் வருடாந்த பெருந்திருவிழா நாளை புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்ப மாகித் தொடர்ந்து 21 தினங்கள் திருவிழா நடைபெறும்.
தேர்த்திருவிழா எதிர்வரும் மே மாதம் 2 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறும். மறுநாள் ஞாயிற்றுக்கிழமை தீர்த்தத் திருவிழா இடம்பெறும். (வ–17–11)

**சிறுநீரகம் தேவை**
வயது - 41 நிரம்பிய ஆண் ஒருவருக்கு 'A' அல்லது 'O' இரத்த வகையைச் சேர்ந்த சிறுநீரகம் தேவை.
தொடர்பு: 077 667 9427, 077 876 5921
(58829) (4.3.7)

**பிரத்தியேக ஆங்கில வகுப்புக்கள்**
ஆங்கிலம் (Gr. 1-O/L & A/L)
பேச்சு ஆங்கிலம் (Spoken English)
ஆங்கில இலக்கியம் (Literature)
07 வருட அனுபவம் கொண்ட பிரபல கல்லூரி ஆசிரியரால் வீட்டிற்கு வந்து கற்பிக்கப்படும்.
பெற்றோர் மட்டும் தொடர்பு கொள்ளவும்.
Tel: 078 810 0086
(58828)(4.3.7)

**பெயர்மாற்றம்**
நயினாதீவு, 8 ஆம் வட்டாரத்தில் வசிக்கும் ... ஆகிய நான் எனது பெயரினை இன்றிலிருந்து ... என பெயர் மாற்றி சகல ஆவணங்களிலும் கையொப்பம் இடுவேன் என சகலருக்கும் அறியத்தருகின்றேன்.
(58827)(4.3.7)

**வீடு விற்பனைக்குண்டு**
ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்
15/6 A, சிறாம்பியடி லேன்.
(58806) (4.3.7) தொடர்பு: 077 976 3278

**வீடு வாடகைக்குண்டு**
சோமசுந்தரம் அவெனியூவில் சகல வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்குண்டு.
(நாள், கிழமை, மாத அடிப்படையிலும் உண்டு.)
(58825)(4.3.7) தொடர்பு: 077 384 9671

# ஓராண்டு மஹிந்தவால் 88 3 மாதம் மைத்திரியால் 26

## எத்தனோல் அனுமதிப் பத்திரங்கள் வழங்கல்

கொழும்பு, ஏப். 14
முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அரசின் கீழ் கடந்த 2014 ஆம் ஆண்டில் எத்தனோல் இறக்குமதிக்கான 88 அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டிருந்தன எனவும், ஆனால் கடந்த ஜனவரி 8 ஆம் திகதி ஆட்சிக்கு வந்திருந்த இந்தப் புதிய அரசு கடந்த 90 நாள்களில் 26 எத்தனோல் அனுமதிப்பத்திரங்களை வழங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கமைய கடந்த ஆண்டில் எத்தனோல் அனுமதிப்பத்திர விற்பனையின் மூலமாக 29 லட்சத்து 27 ஆயிரத்து 781 மில்லியன் ரூபா வருமானமாகப் பெற்றுள்ள போதிலும், இன்றைய அரசு ஆட்சிக்கு வந்ததன் பின்னர் இதுவரை வழங்கப்பட்டுள்ள எத்தனோல் அனுமதிப் பத்திரங்கள் மூலம் 20 ஆயிரத்து 720 மில்லியன் ரூபா வருமானமாகப் பெறப்பட்டிருப்பதாக நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.



அண்மையில் நிதியமைச்சில் இடம்பெற்ற ஊடகச் சந்திப்பொன்றில் வைத்தே இதனைத் தெரிவித்திருந்த நிதியமைச்சர், புதிய அரசு ஆட்சிக்கு வந்த இந்த மூன்று மாதகாலத்துக்குள் கலால் திணைக்களத்தின் வருமானம் படிப்படியாக உயர்வடைந்துள்ளதாகவும், அதற்கமைய ஜனவரி மாதத்தில் 7 மில்லியன் ரூபா, பெப்ரவரியில் 7.5 மில்லியன் ரூபா, மார்ச் மாதத்தில் 9.4 மில்லியன் ரூபா என்றவாறு கலால் திணைக்களத்தின் வருமானம் வளர்ச்சியடைந்திருந்ததாகவும் தெரிவித்துள்ளார். (த–22)

# சு.க. மத்திய குழுவிலிருந்து நீக்கப்பட்டோர் வழக்கு

கொழும்பு, ஏப். 14
ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்தியகுழுவிலிருந்து நீக்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஐவரும், மத்தியகுழுவின் தீர்மானத்துக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரியவருகின்றது.

மத்திய குழுவிலிருந்து சட்டவிரோதமான முறையிலேயே தாங்கள் ஐவரும் நீக்கப்பட்டுள்ளதாக அவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

ஆகையால் மத்திய குழுவின் தீர்மானத்துக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யவுள்ளதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன உள்ளிட்ட எஸ்.எம். சந்திரசேன, டி.பீ. ஏக்கநாயக்க, ரோஹித்த அபேகுணவர்தன மற்றும் சாலிந்த திஸாநாயக்க ஆகிய ஐவருமே கடந்த சனிக்கிழமை நீக்கப்பட்டனர்.

இது தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் கையொப்பமிடப்பட்ட கடிதங்கள், மத்தியகுழுவிலிருந்து நீக்கப்பட்ட உறுப்பினர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மத்திய குழுவின் தீர்மானத்துக்கு எதிராகச் செயற்பட்டமையினாலேயே உறுப்புரிமையிலிருந்து நீக்கப்பட்டுள்ளதாக அந்தக் கடிதங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (த)

**சித்திரைப் புத்தாண்டு நல் வாழ்த்துக்கள்**
இன்று பிறக்கும் மன்மத வருடத்தில் எமது அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது சித்திரைப்புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றோம்.
உரிமையாளரும், பணியாளர்களும்,
T.P: 077 437 8950

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**

மதுரநாயகம்பிள்ளை கர்த்திகா
யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி
2014 க.பொ.த. சாதாரண தரத்தில்
"9A" சித்தி
பெற்றமையை
மனமகிழ்வுடன் பாராட்டுவதோடு,
அவர் மேலும் கற்று
பட்டங்கள் பல பெற்று
பெருமையோடு
வாழ வாழ்த்துகின்றோம்.
வாழ்த்துவோர்:

# ஜே.வி.பி. -சோஷலிஸக் கட்சி ஆதரவாளர்கள் மோதல்

கொழும்பு, ஏப். 14
பேராதனை – கன்னொருவ பகுதியில் உள்ள முன்னிலை சோஷலிஸக் கட்சி அலுவலகப் பொருள்களை நேற்றுமுன்தினம் இரவு வெளியில் போட்ட சம்பவம் தொடர்பில் அந்த அலுவலக கட்டட உரிமையாளர் மற்றும் கட்சி ஆதரவாளர்கள் இடையே ஏற்பட்ட மோதலில் நால்வர் காயமடைந்து பேராதனை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்த மோதல் தொடர்பில் 19 பேர் நேற்றுக் காலை கைது செய்யப்பட்டுள்ளதாகப் பேராதனை பொலிஸார் தெரிவித்தனர்.

அலுவலக கட்டட உரிமையாளர் மக்கள் விடுதலை முன்னணி ஆதரவாளர் எனப் பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சம்பவம் குறித்து பேராதனை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (த)

# விளையாட்டுக் கழகங்களுடன் சரவணபவன் எம்.பி. சந்திப்பு




கரணவாய், ஏப்.14

பண்டத்தரிப்பு இளைஞர் கழகத்துடனும் பிரைட் ஸ்ரார் விளையாட்டுக் கழகத்துடனும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் சந்திப்பை நடத்தினார். பண்டத்தரிப்பு பிரைட் ஸ்ரார் விளையாட்டுக் கழகத்துக்கு அருகில் உள்ள புனித பத்திமா மாதா வாசகர் கூடத்தில் பிரைட் ஸ்ரார் விளையாட்டுக் கழகத் தலைவர் கமில்டன் தலைமையில் நிகழ்வு இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் இளைஞர் கழகத் தலைவர் எஸ்.சுதர்சன், மானிப்பாய் பிரதேச சபை முன்னாள் தவிசாளர் ஜெபநேசன், பிரதேச சபை உறுப்பினர் ஜோன் ஜிப்ரிக்கோ மற்றும் கழக உறுப்பினர்கள், இளைஞர், யுவதிகள் என பலர் கலந்து கொண்டனர்.

இந்த சந்திப்பின் போது மக்கள் தமது குறைகளை நாடாளுமன்ற உறுப்பினரின் கவனத்துக்குக் கொண்டு வந்தனர். அதனை அடுத்து நாடாளுமன்ற உறுப்பினர் தனது சொந்த நிதியில் இருந்து நிதியொதுக்கி பிரதேசத்தின் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதாக உறுதியளித்தார்.

வடலியடைப்பு சன சமூக நிலையத்திலும் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ. சரவணபவன் நேற்று முன்தினம் மாலை மக்கள் சந்திப்பை நடத்தினார். இதன்போது மக்களின் பிரச்சினைகளைக் கேட்டறிந்த நாடாளுமன்ற உறுப்பினர் அதற்குத் தீர்வு காண்பதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும் உறுதியளித்தார். அதன் பின் மக்கள் சந்திப்பு சில்லாலை தெற்கு கிறிஸ்துராசா சனசமூக நிலையத்தில் இடம்பெற்றது. இதிலும் மக்களின் பிரச்சினைகளைக் கேட்டறிந்த நாடாளுமன்ற உறுப்பினர் அதற்கு தீர்வு காண்பதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும் உறுதியளித்தார். (வ-109)

# வளப்பற்றாக்குறையுடன் இயங்கும் கிழக்கின் அதிகமான பாடசாலைகள்

## மாகாணக் கல்வி அமைச்சர் தண்டாயுதபாணி கூறுகிறார்

மட்டக்களப்பு, ஏப்.14

கிழக்கு மாகாணத்திலுள்ள அதிகமான பாடசாலைகள் வளப்பற்றாக்குறையுடன் இயங்கி வருவதாகவும் சில பாடசாலைகள் அதிக வளங்களுடன் காணப்படுவதாகவும் கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சர் சி.தண்டாயுதபாணி தெரிவித்தார்.

களுவாஞ்சிகுடி விநாயகர் வித்தியாலயத்துக்கு கிழக்கு மாகாண கல்வி அமைச்சர் வியாழக்கிழமை பயணம் மேற்கொண்டிருந்தார். இதன்போது அந்தப் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தை சந்தித்து கலந்துரையாடிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இதன் போது மேலும் தெரிவித்த அவர்:

'சில பாடசாலைகளில் வளங்கள் அதிகமாக இருந்தும் அதனை அந்த பாடசாலைகள் பயன்படுத்தும் தன்மை குறைவாகவே காணப்படுகின்றது. இவை அனைத்தையும் நான் நேரடியாக சென்று அவதானித்தேன். இருக்கின்ற வளங்களைச் சரியாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். எது எவ்வாறாக இருந்தாலும் அதிக பாடசாலைகள் பாரிய வளப்பற்றாக்குறையுடன்தான் இயங்கி வருகின்றன. இவ்விடயம் தொடர்பில் கிழக்கு மாகாண கல்வி அமைச்சினூடாக செய்யவேண்டிய அனைத்து விடயங்களையும் மேற்கொள்வதற்கு நான் தயாராக உள்ளேன். அந்த வகையில் களுவாஞ்சிக்குடி விநாயகர் வித்தியாலயத்துக்கு மிகவும் முக்கியமாக தேவையாகவுள்ள விடயங்களை நான் அவதானித்துள்ளேன். அவற்றைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ள உள்ளேன்' என்று தெரிவித்தார்.

கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சரின் இந்த பயணமானது பாடசாலை சமூகத்தின் வேண்டுதலுக்கு அமைவாக, கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஞா.கிருஷ்ணபிள்ளையின் அழைப்பின் பேரில் இடம் பெற்றிருந்தது.

இந்தப் பயணத்தின் போது வருகை தந்த கல்வி அமைச்சரை கிழக்கு மாகாண சபை உறுப்பினர்களான ஞா.கிருஷ்ணபிள்ளை, கோ.கருணாகரம், பட்டிருப்பு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி ந.புள்ளநாயகம், பாடசாலை அதிபர் த.கனகசூரியம், ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலை அபிவிருத்தி சங்கத்தினர் ஆகியோர் கலந்துகொண்டு அமைச்சரை வரவேற்றனர். (வ)

# தேசிய ஒற்றுமைக்கான செயற்குழு அமைக்க அமைச்சரவை அங்கீகாரம்

கொழும்பு, ஏப் 14

தேசிய ஒற்றுமைக்கான செயற்குழு ஒன்றை அமைக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. எந்த ஒரு சமூகமும் பிறிதோர் சமூகத்தை அடிமைப் படுத்துவதைத் தவிர்க்க வேண்டும் என்பதனை உறுதிப்படுத்தும் நோக்கிலேயே மேற்படி செயற்குழுவுக்கான அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்று முன்தினம் கூடிய அமைச்சரவையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவால் முன்வைக்கப்பட்ட இது தொடர்பான பிரேரணைக்கு அங்கீகாரம் கிடைத்துள்ளது.

இது தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

நாட்டின் அனைத்து பிரஜைகளுக்கும் பொருளாதார, சமூக, கலாசார மற்றும் அரசியல் ஆகிய துறைகளின் சம அந்தஸ்து வழங்கப்பட வேண்டும். அதேபோன்று எந்த ஒரு சமூகமும் பிறிதோர் சமூ கத்தை அடிமைபடுத்துவதைத் தவிர்க்க வேண்டும். இது போன்ற நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக தேசிய ஒற்றுமை தொடர்பான செயற் குழுவொன்றை அமைப்பதற்காக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவால் முன் வைக் கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத் துக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (வ-10)

# ரயிலில் இருந்து தவறி வீழ்ந்து தாயும் மகளும் படுகாயம்

மன்னார், ஏப்.14

தலைமன்னாரில் இருந்து கொழும்பு நோக்கி புறப்பட்ட ரயிலில் இருந்து தவறி விழுந்த தாயும் அவரது 8வயது மகளும் பலத்த காயங்களுக்கு உள்ளான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை ராகம ரயில் நிலையத்தில் இடம்பெற்றுள்ளது.

ரயில் புறப்பட்டபின்னர் ஒடிச் சென்று அதில் ஏற முற்படுகையில் கால் தவறி கீழே விழுந்ததாலேயே இந்த விபத்து ஏற்பட்டுள்ளது. இதே வேளை இவர்களைக் காப்பாற்ற முற்பட்ட பயணி ஒருவரும் காயங்களுக்கு உள்ளான நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று கூறப்படுகின்றது. (ற)

# சங்கானை - அராலி வீதி புனரமைப்பு

யாழ்ப்பாணம், ஏப்.14

கடந்த இரண்டு மூன்று வருடங்களுக்கு மேலாக புனரமைக்கப்படாமல் இருந்த சங்கானை ஊடாக அராலிக்குச் செல்லும் வீதி புனரமைக்கப்படவுள்ளது.

வீதி அபிவிருத்தித்திணைக்களத்தின் கீழ் வரும் இந்தப் பாதை அராலியையும் சங்கானையையும் இணைக்கும் முக்கிய வீதியாகும். பாடசாலைகள், ஆலயங்கள், வியாபாரிகள் போன்ற பல தேவைகளுக்காக மக்கள் இதனை அதிகம் உபயோகிக்கின்றனர்.

குண்டும் குழியுமாக பாதசாரிகள், வாகனோட்டிகள் பலரும் மிகுந்த கஷ்டத்தின் மத்தியில் இந்தப் பாதையை பயன்படுத்தி செய்து வந்த னர். தற்போது அராலி முதல் துணைவிச் சந்திவரையான பாதை புனரமைக்கப்பட்டு, தொடர்ந்து துணைவியில் இருந்து சங்கானைச் சந்தைவரை இப்பாதையை புனரமைக்க அதற்கான கற்கள் பறிக்கப்பட்டு ஆயத்த வேலைகள் நடைபெற்று வருகின்றன. (ற-29)

# வெகுமதிகளுக்கு விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், ஏப்.14

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய அங்கத்தவர்களின் பிள்ளைகளில் 2014ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்த 5 ஆயிரம் பேருக்கு தலா 12 ஆயிரம் ரூபா பெறுமதியான வெகுமதிகள் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையால் அவர்களின் உயர் கல்விக்காக வழங்கப்படவுள்ளது.

அதற்கான விண்ணப்பங்களை அலுவலக நேரங்களில் இல.70, மார்டின் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம் எனவும் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை எதிர்வரும் மே மாதம் 29ஆம் திகதிக்கு முன்னர் 'புலமைப் பரிசில் அலுவலர், புலமைப் பரிசில்கள் பிரிவு, ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை, இல 92, கிருள வீதி, நாரஹென்பிட்டி, கொழும்பு 05' என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது நேரில் கையளிக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-10)

# கரவெட்டிப் பிரதேச சபை உறுப்பினர் மதியரசன் சாவு

கரணவாய், ஏப்.14

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடமராட்சி தெற்கு மேற்குப் பிரதேச சபை உறுப்பினர் ஆழ்வாப்பிள்ளை. மதியரசன் (வயது-48) நேற்று சுகவீனம் காரணமாக உயிரிழந்தார்.

திடீர் சுகவீனம் காரணமாக நேற்று முன்தினம் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைகளுக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு அங்கு நேற்று அதிகாலை அவர் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கரவெட்டி பிரதேச செயலக சமுர்த்தி அலுவலராகக் கடமையாற்றிய இவர் கடந்த 2011 ஆம் ஆண்டு நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் கரவெட்டி தெற்கு மேற்கு பிரதேச சபைக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்றுப் பிரதேச சபை உறுப்பினராக பல்வேறு அபிவிருத்தி வேலைத்திட்டங்களில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-108)

முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலியும்
35 ஆவது பிறந்தநாள் நினைவும்

அமரர் செல்லத்துரை ரமணன்

தோற்றம் 14.04.1980 மறைவு 27.05.2014

காலமெல்லாம் எம்முடனே
வாழ்வாயெனக்
கண்டிருந்த கனவுகளைக்
கலைத்து விட்டு
காலன் கணக்கைக்
கணப்பொழுதில்
முடித்தமையால் கலங்கித்
துடிக்கின்றோம்
பாரினில் நீ கால்பதித்த புனிதமான
இந்நாளைப் பாங்குடனே நினைவு
கூருகின்றோம்

குடும்பத்தினர்.
அச்சுவேலி தெற்கு,
அச்சுவேலி. (88813)(4.3.6)



நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் வேலுப்பிள்ளை வேதநாயகம்

[வட பிராந்திய போக்குவரத்துச் சபையின் ஆளணி அலுவலர்]

மண்ணில் 25.08.1941 விண்ணில் 14.04.2011

ஆலம் விழுதுகள் போல் உறவுகள்
ஆயிரம் இருந்துமென்ன
வேரென நீரிருந்தீர் அதில் நாம் வீழ்ந்து விடாதிருந்தோம்
எங்கள் தெய்வத்தின் நினைவுகள் என்றென்றும் எம்முடன் வாழும்

இல.98, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம். (அ/16918)(4.3.7)

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.



# வசதிகளற்ற பஸ் நிலையம்

## கவலை தெரிவிக்கின்றனர் அச்சுவேலி மக்கள்

அச்சுவேலி, ஏப்.14

அச்சுவேலி பஸ் நிலையத்தில் மக்களுக்கான அடிப்படை வசதிகள் எதுவுமே இல்லை என்று பயணிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

அச்சுவேலி பஸ் நிலையத்தில் மலசல கூடம், மற்றும் குடிதண்ணீர் வசதி இல்லாமல் இருப்பதோடு பொருத்தமான மின்சார இணைப்பு வசதியும் இல்லாமல் இருப்பதோடு பயணிகளுக்கான இருக்கை வசதியும் இல்லாத நிலை காணப் படுகின்றது.

பஸ் நிலையத்தில் பல லட்சம் ரூபா செலவில் தரிப்பிட மண்டபம் நிறுவப்பட்டுள்ளது. ஆனால் பஸ்ஸுக்கு காத்திருக்கும் பயணிகள் மலசல கூடவசதி மற்றும் குடிதண்ணீர் வசதி இல்லாமல் இருப்பதால் அருகில் உள்ள வீடுகள் மற்றும் வர்த்தக நிலையங்களை நோக்கி அலைகின்றனர். அத்துடன் உபாதைகளுக்கும் உள்ளாகின்றனர்.

***அச்சுவேலி பஸ் நிலையத்தில் மலசல கூடம், மற்றும் குடிதண்ணீர் வசதி இல்லாததோடு பொருத்தமான மின்சார இணைப்பு வசதியும் இன்றி பயணிகளுக்கான இருக்கை வசதியும் இல்லை.***

அச்சுவேலி பஸ் நிலையத்தில் இருந்து பருத்தித்துறை, யாழ்ப்பாணம், தொண்டமானாறு, சங்கானை வீதி, இராச வீதி ஆகிய ஐந்து வீதிகள் செல்வதால் பயணிகள் நீண்ட நேரம் காத்திருந்து பயணத்தைத் தொடர வேண்டும்.

ஆனால்பயணிகளுக்கானஇருக்கை வசதி மற்றும் குடிதண்ணீர், மலசல கூட வசதிகள் இல்லாமல் இருப்பதால் பயணிகள் மற்றும் பொதுமக்கள் பல் வேறு விதமான நெருக்கடிகளுக்கு உள்ளாகி வருகின்றனர்.

கணிசமான அளவு பயணிகள் நீண்ட நேரம் காத்திருந்து பயணத்தை தொடரும் பஸ் நிலயத்தில் அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்குமாறு பொது அமைப்புக்கள் மற்றும் பொதுமக்கள் கோரிக்கை விடுத்தபோதிலும் சம்பந்தப்பட்டவர்கள் இது விடயத்தில் பாராமுகமாக இருந்து வருவதாக விசனம் தெரிவிக்கின்றனர். (வ–11)



கண்டாவளை பிரதேசத்தில் அழகுக்கலை தொடர்பான 4மாத கால தொழிற்பயிற்சித் திட்டம் ஒன்று அண்மையில் எஸ்.ரி சொலிடாரிட்டி பவுண்டேசன் நிறுவனத்தின் வடகிழக்கு திட்ட இணைப்பாளர் வே. வாமதேவனால் தர்மபுரப்பகுதியில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.(வ–21)

## யாழ்.பொதுநூலக வைபை சேவை மூலம் அதிக பயன்

யாழ்ப்பாணம், ஏப். 14

பொது இடங்களில் இலவசமாக வழங்கப்படுகின்ற வைபை வசதிகளைக் கடந்த ஐந்து நாள்களுக்குள் 1693 பேர் பயன்படுத்தியுள்ளதாக இலங்கை தகவல் தொழில்நுட்ப முகவர் நிலையம் நேற்று முன்தினம் குறிப்பிட்டுள்ளது.

யாழ். பொது நூலகத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள வைபை வலயத்தின் ஊடாக 50 இற்கும் அதிகமானோர் சேவையைப் பெற்றுக் கொண்டுள்ளனர் என்றும் அது குறிப்பிட்டுள்ளது.

நாடு முழுவதும் 26 பொது இடங்களில் இதுவரை நிறுவப்பட்டுள்ள வைபை வலயங்களில் இலவசமாக இந்த சேவையைப் பெற்றுக் கொள்ள முடியும்.

கொழும்பு மாவட்டத்திலேயே அதிக எண்ணிக்கையானோர் இலவச வைபை சேவையைப் பயன்படுத்தியுள்ளமை பதிவாகியுள்ளதாகஇலங்கைதகவல்தொழில்நுட்ப முகவர் நிலையத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி முகுந்தன் கனகே தெரிவித்துள்ளார்.

பிரதமரினால் அண்மையில் கொழும்புகோட்டைரயில்நிலையத்தில் இலவச வைபை வசதி ஆரம்பித்து வைக்கப்பட்டது. அடுத்த சில மாதங்களில் நாடு முழுவதும் 1000 இடங்களில் இலவசவைபை வசதிகளை நிறுவுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதாக்கூறப்பட்டுள்ளது. (வ–4)

## யாழ்.கூட்டுறவு சங்க நல்லூர் கிளை நாளை திறந்து வைப்பு

யாழ்ப்பாணம், ஏப்.14

யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் நல்லூரில் உள்ள 12 'ஏ' இலக்க கிளை விற்பனை நிலையம் நாளை புதன் கிழமை மாலை 5 மணிக்கு திறந்து வைக் கப்படும்.

சங்கத்தின் தலைவர் மு.ஜெ. சுஜிந்திரன் தலைமையில் நடை பெறும் இந்த நிகழ்வில் சாங்கத் தின் உப தலைவர் என்.எஸ். சத்தி யதாசன் கிளை விற்பனை நிலையத்தைத் திறந்து வைப்பார்.

கடந்த சில வருடங்களாக மூடப் பட்டிருந்த இந்தக்கிளை விற்பனை நிலையம் சங்க நிர்வாகத்தால் புனர்நிர்மாணம் செய்யப்பட்டுள்ளது.

நல்லூர் வீரமகாகாளி அம்மன் கோவிலடிப் பகுதியில் இருக்கும் இந்த கிளை நிலையம் நுகர்வோரின் வசதி கருதி மீளத்திறந்து வைக்கப்படவுள்ளதாக சங்க வட்டாரங்கள் தெரிவித்தன. ஏற்கனவே சங்கத்தின் 35இற்கும்மேற்பட்ட கிளை விற்பனை நிலையங்கள் செயற்பட்டு வந்தன.

இத்தக்கிளை விற்பனை நிலையங்களில் அரைவாசிக்கும் மேற்பட்டவை கடந்தகால நிர்வாகத் தால் பூட்டப்பட்டன. தற்போது பூட்டப்பட்ட கிளை நிலையங்கள் படிப்படியாக திறந்து வைக்கப்படும் என்று சங்கத்தலைவர் தெரிவித்தார். எதிர்வரும் புதன்கிழமை தொடக்கம் சங்கத்தின் கிளை நிலையங்கள் 20 ஆக உயரும் என்று தெரிவிக்கப்பட்டது. (வ–17)



கலுவாஞ்சிக்குடிப் பகுதியில் பழுகாமம் – திக்கோடை வீதியில் காந்திபுரம் என்ற இடத்தில் தனியார் பஸ் ஒன்று நேற்று வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானதில் 32 பேர் காயமடைந்துள்ளனர். காயமடைந்தவர்களில் அறுவர் மட்டக்களப்பு போதனா மருத்துவமனையிலும் ஏனையோர் களுவாஞ்சிக்குடி மருத்துவமனையிலும் சேர்க்கப்பட்டுள்ளனர். (வ)

## ஓட்டோச் சாரதிகளுக்கு அனுமதிப்பத்திரம் கட்டாயம்

தென்மராட்சி,ஏப்.14

சாவகச்சேரி நீதிமன்ற நியாயாதிக்க எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் பயணிகளை ஏற்றியிறக்கும் சேவையில் ஈடுபடும் ஓட்டோச் சாரதிகள் கண்டிப்பாக சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றிருக்க வேண்டும். அவ்வாறு சாரதிய அனுமதிப் பத்திரமின்றி பயணிகளை ஏற்றிச் செல்லும் ஓட்டோ சாரதிகள் மீது சட்ட நடவடிக்கைகள் எடுக்குமாறு சாவகச்சேரி, கொடிகாமம் பொலிஸ் பொறுப்பதிகாரிகளுக்கு சாவகச்சேரி நீதிமன்ற நீதிவான் உத்தரவிட்டார்.

ஓட்டோச் சங்கங்களின் பிரதிநிதிகளுக்கான கலந்துரையாடல் கடந்த 10ஆம் திகதி நடைபெற்ற போது இவ்வாறு உத்தரவிடப்பட்டது. நீதிமன்ற கட்டடத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில் பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகள், சாவகச்சேரி நகரசபை, பிரதேச சபை தலைவர்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர். (வ–9)

## சாவகச்சேரி ஆதார மருத்துவமனைக்கு ஒருதொகுதி கண் வில்லைகள் கையளிப்பு

தென்மராட்சி,ஏப். 14

சாவகச்சேரி ஆதார மருத்துவமனை கண் சிகிச்சைப் பிரிவுக்கு மேலும் ஒரு தொகுதி கண் வில்லைகள் நேற்றுமுன்தினம் கையளிக்கப்பட்டன.

சாவகச்சேரி லயன்ஸ் கழகத் தின் ஏற்பாட்டில் சர்வதேச லயன்ஸ் கழக 306 பி1, மாவட்ட முன்னாள் ஆளுநர் லென்ரஞ்சித்பெர்னாண்டோ நேற்று முன்தினம் 50 கண்வில்லைகளை மருத்துவமனைப் பொறுப்பதிகாரியிடம் கையளித்தார்.

மாவட்ட முன்னாள் ஆளுநரால் ஏற் கனவே நான்கு தடவைகள் தலா 30 கண்வில்லைகள் வழங்கப் பட்டதாகவும் ஐந்தாவது தொகுதியாக் 50 கண் வில்லைகள் நேற்று முன்தினம் வழங்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் 306பி1 மாவட்ட இணைப்பாளர் லயன்ஸ் இ.ஜெயபாலன், மருத்துவர் லயன் எஸ். அருளானந்தன், லயன்ஸ் கா.சற்குணதேவன் உட்பட பலர் கலந்து கொண்டனர். (வ–9)



## புத்தரிசிப் பொங்கல் விழா நாளை

யாழ்ப்பாணம், ஏப்.14

புதுவருட தினத்தை முன்னிட்டு வேலணை பிரதேச செயலகத்தால் நாளை புதன்கிழமை புத்தரிசிப் பொங்கல் விழா இடம்பெறவுள்ளது.

நாளை புதன்கிழமை முற்பகல் 10.10 மணிக்கு வேலணை பிரதேச செயலர் திருமதி மஞ்சுளாதேவி சதீசன் தலைமையில் வங்களாவடி முருகன் ஆலயத்தில் விழா இடம்பெறும்.


இந்நிகழ்வு மீள் குடியேற்றம் புனர்வாழ்வு மற்றும் இந்து சமய அலுவல்கள் அமைச்சர் டி.எம். சுவாமிநாதனின் ஆலோசனைக்கு அமையவும் திணைக்கள பணிப்பாளரின் பணிப்புரைக்கு அமையவும் நடைபெறவுள்ளது. (வ–7)

# சித்திரை மாத ராசி பலன்கள்



## மீனம்

சுற்றியிருக்கும் அழுக்குகளைத் தின்று சுத்தம் செய்யும் மீனைப்போல மற்றவர்களின் துன்பங்களை, துயரங்களை ஏற்றுக் கொள்ளும் சுமைதாங்கிகளே! வேலைச்சுமை அதிகமாகிக் கொண்டே போகும். பணத்தட்டுப்பாடு இருந்தாலும் சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள். பல் வலி, தொண்டைப் புகைச்சல் வந்துபோகும். அஷ்டமத்துச் சனியும் நடைபெறுவதால் உங்களைப் பற்றிய வதந்திகள் பரவும். செலவுகளைக் கட்டுப்படுத்த முடியாமல் திணறுவீர்கள். அரசு ஆவணங்களில் கையெழுத்திடும்போது கவனம் தேவை. பழைய கடனை நினைத்துக் கலங்குவீர்கள். நிம்மதி இல்லாமல் இருப்பீர்கள். எவ்வளவு இடர்பாடுகள் வந்தாலும் அதிலிருந்து விடுபடுவதற்கானசக்தி உங்களுக்குக்கிடைக்கும்.



**மாணவர்களுக்கு**

எண்ணெயில் பொரித்த, வறுத்த உணவுகளை வெளியில் எடுத்துக் கொள்ளாதீர்கள். நீங்கள் விரும்புவதை அம்மாவிடம் சொல்லுங்கள் அவர்கள் செய்து தருவார்கள். ஏனென்றால் வயிற்று வலி வரக்கூடும்.

**பெண்களுக்கு**


காதல் விவகாரத்தில் இருந்து வந்த குழப்பங்கள், பிரச்சினைகள் நீங்கும். பெற்றோர் பார்க்கும் வரனை நீங்கள் திருமணம் முடிப்பது நல்லது.

**உத்தியோகத்தர்களுக்கு**

உத்தியோகத்தில் எதிராக செயற்பட்ட சக ஊழியர் வளைந்து வருவார். அலுவலகத்தில் பிரச்சினைகள் கட்டுப்பாட்டிற்குள் வரும். அதிகாரிகள் உங்களுக்குப் பக்கபலமாக இருப்பார்கள். ஆனால், அவர்களால் வெளிப்படையாக தங்களின் ஆதரவைத் தெரிவிக்க முடியாத தர்ம சங்கடமான சூழ்நிலை உருவாகும். புது உத்தியோக முயற்சிகள் இப்போது வேண்டாம். அவசரப்பட்டு வேலையை விடாதீர்கள். உதவுவதாகச் சொன்னவர்கள் ஒதுங்கிக் கொள்வார்கள். எனவே இருக்கும் இடத்திலேயே தொடர்வது நல்லது.

**கலைஞர்களுக்கு**

மூத்த கலைஞர்களின் ஆதரவாலும், பரிந்துரையாலும் புது வாய்ப்புகள் கிட்டும். குடும்ப இரகசியங்களைக் காக்க வேண்டிய மாதமிது.



# பெண்கள் வெற்றியை நோக்கி செல்ல வழிகள்

1. வேலை செய்யும் போது, உங்களுக்கு பிடித்தமான இசையைக் கேட்டுக் கொண்டிருந்தால், களைப்பும் தெரியாது, மனமும் அமைதியாக இருப்பதை உணரலாம்.
2. ஏற்கனவே உங்கள் வாழ்வில் நடந்த மனதுக்கு இனிமையான சம்பவங்களை அவ்வப்போது நினைவுகூருங்கள், அதன் மூலம், மனதுக்கு புத்துணர்ச்சி ஏற்படும்.
3. பணிபுரியும் பெண்ணாக இருந்தால், உங்கள் பணியிடம் சௌகரியமான தட்பவெப்பநிலையில் உள்ளதா எனப் பார்த்துக் கொள்ளுங்கள். அது மிகவும் சூடாகவோ அல்லது குளிர்ச்சியாகவோ இருந்தால், உங்களுக்கு அசதி யையும், உற்சாகமின்மையையும் ஏற்படுத்தும்.
4. அமைதியான இடத்தில் அமர்ந்து சிறிது நேரம் கண்களை மூடி தியானம் செய்யுங்கள். தினமும் காலையில் பிராணாயாமம் செய்து பழகுங்கள்.
5. கோபத்தைக் கட்டுப்படுத்துங்கள். கோபம் அடைந்தால், இரத்த அழுத்தம் அதிகரிக்கும். அதன் விளைவாக உடலில் பல்வேறு கோளாறுகள் ஏற்படும். இந்தக் குறிப்புகளை நீங்கள் பின்பற்றுவதன் மூலம், அழகு ராணிகளாய் புத்துணர்ச்சியுடன் நீங்கள் செயற்படலாம். முயற்சி செய்து தான் பாருங்களேன்!

# வாழ்க்கைத் துணையை தேர்ந்தெடுப்பது எப்படி?



காதல்; திருமணங்கள் அதிகமாகி விட்ட காலகட்டம் இது. இருந்தபோதும், சாத்திரமும், சாதி, சமூக, பொருளாதார அம்சங்களுடம் தான் திருமணப் பொருத்தத்தின் மிகப் பெரிய அம்சமாக தற்போது உள்ளது. உங்களுக்கான துணைவரைத் தேடுவதன் முதல் அம்சம் அவருடன் பேசுவதுதான். இதுவே பரஸ்பர புரிதலுக்கான முதற்படி. பேசுவது மட்டுமன்றி சற்றுப் பழகினால் மேலும் நல்லது. தெளிவாகவும் திறந்த மனத்துடனும் பேசுங்கள். பேசுவதற்கு மேலாக அவரையே நன்கு கவனியுங்கள். மகிழ்ச்சியானவரா, சிடுமூஞ்சியா, சந்தேகப் பேர்வழியா, சகசமாகப் பழகக் கூடியவரா, தெளிவாகத் தனது எண்ணங்களைப் பகிர்ந்து கொள்பவரா ஆராயுங்கள். அந்தக் குணாதிசயங்கள் உங்களது குணாதிசயங்களுடன் ஒத்துபோக கூடியதா என்பதை அனுமானித்துக் கொள்ளுங்கள், கலந்து பேசக் கூடியவராக இருப்பது அவசியம். உங்கள் இருவரிடையோ அல்லது குடும்பத்திற்குப் பொதுவானதாகவோ ஏதாவது பிரச்சினைகள் ஏற்பட்டால் அதுபற்றிக் கலந்துரையாடி முடிவு எடுக்கக் கூடியவராக இருப்பது அவசியம். ஒற்றைப் போக்கில் தானே திடீர் முடிவுகள் எடுப்பாராயின் பின்னர் பல பிரச்சினைகள் தோன்றலாம். அதே போல உங்களுக்கு ஏதாவது தனிப்பட்ட பிரச்சினை சஞ்சலம் போன்றவை ஏற்படுமாயின் அவற்றிக்குக் காது கொடுத்துக் கேட்பராக இருக்க வேண்டும். துயர் மேவி கண்ணீர் சிந்தும்போது தோள் கொடுத்து ஆதரவு அளிப்பவராக இருக்க வேண்டும். மனதில் அன்பும் ஆதரவும் நிறைந்தவரா என்பதைக் கண்டறிய முயலுங்கள். அவரது குடும்பச் சூழல் எவ்வாறானது. பெற்றோர் மற்றும் சகோதரர்களுடன் சுமுகமான உறவு இருக்கிறதா. விட்டுக் கொடுப்புடன் பழகக் கூடிய தன்மையுள்ள குடும்பச் சூழலிலிருந்து வந்தவரா போன்றவற்றைத் தெரிந்து கொள்ளுங்கள். உங்கள் இருவரிடையேயும் சிற்சில வேறுபாடுகள் இருப்பதும் வாழ்வைச் சுவாரசியமாக்கலாம். உணவு உடை நிறம் போன்ற பல சாதாரண விடயங்களில் விருப்பு வேறுபாடுகள் இருப்பதானது விட்டுக் கொடுப்பு மனப்பான்மையை வளர்க்க உதவும். அத்தோடு தினமும் விடிந்தால் பொழுதுபட்டால் வாழ்க்கை ஒரேவிதமாக அமைந்து சலிப்பு அடையாமல் இருப்பதற்கும் உதவும். நகைச்சுவை உணர்வு உள்ளவர் விரும்பத்தக்கது. தான் மட்டும் சிரிக்காமல் உங்களையும் சிரிக்க வைக்கக் கூடியவராயின் வாழ்க்கை ஓடம் சிலிர்ப்புடன் மிதந்தோடும். புகைப்பவரை அறவே ஒதுக்குங்கள். புகைப்பவராயின் வாழ்க்கைப்பயணத்தில் அரை வழியில் உங்களை விட்டுவிட்டு நோயோடும் சாவோடும் போராடி அவர் விடைபெற நேரலாம் என்பதை மறவாதீர்கள். புதிய ஒருவரைப் புரிந்து கொள்வதற்கு ஓரிரு சந்திப்புகள் போதாது. ஒரு சில மாதங்களாவது பழகிய பின்னர் தான் அவர் எப்படிப்பட்டவர் என்று கணிக்க முடியும். அதன் பின்னரே அந்த நட்பு திருமணம் மட்டும் போகலாமா எனத் தீர் மானிக்க முடியும். ஆனால் எமது சமூகச் சூழல் இன்னமும் அந்தளவு பரந்த மனப்பான்மை யுடன் இல்லை என்பதையும் புரிந்து கொள்ளவே வேண்டும். ஒருவரை ஒருவர் பார்த்துச் சிரித்தாலே முடிச் சுப் போட்டுப் பேசுவார்கள். தரகர்களும் தாய் தந்தையரும் மட்டுமே பேசி முடிவெடுக்கும் நிலைமைதான் பெரும்பாலும் இருக்கிறது. எவ்வாறாயினும் எவராவது உடனடியாக திருமணத்தை முடிக்க வேண்டும் என்று சொன்னால் சற்றுப் பொறுமையாக இருங்கள். சற்றுக் கால அவகாசம் கேட்டு பின் முடிவிற்கு வருவதே நல்லது. மருத்துவ ரீதியாக மிக நெருங்கிய சொந்தத்தில் மணம் முடிப்பது நல்லதல்ல. பரம்பரை நோய்கள் வருவதற்கான சாத்தியங்கள் அதிகமாகும்.

> உணவு உடை நிறம் போன்ற பல சாதாரண விடயங்களில் விருப்பு வேறுபாடுகள் இருப்பதானது விட்டுக் கொடுப்பு மனப்பான்மையை வளர்க்க உதவும்.





சித்திரைப் புத்தாண்டை கொண்டாடும் இந்துக்களுக்கு வட மாகாண அமைச்சர் பா.டெனீஸ்வரன் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை புத்தாண்டு சிறப்புப் பரிசாக வேட்டி, சால்வைகள் வழங்கினார். மன்னார் திருக்கேதீஸ்வரம், செல்வ நகர், தோட்டக்காடு ஆகிய கிராம மக்களுக்கு இவை வழங்கப்பட்டன. (த-56)

## போதைப்பொருள் கடத்தியவர் கைது

கொழும்பு. ஏப். 14

இந்தியாவில் இருந்து சட்டவிரோதமான முறையில் இலங்கைக்கு ஹான்ஸ் என்ற போதைப் பொருளை எடுத்து வந்தவர் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் தனது பயணப் பொதியில் 600 பைக்கெட் ஹான்ஸ் என்ற போதைப் பொருளை கொண்டு வந்துள்ளார். விமான நிலைய போதைப் பொருள் தடுப்புப் பிரிவு அதிகாரிகள் அதனைக் கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர் காத்தான்குடி பகுதியைச் சேர்ந்த 31 வயதுடையவர் என விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (த)

## ரயில் நிலையத்தில் மோட்டர் திருட்டு

வலி. வடக்கு ஏப். 14

மாவிட்டபுரம் ரயில் நிலையத்தில் வைக்கப்பட்டிருந்த நீர் இறைக்கும் மோட்டார் கடந்த சனிக்கிழமை திருடப்பட்டுள்ளதாகக் காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்தில் ரயில் நிலைய அதிபரினால் முறையிடப்பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை வலி.வடக்கு உயர் பாதுகாப்பு வலயத்தில் மாவிட்டபுரத்துக்கு அண்மையாக வுள்ள சில இடங்கள் மக்கள் மீளக்குடியேறுவதற்காக இராணுவத்தினரால் அனுமதிக்கப்பட்ட நிலையில் இந்த நீர் இறைக்கும் மோட்டர் திருட்டுப் போயுள்ளது.

இது குறித்து காங்கேசன்துறை பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டுள்ளனர். (த-86)

அனைவருக்கும் இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்
German Institute
German Swiss மொழிகள் தமிழ் மொழி பெயர்ப்புடன் A1 exam இற்கு ஏற்றவாறு நடைபெறுகின்றது.
இம்முறை பரீட்சையில் 65-87 வரை புள்ளிகள் பெற்றுள்ளார்கள்.
10, Palaly Road, Jaffna
T.P: 077 160 4823
Mrs. P.Kajenthini

# உதயங்கவைக் கைது செய்ய மேற்குலக நாடுகளின் உதவி

### கோருகின்றது அரசு

கொழும்பு, ஏப். 14

முன்னாள் ரஷ்ய தூதுவர் உதயங்க வீரதுங்கவைக் கைது செய்வதற்காக இலங்கை அரசு மேற்குலக நாடுகளிலுள்ள புலனாய்வு அமைப்புக்களின் உதவியை நாடியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இவரின் கைது நடவடிக்கைக்கு உதவி செய்யுமாறு அரசு அமெரிக்காவின் உதவியை நாடியுள்ளதா என்பது தொடர்பில் கருத்து தெரிவிக்க இலங்கையிலுள்ள அமெரிக்கத் தூதரகம் மறுப்புத் தெரிவித்துள்ளது. அத்துடன் இது குறித்து அரசிடம் கேட்டுக்கொள்ளுமாறு தூதரகம் குறிப்பிட்டுள்ளது.

உக்ரைன் கிளர்ச்சிக்காரர்களுக்கு ஆயுத விற்பனையில் ஈடுப்பட்டார் என உதயங்க வீரதுங்க மீது குற்றஞ் சுமத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பிலேயே மேற்குலக நாடுகளின் உதவி நாடப்பட்டுள்ளதாகப் பிரதி வெளிவிவகார அமைச்சர் அஜித் பி.பெரேரா தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதியின் நெருங்கிய உறவினரான அவரை விரைவில் கைது செய்வோம் என அவர் தெரிவித்துள்ளதுடன், உதயங்க குறித்து இலங்கை அரசு ரஷ்யாவிடமிருந்து தகவல்களை கோரவில்லை என்பதையும்அவர் ஏற்றுக் கொண்டுள்ளார்.

இதேவேளை, அவர் தொடர்பில் சர்வதேச தேடுதல் வேட்டையொன்றை நடத்துவதற்கு இலங்கையில் உரிய வளங்கள் இல்லை எனவும், மேற்குலக நாடுகளினால் அவரை இலகுவில் கண்டுபிடிக்க முடியும் எனவும் குறித்த விசாரணைகளுடன் தொடர்புடைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அதுமாத்திரமல்லாது அவர் உக்ரைன்கிளர்ச்சியாளர்களுக்கு ஆயுதங்களை வழங்கியவர் என்பதினால் அவர் தற்போது மறைந்திருக்கும் இடம் குறித்து மேற்கத்தேய நாடுகளின் புலனாய்வு பிரிவினர் அறிந்திருக்க கூடும் எனவும் அந்த அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர். (த)

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர் அனைவருக்கும் எமது இனிய சித்திரைப் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்



சிறிநதியா
நகைமாளிகை
இல. 01, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 021 222 2709
இல. 56, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 021 222 6744
சிறிநதியா ஸ்ரூடியோ
அன்ட் டிஜிற்றல் கலர் லாப்



108 A. நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 8412

உங்கள் A/L, O/L சித்தியுடன்
உலகத் தரம்வாய்ந்த பட்டப்படிப்பு
Courses
Top up Programs - (HND தகைமையுடன்) 9 - 12 months
B.Sc. in Comp. Science B.Com. with Comp. Application
B.Sc. in Comp.Sc. 2 -- 3 Years
B.Com. with Comp. Application
PG. Dip. in Comp. Sc. M.Sc. (1 Year)
MBA >> DBA MBA
UGC Approved Degree Certificates
LANKA CITY CAMPUS
Near NSB Bank Nelliyady.
(NSB வங்கிக்கு அருகாமையில்) Mob: 0771016524

பல்கலைக்கழகம் செல்லவேண்டும் என்ற கனவை உங்கள் A/L, O/L பெறுபேறுகள் பாதித்துள்ளனவா?
கவலையை விடுங்கள்! ஏிவிவில் பட்டதாரியாகும் வாய்ப்பு மிக அருகில்.....
ஆசிரியர்களுக்கு, காப்புறுதி, வங்கி அரசாங்க, தனியார் அலுவலர்களுக்கு விசேட ஒழுங்குகள்
NORTH LANKA I I T உடன் இணையுங்கள்!
பட்டதாரியாகுங்கள்!!
உங்கள் பட்டச்சான்றிதழ்கள்....
சர்வதேச தரம் வாய்ந்தது!
UGC அங்கீகாரமுடையது!
Courses
Top up Programs - (HND தகைமையுடன்)
9 - 12 months
B.Sc. in Comp. Science
B.Com. with Comp. Application
B.Sc. in Comp.Sc. (A/L, O/L தகைமையுடன்)
2 -- 3 Years
PG. Dip. in Comp. Sc.
M.Sc. (1 Year)
MBA >> DBA
வெகு விரைவில் B.Ed., M.Ed. ஆரம்பம்
NORTH LANKA I I T
Main Road, CHANKANA
Phone: 0214545123 Mob: 0777592б

## ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு
04 . 10 . 1991

இறப்பு
14 . 04 . 2009



### ராஜ்குமார் மதிசாயினி

சொல்ல நினைக்கின்றேன்
வார்த்தை வர மறுக்கின்றது
எழுத நினைக்கின்றேன்
கண்ணீர் பக்கத்தை நனைக்கின்றது
நீ இல்லை என்பதை நினைப்பதால்
மட்டும் இல்லை- கண்ணே
நீயும் இன்று எம்முடன் இருந்தால்
என்பதை நினைக்கும் போது...

மலர்ந்த உன் முகமும் என்றுமே
குறும்பு கலந்த உன் துடிப்பும்
"நீ" என்று அதட்டும் முன்பே
கோபம் மறைந்துவிடும் கண்ணே
நீ இல்லை என்பதைக்கூட
நினைவு படுத்துவது உன்
நினைவு நாள் மட்டுமே

மதி, மதி என நாம் வாய்நிறைய
அழைத்திடும் எம் கண்ணே
அமாவாசை நாளிலும் நீ
ஒளிர்வாயடி எம் நெஞ்சிலே மதியாக
இன்னும் எத்தனை ஆண்டானாலும்...

பாலிநகர், வவுனிக்குளம்.

குடும்பத்தினர்..

## மரண அறிவித்தல்கள்

### திருமதி ஜொய்ஸ் கருணாவதி தோமஸ்



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஜொய்சி கருணாவதி தோமஸ் நேற்று (13.04.2015) திங்கட்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.


அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி சொலமன் போல் சின்னத்தம்பி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற தோமஸின் அன்பு மனைவியும், தர்சினி ஜெயசீலன் (ஆசிரியை-சுண்டிக்குளி மகளிர் கல்லூரி) சஞ்சீவன் தோமஸ் (ஆசிரியர்-பரி. யோவான் கல்லூரி), ஆகியோரின் அன்புத் தாயும், ஜெ.கி. ஜெயசீலன் (துணை நூலகர், யாழ்ப்பாணக் கல்லூரி), மேரி டியூலா சஞ்சீவன் (ஆசிரியை-கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாலயம்) ஆகியோரின் மாமியும், காலஞ்சென்றவர்களான சோபிதமலர், விக்ரர் கிருபைராஜ் றெஜி மற்றும் அமிர்தமலர், வணக்கத்துக்குரிய S.S.கருணைராஜா ஆகியோரின் சகோதரியும், ஜெ.பி. ஜொனாதன், ஜெ.ஜெ. அஷான், அட்றியல், எபிரோன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (15.04.2015) புதன்கிழமை மாலை 3.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, கொட்டடி மெதடிஸ்த சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :
குடும்பத்தினர் சார்பாக
ஜெ.கி. ஜெயசீலன்.

### திருமதி சிவனேசம் சுப்பிரமணியம்



அல்லைப்பிட்டி முதலாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவனேசம் சுப்பிரமணியம் (11.04.2015) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபை-தங்கம்மா தம்பதியரின் மகளும், சுப்பிரமணியத்தின் (ஓய்வுநிலை அதிபர்) அன்பு மனைவியும், பூபதியம்மா, காலஞ்சென்ற செல்வநாயகி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், சிவபாலன் (பிரான்ஸ்), சுகந்தி (லண்டன்), சுபாசினி (லண்டன்), சுகுமார் (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயும், ஆனந்தி, கனகலிங்கம், சௌந்தராஜன் ஆகியோரின் பாசமிகு மாமியும், சுதர்சன், சுவேதா, சுமித்திரன், சுஜிதன், சுஜிதா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்ற தருமலிங்கம் மற்றும் பத்மநாதன் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.04.2015) புதன்கிழமை அல்லைப்பிட்டி முதலாம் வட்டாரத்தில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பி.ப 2.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக அல்லைப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

முதலாம் வட்டாரம்,
அல்லைப்பிட்டி.

தகவல் : குடும்பத்தினர்.
தொலைபேசி: 0213206028

## மரண அறிவித்தல்கள்

### வைத்திலிங்கம் அருளையா



இணுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் அருளையா நேற்று (13.04.2015) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம்-சின்னப்பிள்ளை தம்பதியரின் இளையமகனும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை-செல்லாச்சி தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்றவர்களான தியாகராஜாசுவாமிகள், அம்பலம், மாணிக்கராசா, சிவஞானம், செல்லத்துரை ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான கண்மணிஅம்மா, சிவபாக்கியம், பராசக்தி மற்றும் கனகம்மா ஆகியோரின் அன்பு மைத்துனரும், குலநாயகி (இணுவில்), பேரின்பநாயகம் (சுவிஸ்), யோகநாயகம் (முழங்காவில்), மோனநாயகம் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், பால்ராஜன் (இணுவில்), கெங்கா (சுவிஸ்), யசோதா (முழங்காவில்), ஜலந்தா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனும், சுகிரா, மதுமிதா, ஹருணிகா ஆகியோரின் அன்புத் தாத்தாவும், பிரித்தா, ஆரணி, திகழவன், கவிஸ்ணா ஆகியோரின் அன்பு அப்பப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

காரைக்கால் சிவன் வீதி,
இணுவில் கிழக்கு.
தொடர்பு: 0779927926

தகவல் :
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

### திருமதி சிவக்கொழுந்து வரதராசா (முத்தக்கா)



செட்டிக்குறிச்சி, பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவக்கொழுந்து வரதராசா 12.04.2015 ஞாயிற்றுக்கிழமை இறைபதமெய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவசம்பு-பொன்னுப்பிள்ளை தம்பதியரின் மூத்த மகளும், காலஞ்சென்ற வரதராசாவின் (ஓய்வுபெற்ற கணக்காளர்) அன்பு மனைவியும், காலஞ்சென்ற வைத்திலிங்கம்-அன்னமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும், சிறிதரன் (லண்டன்), ஜெயகௌரி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயும், ஜெயராசா (லண்டன்), ஜெயந்தி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியும், காலஞ்சென்றவர்களான மகாதேவன், சரஸ்வதி மற்றும் பகவதி, சோதிப்பிள்ளை, யோகேந்திரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், டீனுப் பிரியா, சாயினி, கார்த்திகன், அனோஜன், கவிஸ்ணன், கேசினி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், புனிதவதியார், காலஞ்சென்ற நாகராசா மற்றும் செல்லப்பர், காலஞ்சென்றவர்களான முருகையா, பாலசுப்பிரமணியம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.04.2015) புதன்கிழமை மு.ப. 10.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, தகனக் கிரியைகள் நண்பகல் 12.00 மணியளவில் சம்பில்துறை மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் : செல்லப்பா
(ஓய்வுநிலை பொலிஸ் உத்தியோகத்தர்)

### திருமதி நவம் செல்வநாயகம்



யாழ். குருநகரைப் பிறப்பிடமாகவும் நோர்வேயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நவம் செல்வநாயகம் நேற்று (13.04.2015) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அந்தோனிமுத்து-அந்தோணியாப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான அலெக்சாண்டர்-விக்ரோரியா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற செல்வநாயகத்தின் அருமை மனைவியும், காலஞ்சென்றவர்களான மேரி மாகிறேற் (செல்வம்), மேரி ஜேர்மனம்மா (இரத்தினம்), மரியதாஸ் (முத்துராசா) மற்றும் யோசப் (ரெட்ணசிங்கம்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், மதுரநாயகம் (நவநாதன்), காலஞ்சென்ற யோகநாயகம் மற்றும் நவராணி, ஜெகநாதன், ராஜநாதன், ரஞ்சநாதன், கிளி, சுமில்ரன் ஆகியோரின் அன்புத் தாயும், மேரி கிப்பொலிற்றா, சின்னக்கிளி, அல்போன்ஸ், சுபத்திரா, ரீனா, எமிலி, சந்துள்ளா ஆகியோரின் அருமை மாமியும், நிரோஷன், சுஜந்தா, யூஜின், சுஜி,சுபோ, ஜெர்னா, ஜொனி, ஸ்கொட், றஜன், ஜொணாத்தன், யோணாஸ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், அலெக்சாண்டர், அத்தி, அபி, ஐசாக், டானியல், ஜொஸ்னி ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் நல்லடக்கம் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :
S.A.A. மதுரநாயகம்

தொடர்பு:
S.A.A. மதுரநாயகம் : 0778806945, 0212222959
ஜெகா: 004722570674
கிளி : 004722655395, 004795088963
நவராணி: 004722216904
சின்னக்கிளி: 0033160253570
நிரோஷன்: 0061450213712
யூஜின்: 0014165747284

## அரசியலில் இருந்து ஒதுங்க கருவும் ஜோனும் உத்தேசம்

கொழும்பு, ஏப். 14

ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட அரசியல்வாதிகளான கரு ஜயசூரிய மற்றும் ஜோன் அமரதுங்க ஆகியோர் அடுத்த பொதுத்தேர்தலில் போட்டியிடாமல் அரசியலில் இருந்து ஓய்வுபெறத் தீர்மானித்துள்ளதாகக் கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

தற்போதைய அரசு முன்னெடுத்து வரும் அரசியல் சூழ்நிலை குறித்து கரு ஜயசூரிய விரக்தியடைந்துள்ளதாகவும் கூறப்படுகின்றது.

அத்துடன், பொதுத் தேர்தலின் பின்னர் அரசியலில் இருந்து ஓய்வுபெறத் தயாராகும் ஜோன் அமரதுங்க, தனக்கு இத்தாலியில் உள்ள இலங்கைத் தூதரகத்தின் தூதுவர் பதவியைப் பெற்றுத் த[illegible]மாறு பிரதமரிடம் கேட்டு கொண்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை– ஐக்கிய தேசியக் கட்சியின் காமினி ஜயவிக்ரம பெரேரா மற்றும் ஜோசப் மைக்கல் பெரேரா ஆகிய இருவரும் பொதுத் தேர்தலின் பின்னர் அரசியலில் இருந்து ஓய்வுபெறத் தயாராகி வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

பதவியில் இருந்து ஓய்வு பெற்றதன் பின்னர் தங்கள் மகன்மாரை எதிர்வரும் பொதுத் தேர்தலில் களமிறக்குவதற்கு இவர்கள் திட்டமிட்டுள்ளதாகவும் சில அரசியல் தகவல் வட்டாரங்கள் சுட்டிகாட்டியுள்ளன. (த)

## மிதக்கும் ஆயுதக் களஞ்சியம்; இவ்வாரம் வருகிறது அறிக்கை

கொழும்பு, ஏப். 14

மிதக்கும் ஆயுதக் கப்பல் களஞ்சியம் தொடர்பிலான அறிக்கை இந்த வாரத்தில் சமர்ப்பிக்கப்பட உள்ளதாகப் பா[illegible]காப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்த்தன தெரிவித்துள்ளார்.

கடந்த ஜனவரி மாதம் காலிக் கடற்பரப்பில் இந்த மிதக்கும் ஆயுதக் கப்பல் களஞ்சியம் கண்டு பிடிக்கப்பட்டது.

குறித்த ஆயுதக் களஞ்சியம் தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்க உள்ளனர்.

அவன்ட் கார்ட் நிறுவனத்தினால் இ[illegible] ஆயுதக் களஞ்சியம் பராமரிக்கப்பட்டு வந்ததாதகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த ஆயுதக் களஞ்சியம் தொடர்பில் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, முன்னாள் கடற்படைத்தளபதி உள்ளிட்ட பல்வேறு நபர்களிடம் விசாரணை நடத்தப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறுவதைத் தடுக்கும் வகையில் நடவடிக்கை எடுக்[illegible]பட உள்ளதாகத் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார். (த)

## கிராம அலுவலர்களுக்கு சமாதான நீதிவான் பதவி

*வழங்க ஜனாதிபதி தீர்மானம்*

கொழும்பு, ஏப். 14

நாட்டின் சகல கிராம உத்தியோ[illegible]தர்களுக்கும் சமாதான நீதிவான் பதவிகளை வழங்க ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தீர்மானித்துள்ளார்.

கிராம உத்தியோகத்தர் சேவை தொடர்பில் மக்கள் மத்தியில் காணப்படும் வரவேற்பை மேம்படுத்தும் நோக்கில் இவ்வாறு தீர்மானித்ததாக அவர் தெரிவித்துள்ளார்.

அண்மையில் பொலனறுவையில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பங்கேற்றபோது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அரச சேவையை காத்திரமானதும் வினைத்திறனானதுமான வகையில் மேற்கொள்ள சகல ஏற்பாடுகளும் செய்யப்படும் என அவர் கூறினார்.(த)

# சாதித்தது மைக்கல்

## சொந்த மண்ணில் சுருண்டது கம்பன்ஸ்



கரணவாய் ஏப். 14

கரவெட்டி பிரதேச மட்டக் கபடித் தொடரின் இறுதியாட்டத்தில் பலத்த போராட்டத்தின் பின்னர் கம்பர் மலை யங்கம்பன்ஸை 5 புள்ளிகளால் வீழ்த்தி இந்த வருடச்சம்பியனாகியது மாலி சந்தி மைக்கல் விளையாட்டுக்கழகம்.

கரடிவெட்டி பிரதேச செயலகத்துக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான கபடித் தொடரின் இறுதியாட்டம் நேற்றுமுன்தினம் கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது. இந்த இறுதியாட்டத்தில் மாலிசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகமும் கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழகமும் மோதின.

சொந்த மைதானத்தில் விளையாடுவதால் பார்வையாளர்களின் ஆதரவுடன் கம்பர்மலை களமிறங்கினாலும் அவர்களைச் சொந்த மைதானத்தில் வீழ்த்த வேண்டும் என்ற முனைப்புடன் மைக்கல் அணி மோதியதாலும் இரு அணிகளின் ஆட்டங்களிலும் அனல் பறந்தது. எதிர்பார்ப்புக்கிணங்க இரு அணியினரும் சமபலத்துடனே விளையாடிக் கொண்டிருந்தன. ஆட்டத்தின் இரண்டாம் பாதியில் மைக்கல் கழகம் ஆட்டங்களில் சற்று நுணுக்கங்களைக் கடைப்பிடிக்க 63:58 என்ற புள்ளிகளைப் பெற்று மைக்கல் விளையாட்டுக்கழகம் இவ்வருட சம்பியனாகியது. (த-ரி-108)

## கலைமகள் புதுவருட விழா இன்று கழக மைதானத்தில்


கரணவாய் ஏப். 14

வவுனியா கலைமகள் சனசமூக நிலையமும் கலைமகள் விளையாட்டுக் கழகமும் இணைந்து நடத்தும் 31ஆவது சித்திரைப் புத்தாண்டு விளையாட்டுவிழா இன்று பிற்பகல் 2 மணிக்கு கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

சனசமூக நிலையத் தலைவர் இ.செல்வராசா தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண சுகாதார அமைச்சர் வைத்தியர் ப.சத்தியலிங்கமும், சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாணசபை உறுப்பினர் ம.தியாகராசா, வவுனியா நகர சபை செயலாளர் கே.சத்தியசீலன், ஓய்வு நிலை வங்கி முகாமையாளர் க.சிவபாலன், பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் ந.சிறீஸ்காந்தராசா, சித்த ஆயுள்வேத வைத்தியர் ப.சத்தியநாதன் மற்றும் வைரவப் புளியங்குளம் கிராம அலுவலர் தி.கனகலிங்கம் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இன்றைய நிகழ்வில் 15 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான தடை ஓட்டம், 15 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான நிதான ஓட்டம் 10 வயதுக்குட்பட்ட இருபாலாருக்கான 100மீற்றர் 50 மீற்றர் ஓட்டம் திருமணமாகாத பெண்களுக்கான முட்டிபாதுகாத்தல், வினோத உடை, சங்கீதக் கதிரை மற்றும் கரப்பந்தாட்ட இறுதியாட்டம் என்பனவும் இடம்பெறவுள்ளன. (த-ரி-108)

## விக்ரோறியாவும் மகாஜனவும் வலிகாமத்தில் மகுடம் சூடின



யாழ்ப்பாணம். ஏப். 14

வலிகாமம் கல்வி வலய பாடசாலைகளுக்கு இடையிலான 19 வயதுப்பிரிவு ஆண், பெண் இருபாலாருக்குமான கரப்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் ஆண்கள் பிரிவில் சுழிபுரம் விக்ரோறியாக்கல்லூரி அணியும், பெண்கள் பிரிவில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணியும் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றின.

பெண்கள் பிரிவு

கடந்த சனிக்கிழமை சுழிபுரம் விக்ரோறியாக்கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற பெண்களுக்கான இறுதியாட்டத்தில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணியை எதிர்த்து வயாவிளான் மத்திய மகா வித்தியாலய அணி மோதிக் கொண்டது. 3 செற்களைக் கொண்ட இறுதியாட்டத்தில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணி 2:0 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று சம்பியன் ஆனது. மூன்றாம் இடத்திற்கான ஆட்டத்தில் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி அணியை எதிர்த்து அளவெட்டி அருணோதயக் கல்லூரி அணி மோதிக்கொண்டது. இதில் அளவெட்டி அருணோதயக் கல்லூரி அணி 2:0 என்ற செற்கணக்கில் வெற்றிபெற்று மூன்றாமிடத்தைத் தனதாக்கிக் கொண்டது.

ஆண்கள் பிரிவு

ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் சுழிபுரம்விக்ரோறியாக் கல்லூரி அணியை எதிர்த்து வயாவிளான் மத்திய மகாவித்தியாலய அணி மோதிக்கொண்டது. 3 செற்களைக் கொண்ட இறுதியாட்டத்தில் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி அணி 2:0 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் ஆனது. மூன்றாமிடத்திற்கான ஆட்டத்தில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணியை எதிர்த்து சுன்னாகம் மெய்கண்டான் மகா வித்தியாலய அணி மோதிக் கொண்டது. 3 செற்களைக் கொண்ட இந்த ஆட்டத்தில் தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரி அணி 2:0 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று சம்பியனானது. (த-ரி-23)

## வெற்றிக் கிண்ணங்கள் அள்ளியது யங்ஸ்ரார்

யாழ்ப்பாணம் ஏப். 14

வவனியா பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையில் நடத்தப்பட்ட பெண்களுக்கான கபடி, எல்லே, வலைப்பந்தாட்டம் ஆகிய மூன்று தொடர்களிலும் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றுச் சம்பியன் ஆனது.

வவுனியா நகரசபை மைதானத்தில் இடம்பெற்ற எல்லே தொடரின் இறுதியாட்டத்தில் யங்ஸ்ரார் விளயாட்டுக் கழக அணியை எதிர்த்து இறம்பைக்குளம் பமிலியன் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய இறம்பைக்குளம் பமிலியன் விளையாட்டுக்கழக அணி எதுவித ஓட்டங்களையும் பெறவில்லை. பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக அணி ஓர் ஓட்டத்தைப் பெற்றுச் சம்பியன் ஆனது.

வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற வலைப்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் இறம்பைக்குளம் பமிலியன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. இந்த ஆட்டத்தில் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக அணி 18:3 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றுச் சம்பியன் ஆனது.

தொடர்ந்து இடம்பெற்ற கபடித் தொடரின் இறுதியாட்டத்தில் இறம்பைக்குளம் பமிலியன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. இதில் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக அணி 24:8 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றியது. (ரி-23)

## சென்றலைட்ஸ் அதிரடி அதிர்ந்தது ஜொலிஸ்ரார்

யாழ்ப்பாணம். ஏப். 14

மயூரனின் அசத்தலான பந்துவீச்சு கைகொடுக்க ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழக அணியை 84 ஓட்டங்களால் இலகுவாக வெற்றிகொண்டது சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழக அணி.

இலங்கைக் கிரிக்கெட்டின் மூன்றாம் பிரிவுக்கான 50 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட கிரிக்கெட் தொடரின் முதல்கட்ட சுற்றின் விலகல்முறையிலான ஆட்டமொன்றில் சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழக அணி நேற்றுமுன்தினம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் மோதிக் கொண்டது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழக அணி 37.4 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 221 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக செல்ரன் 61 ஓட்டங்களையும், மயூரன் 27 ஓட்டங்களையும், விஜேந்குமார் 25 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழக அணி சார்பில் சிவலக்சன் 34 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும், அருண் 11 ஓட்டங்களுக்கு 4 இலக்குகளையும் விழ்த்தினர். 222 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் பதிலுக்கு துடுப் பெடுத்தாடிய ஜொலிஸ்ரார் விளை யாட்டுக்கழக அணியினர் 30.4 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 137 ஓட்டங்களை மட்டும் பெற்றனர். அதிகபட்சமாக தீபன் 44 ஓட் டங்களையும், மதுஷன் 37 ஓட்டங்களையும், கஜானந் 32 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழக அணிசார்பில் மயூரன் 6 இலக்குகளையும், கோகுலன் 2 இலக்குகளையும் வீழ்த்தினர். (த-ரி-23)

## கொலின்ஸ், யங்கம்பன்ஸ் அபாரம்



யாழ்ப்பாணம், ஏப். 14

கரவெட்டி பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையிலான ஆண்களுக்கான உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் கரணவாய் கொலின்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் சமீபகாலமாக இடம்பெற்று வருகின்றது.

இந்தத் தொடரில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற ஆட்டங்களில் கொலின்ஸ் விளையாட்டுக் கழகம், யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழகம் ஆகியவை வெற்றி பெற்றுள்ளன.

முதலாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் டயமன்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கொலின்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. இரண்டு அணியினரும் ஆட்ட நேர முடிவில் எதுவித கோல்களையும் பெறாததனால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. ஆட்டம் வெற்றி தோல்வி காண்பதற்காக சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன. இதில் கொலின்ஸ் விளையாட்டுக்கழக அணி 5:4 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

தொடர்ந்து இடம்பெற்ற மற்றொரு ஆட்டத்தில் யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கெற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. இதில் யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழக அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (த-ரி-23)




யாழ்ப்பாணம் தேசியக் கல்வியியற் கல்லூரியின் இல்ல மெய் வல்லுநர் விளையாட்டுப் போட்டி அண்மையில் நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராக வடமாகாண சபையின் உறுப்பினர் த.சித்தார்த்தனும் சிறப்பு விருந்தினராக க.எ.எஸ்.பி. நாகரத்தினமும் கலந்துகொண்டனர். (ரி)



## ஆஸியை நினைத்தால் அவமானமாக உள்ளது

கிரிக்கெட்டில் ஜாம்பவானாகவும் ஒரு நாள் ஆட்டத்தின் நடப்புச் சம்பியனாகவும் திகழும் அணி ஆஸ்திரேலியா. ஆனால் ஆஸ்திரேலியா இதுவரை ஒரு ரி–20 உலகக் கிண்ணத்தையும் கைப்பற்றவில்லை. இது வெட்கக் கேடானது என்று ஆஸியின் வேகம் ஜோன்சன் தெரிவித்துள்ளார்.

2007ஆம் ஆண்டு அரையிறுதியில் இந்தியாவிடம் தோல்வியடைந்து வெளியேறியமையும், 2010ஆம் ஆண்டு இறுதியாட்டத்தில் இங்கிலாந்திடம் தோற்றதுமே ஆஸியின் அதி உயர் பெறுபேறாகும்.

இந்த நிலையில் 'ரி–20' உலகக்கிண்ணத்தை ஆஸ்திரேலியா இதுவரை வெல்லாதது அவமானம் என்று முன்னணி வேகப்பந்து வீரரான மிச்சேல் ஜோன்சன் கூறியுள்ளார். இது தொடர்பாக அவர் தெரிவித்ததாவது– 'இதுவரை 5 தடவைகள் 'ரி–20' உலகக்கிண்ணத்தொடர் நடைபெற்றும் ஆஸ்திரேலியா கிண்ணம் வெல்லாதது அவமானமே.'ஐ.பி.எல். தொடரில் விளையாடுவதன் மூலம் வீரர்களின் திறமை அதிகரிக்கிறது. இனி வரும் காலங்களில் 'ரி–20' உலகக் கிண்ணத்தை வெல்ல ஆஸ்திரேலியா போராடும்.' என்றார். (த–ரி)

## என்னத்தைச் சாப்பிடுறார்



பஞ்சாப்புடனான லீக் ஆட்டத்தில் ஹர்பஜன்சிங்கின் ஆட்டம் குறித்து நகைச்சுவையாகக் கிண்டல் அடித்துள்ளார் பஞ்சாப்பின் நட்சத்திரம் சேவாக்.

நடப்பு ஐ.பி.எல். தொடரில் நேற்று முன்தினம் நடைபெற்ற லீக் ஆட்டமொன்றில் பஞ்சாப் மற்றும் மும்பை அணிகள் பலப் பரீட்சை செய்தன. இந்த ஆட்டத்தில் 178 ஓட்டங்களை வெற்றியிலக்காக நிர்ணயித்தது பஞ்சாப். ஆனால் மும்பையோ ஒரு கட்டத்தில் 59 ஓட்டங்களுக்கு 6 இலக்குகளை இழந்து தவித்தது. இந்த நிலையில் களமிறங்கிய ஹர்பஜன்சிங் அணியின் இக்கட்டான நிலைமைகளைப் பொருட்படுத்தாமல் அடித்து நொறுக்கினார். வாணவேடிக்கைகள் தொடர்ச்சியாக நடைபெற்றது. இது தொடர்பாக சேவாக் 'ஹர்பஜன்சிங் என்ன சாப்பிட்டாரோ தெரியவில்லை. இப்படி அடித்து நொறுக்கினார். அவருக்கு பைத்தியம் பிடித்து விட்டதைப்போல் இருந்தது. ஹர்பஜனுடன் பல ஆண்டுகாலமாக நட்புடன் உள்ளேன். ஆனால் அவரால் இப்படி அடித்தாட முடியும் என்பதை இன்றுதான் (நேற்று முன்தினம்) உணர்ந்தேன் என்று தெரிவித்துள்ளார். (த–ரி)

## கோஹ்லியே இந்தியாவின் எதிர்காலம்

விராட் கோஹ்லி இந்திய அணியின் எதிர்காலம், அவர் அதற்கான திறமைகளைக் கற்றுக் கொண்டு வருகிறார் என்று ஆஸ்திரேலிய முன்னாள் வீரர் டீன் ஜோன்ஸ் தெரிவித்துள்ளார்.

ஆஸியின் தனியார் தொலைக் காட்சியொன்றுக்கு அவர் அளித்த பேட்டியில் தெரிவித்ததாவது 'விராட் கோஹ்லி தான் இந்தியாவின் எதிர்காலம் என்பது தெளிவு. தனது மதிப்பை நிரூபிக்கும் அனைத்து திறமைகளும் அவரிடத்தில் உள்ளது. உலகக்கிண்ண தொடர்களில் அவர் சரியாக ஆடாததால் அவரது திறமைகளை அவரிடமிருந்து பறித்து விடமுடியாது. கோஹ்லியின் உண்மையான மதிப்பு 2019 இல் நடைபெறும் அடுத்த உலகக் கிண்ணத் தொடரின் போது தெரிய வரும்.சர்ச்சைகள் விவகாரத்தில் அதனைக் கையாள்வதில் கோஹ்லி நிச்சயம் முதிர்ச்சியடைவார். சர்ச்சைகளை இப்போது போலல்லாமல் இன்னும் கொஞ்சம் மேம்பட்ட நிலையில் கையாள்வார் என்று எதிர்பார்க்கலாம்' என்றார். (த–ரி)



## ஐ.சி.சி என்றால் பயம்



கடந்த வருடம் இந்திய அணி, இங்கிலாந்து சென்றிருந்த போது டெஸ்ட் ஆட்டமொன்றில் ஜ... ஜாவைத் தள்ளிவிட்டதாக அண்டர்சன் மீது குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது. இந்த சம்பவமே கடந்த உலகக்கிண்ண தொடரில் தன்னால் சிறப்பாக செயற்படாமல் போனதுக்கு காரணம் என்று அண்டர்சன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அண்டர்சன் தெரிவித்ததாவது இந்தச்சம்பவத்துக்குப்பின்னர் ஐ.சி.சி தன்னைக்க... காணிப்பதுபோன்ற உணர்வு எனக்குள் ஏற்பட்டது. என்னைநானே வித்தியாசமாக உணர ஆரம்பித்தேன். என்னில் இருந்த ஆக்ரோசம் ஐ.சி.சி. என்னைக் கண்காணிக்கின்றதோ என்ற அச்சத்தினாலேயே இல்லாமல் போனது. ஜடேஜா விவகாரம் நடந்திருக்காவிட்டால் வக்காப் ரியாஸி... நடந்ததைப்போல ஐ.சி.சி எனக்கும் அபராதம் விதித்திருக்கும். ஜடேஜாவுடன் ஏற்பட்ட முரண்பாடு ஒரு விபத்து. அதை நான் மறந்து வி...டேன் என்றார். (...

## புதிய பயிற்றுவிப்பாளர் இந்தியாவுக்கு விரைவில்

இந்திய கிரிக்கெட் அணியின் தற்போதைய பயிற்றுவிப்பாளராக இருப்பவர் டங்கன் பிளட்சர். இவரின் ஒப்பந்தக்காலம் கடந்த உலகக் கிண்ணத் தொடருடன் முடிவுற்ற நிலையில் இவருக்கு பதிலான புதிய பயிற்சியாளர் யார் என்ற விபரத்தை எதிர்வரும் 26ஆம் திகதி உத்தியோகபூர்வமாக அறிவிப்பதாக இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை தெரிவித்துள்ளது.

புதிய பயிற்றுநருக்காக பல்வேறு இந்தியப்பிரபலங்கள் ஒவ்வொருவரை சிபார்சு செய்துள்ளனர். இந்த சிபார்சுகளில் கங்குலியின் பெயரும் உள்ளடங்குகின்றமை குறிப்பிடத்தக்கது. (த–ரி)

## மீண்டு எழுவோம்



நடப்பு ஐ.பி.எல் தொடரில் டெல்லி அணி சந்திக்கும் ஆட்டங்களில் எல்லாம் தோல்வியடைந்து வருகிறது. இந்தத் தோல்விகளுக்கு பிரதான காரணம் வேகப்பந்துவீச்சாளர்களான ஷகீர்கான், மொகமட் சமி ஆகியோர் காயம் காரணமாக அணிக்கு திரும்பாமல் இருப்பதனாலேயே என்று தெரிவிக்கப்பட்ட நிலையில் அவர்களின் காயம் இன்னமும் குணமடையவில்லை என்று தகவல் வெளியாகியுள்ளது.

இது தொடர்பாக டெல்லி நிர்வாகம் தெரிவித்ததாவது 'பதினொரு வீரர்களைக் கொண்ட அணிக்கு இருவரும் திரும்பிவர நாங்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். அவர்கள் அணிக்கு திரும்பினால் பந்துவீச்சு மேலும் வலுப்பெற்று வெற்றிபெற அதிக வாய்ப்பு ஏற்படும். எங்களுடைய சுழற்பந்து வீச்சாளர்கள், இளம் வேகப்பந்து வீச்சாளர்களின் செயல்பாடுகள் மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது. இனி வரும் ஆட்டங்களில் அணி முழுமையான பலம்பெறும்.' என்று தெரிவித்துள்ளது. (த–ரி)




Personal Class
இரசாயனவியல்
சி.அனோஜன் BSc (Chem.Sp)
35 வருட வினாத்தாள் கற்பிக்கப்படும்.
தொடர்பு: 077 078 1451

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 14.04.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.


30
அகவையில்
உதயன்
சித்திரைப் புத்தாண்டு
சிறப்பிதழ்


கோணேஸ்வரனின் ஜேர்மன் கல்லூரி
German Language Academy
DEUTSCH
SRI LANKA
எமது கல்லூரி மாணவர்கள்
மற்றும் அனைத்து மாணவர்களுக்கும்
எமது நிறுவனத்தின் சார்பில்
இனிய புதுவருட நல்வாழ்த்துக்கள்
ஆசிரியர்: S. கோணேஸ்வரன்
0779707322
எமது நிறுவனம் சார்பான விளக்கங்களை உள்ளே பக்கம் IX பார்க்கலாம்


வடக்கில் பிரமாண்டமான திருமண அழைப்பிதழ்களின் காட்சியறைகள்
Exclusive Wedding Cards
எமது பாரம்பரியங்களை
வெளிப்படுத்தும் வகையில்,
மிகவும் அழகான வடிவமைப்புக்களுடன் கூடிய
புதிய அழைப்பிதழ்களையும்,
உங்கள் விருப்பங்களுக்கேற்ப
அழைப்பிதழ்களை பிரத்தியேகமாக
வடிவமைத்தும் பெற்றுக்கொள்ளலாம்.
Web : www.andradesigns.com
ANDRA
WEDDING CARDS
யாழ்ப்பாணம் - கிளிநொச்சி
தொடர்புகளுக்கு : 021 2228929 / 077 6622981 / 077 2200148

அனைவருக்கும் எமது இனிய சித்திரைப் புதுவருட வாழ்த்துக்கள்

# யாழ் நகரில்

PEARSON | UNIVERSITY OF WOLVERHAMPTON KNOWLEDGE • INNOVATION • ENTERPRISE | London South Bank University

## edexcel HNDs IN...

- Quantity Surveying
- Civil Engineering
- Biomedical Science
- Business Management
- Computing



**சவால்களை வெல்லும் சர்வதேச கல்வித் தகைமைகள்**

Leading to BSc (Hons) / BA (Hons) / B Eng (Hons) from more than 105 Universities in UK, USA, Australia & Canada etc...

உயர் கல்வித் துறையில் 16 வருட சிறந்த அனுபவத்துடன் இலங்கையின் முதற்தர உயர்கல்வி நிறுவனமாக தெரிவு செய்யப்பட்டுள்ள BCAS CAMPUS இன் யாழ் வளாகத்தில் உயர் தேசிய டிப்ளோமா (HND) தொடர்வதற் கான வாய்ப்பு.

மேலுள்ள துறைகளில் (HND) ஐ நிறைவு செய்யும் மாணவர்கள் இலங்கையில் அல்லது 105 இற்கு மேற்பட்ட பிரித்தானிய, அமெரிக்க, ஆஸ்திரேலியா மற்றும் கனடா போன்ற நாடுகளின் தலை சிறந்த பல்கலைக்கழகங்களில் தமது பட்டப் படிப்பின் இறுதியாண்டினை பூர்த்தி செய்வதற்கான வாய்ப்பு.

கடந்த 15 வருடங்களில் (HND) உயர்கல்வி வழிமுறையூடாக (Pathway) சர்வதேச பட்டப்படிப்புகளை பூர்த்தி செய்து இலங்கையிலும் வெளிநாடு களிலும் உயர் தொழில் வாய்ப்புக் களை பெற்றுக் கொண்ட ஆயிரக் கணக்கான மாணவர்களைப் போன்று நீங்களும் வெற்றியாளர் ஆகலாம்.



BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES

16, Point Pedro Road, Jaffna.
Tel : 021 221 9910
**Hotline : 077 710 2131**

15 YEARS of Trust & Excellence in Higher Education

www.bcas.lk

Colombo | Mt.Lavinia | Kandy | Batticaloa | Kurunegala | Ampara | Jaffna | Qatar

# 2015 புத்தாண்டு ஆசிச் செய்திகள்



## அருளாசிச் செய்தி

இன்று புத்தாண்டுத் திருநாள். இது தமிழ் மக்களின் பெருநாள். இது ஒரு புனித புண்ணிய மகோன்னத மகத்துவம் நிறைந்த நன்னாள். இன்று பிறந்திருக்கும் இந்தச் சித்திரைப் புததாண்டுக்கு மன்மத வருடம் என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது. இற்றை நாள்வரைபட்ட துன்பங்களும் துயரங் களும் இன்னல்களும் இடுக்கண்களும் அறவே நீங்கி, எல்லோருமே இனிய இன்ப நல் வாழ்வில் அனைத்து மக்களும் மூழ்கித் திளைத்து வளம்பெற வேண்டுமென்று அருளாசிகள் நல்கி இறையருளை வேண்டி உளமாரப் பிரார்த்தித்து வாழ்த்தி மகிழ்கின்றோம்.

'பழையன கழிதலும் புதியன புகுதலும்' நன்மையே என்ற வகையில் இன்று முதல் இனிமேலாவது இலங்கை வாழ் மக்கள் அனைவருமே ஆனந்த நல்வாழ்வில் திளைத்திருக்க வேண்டுமென்று இறையருளை உளமாரப் பிரார்த்தித்து நல்லைக் குருமணியையும் வணங்கி ஆசி நல்கி மனமுவந்து வாழ்த்தி மகிழ்கின்றோம்.


கலியுக வரதனாம் கந்தப் பெருமானுடைய பரிபூரண கிருபாகடாட்சம் எமது நாட்டில் வாழும் அத்தனை மக்களுக்கும் கிடைத்து, சந்தோஷ சமாதான சமத்துவ நல்வாழ்வில் அமைதியுடன் சிறப்புற்றுத் திகழ வாழ்த்துகின்றோம்.

*'என்றும் வேண்டும் இன்ப அன்பு'*

**- ஆதீன குருமுதல்வர்.**

## எல்லோருக்கும் சுகம் கிட்டட்டும்

மன்மத ஆண்டு என்பது இந்த ஆண்டின் திருப்பெயராகும். மழை மிதமாகும். ஆங்காங்கே உணவு தானியக் கட்டுப்பாடு வரலாம். தானியங்களின் விலை உயர வாய்ப்பு உண்டு. இந்த ஆண்டின் வெண்பா எல்லோருக்கும் சுகம் கிடைக்கும் என்று சொல்கிறது.



இந்த ஆண்டின் தெய்வம் பலபத்திரன், பசுக்களின் நாயகன். பலபத்திரன் இந்த மன்மத வருடத்திற்கு நவநாயகர்களாக வருவதால் நல்ல மழையும், மத்திய மாகாண அரசுகளில் நிலையான ஆட்சியும் நிலைக்கும். மக்களிடையே வேறுபாடுகள் வளரும் என்று இந்த ஆண்டின் பஞ்சாங்க பலன் சொல்கின்றது. 60 ஆண்டுகளுக்கு முன்பு வந்த மன்மத ஆண்டின் பலன் இது தான். இப்போது வருகின்ற மன்மத ஆண்டின் பலனும் இது தான்.

மக்கள் எல்லாம் அறிவு நிறைந்து பேரறிவோடு பிரகாசிக்க வேண்டும். சொற்களை அளவறிந்து , அன்பு மயமாய்ப் பயன்படுத்த வேண்டும். உலகிலேயே இலங்கை அழகான நாடு. எவரையும் குறை சொல்லாத நாடு. கடவுள் உணர்வை, கடவுள் சுகத்தை அனுபவித்து பேரின்பம் அடையும் மார்க்கம் உண்டு. அதற்கு மதம் என்று பெயர். மதம் என்ற சொல்லுக்கு கடவுளை அறிதல், கடவுளை உணர்தல் என்று பொருள். இதற்கு தாழ்ந்த பொருள் கொள்ளக் கூடாது. கடவுளை உணர்வோர் , கடவுளை அறிந்தோர் மிகச்சிறந்த ஒழுக்கமுள்ளவர்கள் ஆவர். இலங்கையில் இருக்கும் அத்தனை மக்களும் சிறந்த ஒழுக்கத்தோடு வாழ வேண்டும். எல்லா மக்களும் தினமும் இறைவனை நோக்கி உலகப் பேரமைதிக்காக தியானம் செய்ய வேண்டும். ஜெபம் செய்யலாம். மெய்ப்பொருளை பிரார்த்தனை செய்யலாம். எல்லாம் வல்ல ஜெகன்மாதா சிறி முத்துமாரி அம்பிகையை ஆழ்ந்து சிந்தித்து அடியேனின் அருளாசியை இந்த மன்மத ஆண்டில் வழங்குவதில் யாம் எல்லையற்ற மகிழ்ச்சி அடைகின்றோம். எல்லோருடைய வாழ்விலும், வெற்றியும் சுகங்களும் மலைபோல் குவியட்டும்.

***லோகா சமஸ்தா சுகினோ பவந்து***
***இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க***
***குருப் பட்டாபிஷேக ஞானகுரு பானு***

**சிவஸ்ரீ சோமஸ்கந்த தண்டபாணிக தேசிகர் ஜே.பி**
*இந்து மத குரு பீடாதிபதி, பிரதமகுரு*
*வல்வை ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானம், வல்வெட்டித்துறை .*

## "பேறுடன் பிறப்பாய் மன்மதா!"

மன்மத அழகா, மானிட எழிலே, என்மனம் குழைய நீ எழுந்தருள்வாய், பெண்மனம் இனியென்ன பெருவாழ்வுதானே, பொன்மனம் தருகவே பிள்ளைகள் கரைசேர.

இன்னமும்– இடம் பெயர்ந்தவர்– போகவில்லை, ஈன்றவர் நெஞ்சில் ஈரமோ காயவில்லை, முன்னமே இதுபற்றி தெரிந்திருந்தாலும் மூடிமறைக்காமல் முன்னுரிமை கொடுப்பாய். புண்ணாகிப் போன தமிழ் மண்ணிலே புருஷன்மார்களை இழந்தவர்களோ எண்பதினாயிரம், பெண்ணாகிய அவர்களுக்கு என்ன செய்யப் போகிறாய்? பெறுமதியாய் நிலைபெறப்பேறுடன் பிறப்பாய். தண்ணீரும் நஞ்சாகிப் போய்ச்சுதே தமிழ் மண்ணிலே கண்ணீரே மிச்சமாய்சுதோ? அண்ணனோ தம்பியோ உறவும் போனதே! ஆணழகா மன்மதா அதிகாரமோடு பிறந்து வா!

**- கே.எஸ்.சிவஞானராஜா**

## புது வருட வாழ்த்து

மலரும் மன்மத வருஷ புத்தாண்டில், தமிழ் மக்கள் கடந்த காலத்தில் அனுபவித்த-துன்பங்களிலிருந்து விடிவு பெற்று மன நிறைவுடன் சுதந்திர புருஷர்களாக வாழ வழிதிறக்க வேண்டும் என ஸ்ரீ சிவகாமசுந்தரி சமேத ஸ்ரீமத் நடராஜப் பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.

பல்வேறு முரண்பாடுகளால் சிதறுண்டுள்ள தமிழ் சிங்கள மக்கள் புத்தாண்டை இணைந்து கொண்டாடுவதன் மூலம் இம் முரண்பாடுகளுக்கு முடிவேற்படட்டும். கடந்த போர்ச் சூழலில் எத்தனையோ குடும்பங்கள் தமது உறவுகளை இழந்து வாழ்வதோடு இருப்பிடங்களை விட்டு இடம் பெயர்ந்தும் அல்லற்படுகின்றனர். இவர்களின் நல்வாழ்விற்காகப் பிரார்த்திப்பதோடு எம்மால் இயன்ற உதவிகளை வழங்குவோமாக. தீர்க்கப்படாத தமிழ் மக்களின் நீண்ட நாள் பிரச்சினைக்களை அரசியல் குரோதங்களை மறந்து தீர்ப்பதற்குரிய மனோபலத்தை அரசியல் தலைவர்களுக்கு இறைவன் வழங்கவேண்டும் எனப் பிரார்த்திப்போமாக.

**சி.சக்திகிரீவன்,**
***கௌரவ செயலாளர், இந்து சமயப் பேரவை யாழ்ப்பாணம்.***

## யாழ்.ஆயரின் ஆசிச்செய்தி



மீண்டும் ஒரு புதிய வருடம் எமக்குக் கிடைத்திருக்கின்றது. தமிழ் சிங்கள மக்களின் புத்தாண்டாக இது கருதப்படும் வேளையில் புதிய மாற்றங்களும் புதுப்புதுநன் மைகளும்,நல் ஆசீரகளும் எமக்கும் எம் நாட்டிற்கும் கிடைக்க இறைதுணைவேண்டுகின்றேன்.


பல்வேறுபட்டபயங்கரங்கள், துன்பங்கள், ஏமாற்றங்கள்,எம்மையும்,எம் குடும்பங்களையும்,எம் நாட்டையும் இன்னும் விட்டு அகலவில்லை. மக்கள் இன்றும் வாழ்க்கையில் பல கேள்விக் குறிகளோடு தம் வாழ்வை வாழவேண்டி உள்ளது.

மலரும் இப்புதுவருடம் எல்லோரது வாழ்விலும் நன்மைகளையும்,நல் முன்னேற்றத்தையும் தருவதாகஅமைவதாக.

எல்லோருக்கும் எனது புது வருட வாழ்த்துக்களையும் இறைஆசீரையும் கூறி நிற்கின்றேன்.

பேரருட்திரு இ. தோமஸ் சவுந்தரநாயகம்
***யாழ் ஆயர், ஆயர் இல்லம்,***
***யாழ்ப்பாணம்.***

## இறையருள் வேண்டி இறைஞ்சுவோம்



தமிழ் மக்களுக்கும் இன்னுமொரு புத்தாண்டு. கடந்த மூன்று தசாப்தங்களுக்கு மேல் வேதனைகளையும் சோதனைகளையும் சுமந்த இனமாக வாழும் எமது உடன் பிறப்புக்கள் இப் புத்தாண்டிலும் புத்தாண்டு பிறக்கின்றது என்று களிப்புறும் நிலையில் இல்லை.

இந்த நாட்டில் நல்லாட்சி வேண்டும் என்ற கோஷம் எழுந்தபோது மனசுத்தியுடன் எமது இனம் அந்த நல்லாட்சி கிடைக்க ஒரு வாய்ப்பை ஏற்படுத்தித்தந்தது. அந்த நற்காரியத்தைச் செய்த உள்ளங்கள் இன்னும் எதிர்பார்ப்புகளுடன் துடிக்கின்ற ஒரு நிலையிலேயே இருக்கின்றனர்.

நல்லாட்சியின் பயன் எமக்கு எப்போது கிடைக்கும்? அல்லது இன்னும் ஒரு தேர்தல் வரப்போகின்றது. அதற்கும் நாங்கள் பலிக்கடாக்களாகத்தான் போகின்றறோமா என்ற ஆதங்கத்தில் இதயத்துடிப்புடன் எமது உடன் பிறப்புக்கள் தவிக்கின்றன.

தங்களின் சொந்தக் காணிகளில் தாங்கள் குடியேறுவோம் என்ற அவர்களின் எதிர்பார்ப்புப் பெரும்பாலானவர்களுக்குக் கானல் நீராகவே தோன்றுகின்றது. காணாமற்போன மற்றும் இராணுவ ஆட்சியால் கைதுசெய்யப்பட்ட உடன் பிறப்புகள் இருக்கிறார்களா? சிறைகளில் வாடுபவர்கள் விடுவிக்கப்படுவார்களா? அல்லது நீதி தேவதையின் முன்னாவது நிறுத்தப்படுவார்களா? என ஏங்கித் தவிக்கும் உள்ளங்கள் கணக்கிலடங்கா. எமது மக்களுக்கு மேலும் தாமதியாது விடிவு கிடைக்க இறையருள் வேண்டி நாங்கள் எல்லோரும் இப் புத்தாண்டில் வழி படக்கடமைப்பட்டிருக்கிறோம். புத்தாண் டில் எல்லாம் வல்ல ஸ்ரீ சிவகாமி அம்பாள் சமேதஸ்ரீ நடராஜப்பெருமானைப் பிரார்த் தித்து நிற்கின்றோம்.

**கந்தையா நீலகண்டன்**
***தலைவர் அகில இலங்கை***
***இந்து மாமன்றம்.***

## செஞ்சொற் செல்வரின் புத்தாண்டு ஆசிச்செய்தி


மன்மத வருடம் அனைவருக்கும் மகிழ்ச்சியானவாழ்வைத் தரவேண்டும் என்று பிரார்த்திக்கின்றேன். மனித வாழ்வின் மகத்துவத்தை அனைவரும் உணர்ந்து நல்ல வண்ணம் வாழ முயற்சி செய்வோம். கோபங்களால் பகையை வளர்ப்பதை விடுத்து அன்பினால் அனைவரையும் அரவணைப்போம். உலகெங்கும் அமைதியை உருவாக்குவதற்கு ஆத்மீக பாதை ஒன்றே சரியானது என்பதை விளங்கிக் கொள்வோம். இப் பிறப்பில் நாம் சீராய் வாழ்வதற்கு இறைவன் தந்த சந்தர்ப்பங்களுக்கு நன்றி சொல்வோம். ஒரு வேளை உணவுக்காக கோடான கோடி மக்கள் ஒரு புறத்தில் ஏங்கிய வண்ணம் உள்ளனர். மூன்று வேளை உண்பதற்கு வழிதந்த இறைவனுக்கு இந்த நாளில் நன்றி சொல்ல வேண்டும். புத்தாண்டில் எம் முன்னோர்கள் பொங்கிப் படைத்து கடவுளை மன்றாடுவார்கள். வாழ்நாள் முழுவதும் உணவு தந்த தெய்வத்துக்கு நன்றியை வெளிப்படுத்தும் அடையாளமாக பொங்கிப் படைத்தனர். இன்று உணவை வீணாக கொட்டுபவர்கள் எம்மிடையே இருக்கிறார்கள். உணவை உதாசீனம் செய்யாமல் பத்திரமாக பேணும் பழக்கத்தை நாம் கற்றுக் கொள்ள வேண்டும். சோமாலியா என்ற நாட்டில் இந்த இருபத்தோராம் நூற்றாண்டில் பல பிள்ளைகள் பசியால் வாடி மடிகிறார்கள். அன்பர்களே எல்லோர்க்கும் என்றும் உணவு கிடைக்க வேண்டும் என்று புத்தாண்டில் பிரார்த்தனை செய்யுங்கள். பசியால் வருந்துபவர்களுக்காக உலகம் இரக்கப்பட வேண்டும் என இறைவனை மன்றாடுங்கள். புதிய ஆண்டில் புதுமையான சிந்தனைகளை உருவாக்கி அனைவரும் புத்தெழுச்சி பெறுவோம். விடைபெறும் ஆண்டில் நாம் பெற்ற சிறப்புக்களை மீள நினைந்து நன்றி சொல்வோம். எவ்வளவோ நல்லகாரியங்களைச் சாதிக்க வேண்டிய மனிதர்கள் அன்பினால் ஒன்றுபடுவோம். நாளை நல்லது நடக்கும் என்ற நம்பிக்கையோடு எம் பணிகளைத் தொடர்வோம். ஒவ்வொரு நிமிடத்தையும் உயிரினும் மேலாகக் கருதுவோம். எங்கள் மண்ணில் வாழும் அப்பாவி மக்களுக்கு அரணாக நின்று உதவுவோம். கோபத்தை வளர்க்காமல் நேசத்தை வளர்ப்போம். அனைவருக்கும் எனது இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.



**கலாநிதி ஆறு.திருமுருகன் *தலைவர்***
*ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் தெல்லிப்பழை.*

## இனத்தின் விடிவுக்காக ஒன்றுபட்டு உழைப்போம்

மலரும் மன்மத வருடம், பல சவாலங்களுடன் வாழ்ந்த தமிழ் மக்கள் மத்தியில் மறுமலர்ச்சியை ஏற்படுத்த இறைவனைப் பிரார்த்திப்பதோடு, கடந்த காலங்களில் எமது இனத்தின் விடுதலை நோக்கிய பயணத்தின் போது ஏற்பட்ட கொடிய இழப்புக்களின் நினைவுகள் மற்றும் மாறாத வடுக்களுடன் வாழும் எம்மவர்களின் மனங்களில் ஒளிக்கீற்றை ஏற் படுத்த வேண்டுகின்றேன். மாற்றங்களுக் காக மாற்றத்தை வேண்டி புதிய அரசுக்கு வழங்கிய மாற்றத்துக்கான வாக்கின் பொருட்டு மாற்றங்கள் எம்மவர்கள் மத்தியில் மாற் றத்தை ஏற்படுத்தத்தக்கதாக அமையவும், நியாயத்தின் பால் இனத்துக்கான நீதி கிடைக்கவும் அனைவரும் ஒன்றிணைந்து இந்தப் புனித நன்னாளில் சபதம் செய்து வரலாற்றை எமது வழிகாட்டியாகக் கொண்டு எம் இனம் இனிவரும் காலங்களில் ஒற்றுமையுடன் ஓரணியில் ஒரே தலைமையின்கீழ் ஒரே கொள்கையில் புறப்பட பேதங்கள், கடந்தகால குரோதங்களுக்கு அப்பால் அனைவரும் கரங்களை இணைத்துக்கொண்டு நாம் தமிழர்களாக வாழ ஒன்றிணைவோம். அனைவரும் தேசியம் என்ற உணர்வால் ஒன்றுபட்டு உழைப்போம்.



**திருமதி நாகரஞ்சினி ஐங்கரன்,**
***தவிசாளர்,வலி மேற்கு பிரதேச சபை.***

ஸ்ரீ நாகபூஷணிஅம்பாள் திருமண சேவை
துல்லியமான கணிப்பீட்டின் மூலம் தகுந்த மணமக்களை தெரிவுசெய்ய நாடவேண்டிய தாபனம்
திருநிறைவாளன் T.P:0775193493
சர்வதேச இணைப்பாளர். 0779184646
மாதாஜி லிங்கேஸ்வர ஆலயம் அருகில். 0779732033
கைதடி கிழக்கு, கைதடி. 0776849017
Fax : 021 223 0049 Email : thirunerivalan@gmail.com
(தொலைபேசி ஊடாக முற்பதிவு செய்துகொள்வதன்மூலம் சிரமங்களை தவிர்த்துக்கொள்ளலாம்)

அனைவருக்கும் இனிய சித்திரைப் புத்தாண்டு வாழ்த்துக்கள்














Our courses:
- Advanced Beauty Culture & Hair Dressing
- Diploma Course (அழகுக் கலை)
- Advanced Cosmetology (Diploma Course)
- Advanced Bridal Make-up with Air Brush Makeup & Hair Styles (நவீன ஒப்பனையும் தலை அலங்காரமும்)
- Dufferent Types of Saree Draping (வித்தியாசமான சாறி கட்டும் முறைகள்)
- Cake Decoration Classes (கேக் ஐசிங்)

Our Services:
Skin Care: • Advanced Facial Treatments
✓ Dermabrasion treatment for face marks and pits
✓ Acne treatment, ✓ Skin whitening treatment
Bridal Facials : • Pedicure • Manicure • Make-up
• Bridal Make-up • Dance Make-up • Society & • Party Make-up
Hair Care :
• Hair cutting & Styling • Straightening • Waving & curling
• Colouring (gray coverage, fashion and highlights)
• Hair treatments for falling Hair & Dandruff
• Hair Spa conditioning treatment

Permanent Tattoos and letter writing
Ms. YOGINI SHANMUGANATHAN
Diploma in High Tec. Aesthetics & Cosmetology (India).
Diploma in Advanced Bridal Make-up&Character Make-up (India)
Diploma in Advanced Modern Make-up with Air Brush Make-up (India)
Diploma in Home Economics (Sri Lanka)
"BECOME AN QUALIFIED BEAUTICIAN FROM AN EXPERIENCED TRAINER"
No.75, Amman Road, Nallur, Jaffna.
T.P: 0212222796, 0777164923
Email : yogisbeauty@gmail.com web:www.yogisbeauty.com



- உங்கள் வீட்டு கிணற்றுத்தண்ணீரையே நல்ல தண்ணீராக மாற்றித்தரும்.
- தண்ணீரில் உள்ள கல்சியம்.உப்பு.கிருமிகல்.மற்றும் அனைத்து தாதுக்களையும் நீக்கி வெளியேற்றி தூய்மையான குடிநீராக மாற்றித்தரும்.
- வீட்டுக்கு மட்டும்அல்ல தேனீர்விடுதிகளுக்கும் தொழிற்சாலைகளுக்கும். வைத்தியசாலைகளுக்கும். மற்றும் ஐஸ்கிறீம் உற்பத்திநிலையங்களுக்கும். எல்லாவிதமான RO இயந்திரங்களும் உண்டு.
- இலவசமாக தண்ணீர் பரிசோதனை செய்து தரப்படும்.(TDS)Total dissolved Solids.
- விற்பனைக்கு பிந்தியசேவை.

venusroslk@gmail.com
www.venusaquaro.lk

VENUS AQUA
RO SYSTEMS
All RO Domestic
Softener Plant
Iron Remover Plant
Mineral water Plant
Sewage Treatment Plant
Effluent Treatment Plant
Panel board
Ozonator
UV.Power box
All Manufacture & Service

Indian Product - Membrane USA

1) யாழ்ப்பாணம்:- 2) முல்லைத்தீவு:- 3) வவுனியா:- 4) கொழும்பு:-

Venus Enterprises

எமது அன்பான வாடிக்கையாளரின் தேவை கருதி எமது புதிய
இரண்டாவது மண்டபமும் திறந்துவைக்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்சியுடன்
அறியத்தருகின்றோம்


# ஹம்சியா
மஹால்

புதிதாக அமைக்கப்பட்ட மண்டபம்
(ராஜா கிறீம் கவுஸ்)



பிரத்தியோகமான
விருந்து
உபசார மண்டபமும்
விசாலமான வாகன
தரிப்பிட வசதிகளும்
கொண்டது

## சரஸ்வதி மண்டபம்
(ராஜா கிறீம் கவுஸ்)




- எல்லா மதத்தினருக்கும் அவரவர் கலாசாரத் திற்கும் விரும்பிய நிறத்திற்கும் ஏற்ற வகையில் மணவறை அலங்காரங்கள்.
- முற்றிலும் குளிரூட்டப்பட்ட(A/C) வசதி
- தனிச்சிறப்பு வாய்ந்த மண்டபம்

37, சேர். பொன். இரமநாதன் வீதி, (நாச்சிமார் கோயிலுக்கு அருகில்)
யாழ்ப்பாணம்
021 320 320 7369 / 077 923 4176


SINGER
Recommends Windows 8
சிறந்த கணினி ஒன்றை
கையிலுள்ள பணத்திற்கு
கொள்வனவு செய்யுங்கள்
SINGER X SERIES
DELL
hp
lenovo
வட்டியின்றி
SINX-243AT
Printer இலவசம்
ரூ.48,499/- மாதாந்தம் ரூ.2,567/-
விசேட விலை ரூ.42,999/-
வட்டியின்றி
SINX-QC-4G
• Intel Quad core
• 2GB, 320GB
• 14" HD Display
ரூ.54,889/- மாதாந்தம் ரூ.2,999/-
விசேட விலை ரூ.46,999/-
SINX-i3-4G
• Intel core i3
• 4GB, 500GB
• 14" HD Display
ரூ.59,999/- மாதாந்தம் ரூ.4,387/-
வட்டியின்றி
SINGER ALL-in-ONE COMPUTER
SINX-M173H
• Intel Celeron B830 1.8GHz
• 2 GB DDR3, 320 GB SATA
• 17.3" Display, HD Graphics
ரூ.49,999/- மாதாந்தம் ரூ.3,333/-x12
விசேட விலை ரூ.44,999/-
3 வருட உத்தரவாதம் இலவசம்
DELL-NB-DC (Dell Inspiron 3543) intel 5th Gen
ரூ.54,999/- மாதாந்தம் ரூ.4,021/-
வட்டியின்றி
DELL-NB-i3 (Dell Inspiron 3543) intel 5th Gen
• Intel core i3
• 4GB, 500GB
• 15.6" HD Display
ரூ.83,299/- மாதாந்தம் ரூ.3,937/-
விசேட விலை ரூ.74,999/-
வட்டியின்றி
DELL-NB-i5 (Dell Inspiron 3543) intel 5th Gen
• Intel core i5
• 4GB, 1TB, 15.6" HD Display
• Intel HD Graphics 4400
ரூ.99,999/- மாதாந்தம் ரூ.4,937/-
விசேட விலை ரூ.89,999/-
DELL-NB-i7-W8 (Dell Inspiron 3543) intel 5th Gen
• Intel core i7
• 8GB, 1TB,15.6" HD Display
• 2GB SVGA, Windows 8
ரூ.138,889/- மாதாந்தம் ரூ.9,140/-
விசேட விலை ரூ.124,999/-
வட்டியின்றி
lenovo
ரூ.5,000/- பெறுமதியான Lenovo Speaker System இலவசம்
LEN-NB-i3-4G
ரூ.75,999/- மாதாந்தம் ரூ.3,937/-
விசேட விலை ரூ.67,999/-
lenovo
LEN-NB-I5
ரூ.99,999/- மாதாந்தம் ரூ.6,567/-
விசேட விலை ரூ.89,999/-
HP-i3-I5NB
• Intel core i3
• 4GB, 500GB,
• 15.6" HD Display
ரூ.88,399/- மாதாந்தம் ரூ.5,893/-x12
விசேட விலை ரூ.74,999/-
HP-i5-I5NB
• Intel core i5
• 4GB, 500GB,
• 15.6" HD Display
ரூ.99,999/- மாதாந்தம் ரூ.6,590/-
விசேட விலை ரூ.89,999/-
SINGER Plus
காட்சியறைகள்
மற்றும் அங்கீகரிக்கப்பட்ட முகவர்களிடம்
யாழ்ப்பாணம் 021-2225408
சங்கானை 021-2251100
சாவகச்சேரி 021-2270197
கொடிகாமம் 077-2108889
நெல்லியடி 021-2264937
சுன்னாகம் 021-2240555
மானிப்பாய் 021-5100280
கிளிநொச்சி 021-2280199
பருத்தித்துறை 021-2263411
முல்லைத்தீவு 021-2290180
011 5 400 400
http://www.singersl.com

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும்
இனிய சித்திரைப் புதுவருட
வாழ்த்துக்கள்.

S.V. முருகேசு



இல. 154, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 222 8899

## சித்திரை மகளே வருக வருக

சித்திரையே! செந்தமிழே!
சீரோடு வாழும் எங்கள்
குல மகளே !மூத்தவளே வா !

முன்னோர் போற்றிய பொன்மகளே !
வாழ்வு இனிக்க வந்த இனியவளே !

நினைவு மறந்திடுவோமோ
நிலை மறந்திடுவோமோ

தமிழ் அன்னைக்கு மற்றும் ஒரு மகள்
பிறந்தால் வேண்டாம் என்றிடுவோமோ!
உன்னை ஒட்டி பிறந்தவள் அவள்
தமிழுக்கு மற்றொரு இனியவள் அவள்

ஒருதாய் மக்கள் அல்லவா
தமிழ் கொஞ்சும் மழலை அல்லவா
எங்கள் வளமிக்க வாழ்வின் வேரல்லவா!
நீங்கள்...........
உன்னை சீரோடு வரவேற்க காத்திருக்கும்
உன் உறவுகளை காத்திடு ஆசியை வழங்கிடு

உன் பிறப்பறியேன் நின் குலமறியேன்
தமிழன்னையின் தத்துபிள்ளையோ நானறியேன்!
எங்கள் காலங்கள் கடந்திட்டாலும்
காலூன்றி நிற்பவளே!

நின் பிறந்த நாளெல்லாம்
எங்கள் இனிய நாளாய் பிறந்ததே!
இனி வரும் நாளும்
பாவை உன் பார்வைபட்டு
பரவசஒளி எய்தட்டுமே !
எங்கள் குலமகளே! மூத்தவளே !
வருக ! வருக !
எங்களை சிறப்பிக்க !!!!

(மிது)

அன்னை நாகா பூட் சிற்றி

சகல அன்னை loyalty card
அங்கத்தினர்களுக்கும்
சித்திரைப் புத்தாண்டு சிறப்பு சலுகை

SHOP & SAVE

FREE Shopping

SHOP & WIN

அத்தியாவசியப் பொருட்கள் இலவசம்




ரூபாய் 3,000த்திற்கு மேல்



ரூபாய் 5,000த்திற்கு மேல்




ரூபாய் 10,000த்திற்கு மேல்

ரூபா 3,000த்திற்கு மேல் கொள்வனவு
செய்யும் அனைவரும் வெற்றியாளர்களே
Save you money every day with Annai loyalty card

எமது புதிய கிளை
341, Point Pedro Road, Nallur

யாழ் கிளை
175, K.K.S Road Jaffna



ANNAI NAGAA FOOD CITY
FOR ALL YOUR DAILY NEEDS

10ம் திகதி April 2015 தொடக்கம் June 10ம் திகதி 2015 வரை மட்டுமே



வாடிக்கையாளர்
அனைவருக்கும்
இனிய சித்திரைப்
புத்தாண்டு வாழ்த்துக்கள்

சிறிகுமரன்
ரெக்ஸ்

இல. 770, கே.கே.எஸ். றோட்,
தட்டாதெரு சந்தி, யாழ்ப்பாணம்.

# தேவா மணி மண்டபம்



திருமண விழா!
பூப்புனித
நீராட்டு விழா!!
பிறந்த தின விழா!!!
மற்றும்
அனைத்து நிகழ்வுகளும்
சிறப்பாக ஒழுங்கமைப்பதுடன் சைவ, அசைவ
உணவுகளையும் பெற்றுக்கொள்ளலாம்.

TP :-077 9598854
021 561 8068

வை. தேவராஜா,
சாமியன் அரசடி கரவெட்டி.

மங்கலகரமான புதுவருட வாழ்த்துக்கள்



அன்பான கணவன்
அழகான பிள்ளைகள்
ஆரோக்கியமான குடும்பம்

750ml

Prepared under
Hygienic method Specially For
physicians and domestic purposes

IMPROVED FORMULA PURITY GUARANTEED

# V.S.P
## SPECIAL LUNCH OIL

பரிமளா ஸ்ரோர்ஸ்
தொலைபேசி: 021 222 4135/9165

Special
V.S.P.
Gingelly Oil

வி.எஸ்.பி. நல்லெண்ணெ

எமது வாடிக்கையாளர்கள், அன்பர்கள், நண்பர்கள் அனைவருக்கும்
கோல்டன் ஸ்ராரின் இனிய புத்தாண்டு நல் வாழ்த்துக்கள்



சுவைப்பிரியர்களின் "Super Star"

# கோல்டன் ஸ்ரார்



இது ஒரு குடும்ப உணவு விடுதி
ரெஸ்ரோரன்ட்









குறைந்த செலவில் இனிய ரெஸ்ரோரன்
உணவுகளை சுவைத்து மகிழ

86/2, பருத்தித்துறை வீதி,
(ஆரியகுளம் சந்தி அருகில்) யாழ்ப்பாணம். T.P: 077 8890 888



உரிமையாளர்
(அன்புநிறை அப்பா)
ஐ. நடராசா

MJ

எமது வாடிக்கையாளர் அனைவருக்கும்
சித்திரைப் புத்தாண்டு வாழ்த்துக்கள்





நடராசா கஜிந்தன்

# நியூ மைதிலி ஜுவலர்ஸ்



உங்களது தங்க நகைகளின்
கரட்டை துல்லியமாக
உறுதிப்படுத்துவதற்கான
இலத்திரனியல் கருவி
எம்மிடம் உண்டு



KARAT METER



புத்தாண்டு தினத்தில் இருந்து அட்சய திதி வரை (21.04.2015)
எமது நிறுவனத்தில் நகைகளை கொள்வனவு செய்தோ
அல்லது முற்பதிவு செய்தோ அட்சய திதி அன்று
சீட்டு குலுக்கல் மூலம் தங்கத்தை வெல்லுங்கள்.

இல. 38,40, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

தொ.பே: 021 221 7878, 021 221 787
Email: newmaithily40@gmail.co

அனைவருக்கும் இனிய சித்திரைப் புத்தாண்டு நல் வாழ்த்துக்கள்

டொச் மொழியை சிறந்த முறையில் கற்பிக்கும்

# German Language Academy

வட மாகாணத்தில் யாழ் மண்ணிலும்
பல வருடங்களாக வேரூன்றி நிற்கின்றது
**German Language Academy**

கடந்த (17.03.2015) அன்று நடைபெற்ற A1 பரீட்சையில்
யாழ். நகரில் என்றும் இல்லாதவாறு இம்முறை
100% சித்திபெற்ற பெருமை இக்கல்லூரிக்கே உரியது



- ✓ இந்த நிறுவனத்தில் அதிகமான மாணவர்கள் சித்தியடைந்து ஜேர்மன், சுவிஸ், ஒஸ்றியா போன்ற நாடுகளுக்கு சென்றுள்ளார்கள்.
- ✓ இந்த நிறுவனத்தில் ஜேர்மன் தூதரகத்தினால் நடத்தப்படும் A1 பரீட்சைக்கு ஏற்றவாறு கற்பிக்கப்படுகின்றது.
- ✓ German Language Academy வெளிநாடு செல்பவர்களுக்கு ஓர் இலகுவான சந்தர்ப்பத்தை வழங்குகின்றது.

ஆரிய குளம் சந்தியில் அமைந்துள்ள **German Language Academy** யில் கற்பிக்கும் ஆசிரியர் எஸ். கோணேஸ்வரன் தனது சொந்த நாடான இலங்கையில் இருந்து புறப்பட்டு ஜேர்மனியில் தனது சிறு வயதில் இருந்து டொச் மொழியை நன்கு தேர்ச்சி பெறக் கற்று தற்பொழுது **German Language Academy** யில் ஒரு பிரபல ஆசிரியராகப் பணியாற்றுகிறார்.
இந்த நிறுவனத்தில் ஆசிரியரால் தயாரிக்கப்பட்ட டொச் புத்தகங்களும் மாணவர்களுக்கு இலவசமாக வழங்கப்படுகின்றன.

**German Language Academy**
இல. 23, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
077 9707322

**German Language Academy**
மாணவர்களுக்கு கல்வி ஊட்டுவிப்பதற்காக
மிகச் சிறந்த முறையில் கை நீட்டி
வரவேற்கின்றது.

**Yal Tech**
Kandy Road, Chavakachcheri

---



கல்யாணப் பட்டுப் புடைவைகளின் கைராசி நிறுவனம்


## லலிதா புடைவை மாளிகை

## Lalitha Tex

Specialist in Wedding Sarees,
Shalwar Kameez
&
Ladies, Gents & Children Wear
இல. 5.6, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 222 5260



---



மக்கள் வங்கியின்

# relax

சேமிப்பு திட்டம்

இன்றைய ஏற்பாடு - நாளைய நிம்மதி

## நிம்மதியான அப் பொன்னான காலத்திற்காக இன்றே திட்டமிடுங்கள்!

### இன்று

- 18 முதல் 65 இற்கு இடைப்பட்ட வயதுடைய நீங்கள் 'மக்கள். வங்கியின் Relax' திட்டத்தில் இணைந்து, உடன்பட்ட ஒரு தொகையினை, தீர்மானிக்கும் காலம் முழுவதும் வைப்புச் செய்யலாம்.
- இத்திட்டத்தில் மாதத்திற்கு ஒரு முறை, காலாண்டிற்கு ஒரு முறை, அரையாண்டிற்கு ஒரு முறை, வருடத்திற்கு ஒரு முறை அல்லது மொத்தமாக ஒரே முறையிலும் பணத்தை வைப்புச் செய்யலாம்.

### நாளை

- 50 - 65 வயதிற்கு இடைப்பட்ட காலத்தில் விரும்பிய ஓய்வூதிய வயதிலிருந்து இவ் ஓய்வுகால அனுகூலங்களைப் பெற ஆரம்பிக்கலாம்.

**இவ் அனுகூலங்களை தீர்மானிக்கும் காலம் முழுவதும் மாதாந்த வருமானமாகவோ, அல்லது உடன்பட்ட ஓய்வூதிய வயதை அடைந்ததும், வட்டியுடன் ஒரே முறையிலோ பெற்றுக்கொள்ளலாம்.**



AA- Brand Finance Rating, AA+ Fitch Rating

மக்கள் வங்கி


# NORTH LEAD

VISION OF TECHNOLOGY

No: 328, Stanley Road, Jaffna.
(Near to Ariyakulam Junction)
Tel: 021-222 4459, 0774192275

Branch: No:12, Kanagapuram Road,
Kilinochchi (Near to Barathi Hotel)
Tel/Fax: 021-206 0909, 0772533390

**COMPUTER & LAPTOP ACCESSORIES WHOLESALER**
**COMPUTER, LAPTOP REPAIRING & SERVICES**
**CCTV & SECURITY SYSTEM WHOLESALER**



உங்கள் காரியாலயங்கள், தொழிற்சாலைகள், மற்றும் வீடுகளின் பாதுகாப்பினை கண்காணிக்க குறைந்த கட்டணத்தில், ஒரு வருட உத்தரவாதத்துடன் ஒரே நாளில் பொருத்தித் தருகின்றோம் (ஏற்கனவே பொருத்தியுள்ள கமெராக்களும் பழுதுபார்த்து கொடுக்கப்படும்)
உங்கள் கமெராக்களை நீங்களே பரிசோதித்து உங்கள் நம்பிக்கையை உறுதிசெய்யுங்கள்

CAMERA STARTING FROM: Rs. 3750/=

**சகலவித கணனி, மடிக்கணனிகளின் உதிரிபாகங்கள் விசேட விலையில்**




# North Lead Computers

---

# KIRUBAA LEARNERS
# கிருபா லேணர்ஸ்

KIRUBAA LEARNERS
DS/ 589

அரச அங்கீகாரம் பெற்ற A தர கனரக சாரதிப் பயிற்சிப் பாடசாலை
Govt. Approved A Grade Driving Training School

## திறமையான சாரதிகள் ஆகவேண்டுமா?
## கிருபா லேணர்ஸ் உடன் இணையுங்கள்.

- தவணை முறையில் கட்டணம் செலுத்த முடியும்.
- இலவச எழுத்துப்பரீட்சை வகுப்புக்களும், வாகன தொழில்நுட்ப வகுப்புக்களும் உண்டு.
- பரீட்சைக்கான வீதி ஒழுங்கு நூல், மாதிரி வினாத்தாள்கள் இலவசமாக வழங்கப்படும்.
- விரைவில் எழுத்துப் பரீட்சையில் சித்தியடைய விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள்.....
- எழுத, வாசிக்க தெரியாதவர்களுக்கு வாய்மொழி மூலப்பரீட்சையில் தோற்றுவதற்கு விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள் நடைபெறும்.
- விரைவில் எழுத்துப் பரீட்சைக்கு ஒழுங்கு செய்து Learner Permit பெற்றுத் தரப்படும்.
- சாரதி தெரிந்து கொள்ள வேண்டிய வாகனம் சம்பந்தமான அடிப்படைக் கல்வி மற்றும் சாரதிக்கான சிறந்த பயிற்சியும் வழங்கப்படும்.

1. Licence விண்ணப்பிக்கும் ஒழுங்குகளும் எங்கள் காரியாலயத்திலேயே செய்து தரப்படும்.
2. உடைந்த, தொலைந்த, தெளிவில்லாத Licence புதுப்பிக்க ஒழுங்கு செய்து தரப்படும்.
3. சர்வதேச லைசன்ஸ் (International Licence) பெற்றுக் கொள்ளக் கூடிய வசதி உண்டு.

### விசேட வசதிகள் - SPECIAL FACILITIES

- காலை 5.30 மணி தொடக்கம் இரவு 08.30 மணிவரை தங்களின் வசதிக் கேற்ப நேரங்களைத் தெரிவு செய்யலாம்.
- தங்களின் இருப்பிடங்களுக்கு வந்து பயிற்சி வழங்கக் கூடிய வசதியும் உண்டு.
- வாரத்தில் ஏழு நாள்களும் வாகனப்பயிற்சி உண்டு.
- வவுனியாவில் பெண்களுக்கான கார்ப் பயிற்சி பெண் ஆசிரியரால் வழங்கப்படுகிறது.
- தங்களின் வசதி கருதி இரவு நேர வாகன பயிற்சி நடைபெறுகின்றன.

### சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவதற்குத் தேவையான ஆவணங்கள்

- அடையாள அட்டை
- பிறப்பு அத்தாட்சிப்பத்திரம்.(மூலப்பிரதி)
- திருமண அத்தாட்சிப்பத்திரம். (பெண்கள் மட்டும்)
- சாரதி அனுமதிப்பத்திரம் (வைத்திருந்தால்)
- தேசிய போக்குவரத்து வைத்திய நிறுவகம் வழங்கும் மருத்துவச் சான்றிதழ்.

தலைமைக் காரியாலயம்: இல. 226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 4353 - 021 492 3200 Hotline - 077 722 5292


வவுனியாவில்.....
இல. 216, ஏ9 வீதி, வவுனியா
024 222 7777
077 710 0444

| | | | |
|---|---|---|---|
| யாழ். கச்சேரி அருகில் 076 722 5292 071 777 5454 | சுன்னாகம் 021 224 2022 071 454 6957 | பருத்தித்துறை 021 492 3201 071 454 6958 | கிளிநொச்சி 021 228 5505 071 454 6955 |
| நெல்லியடி 021 300 6550 071 454 6957 | சாவகச்சேரி 021 492 3202 021 227 0700 | வீசுவமடு 021 320 1515 071 454 6955 | மன்னார் 023 225 1656 077 847 2732 |

---

# நொதேன் சென்றல் வைத்தியசாலை
## திருநெல்வேலி, யாழ்ப்பாணம்

### இருதய மார்பு சத்திர சிகிச்சை



யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் உள்ள நொதேன் சென்றல் வைத்தியசாலையில் 09.05.2015 தொடக்கம் சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்டவர்கள் நலன்கருதி இரத்தசுத்திகரிப்பு (Dialysis) சேவை ஆரம்பிக்கப்பட வுள்ளது. யாழ். நகரில் ஒரு தனியார் வைத்தியசாலையில் இத்தகைய சேவை ஆரம்பிக்கப்படுவது இதுவே முதற்தடவையாகும். இச்சேவைக்கு குறைந்த கட்ட ணமே அறவிடப்படவுள்ளது.
கடந்த ஒருவருடமாக இவ்வைத்தியசாலையில் 28 வரையிலான இருதய மார்பு சத்திர சிகிச்சை வெற்றி கரமாக மேற்கொள்ளப்பட்டது. பல வருட அனுபவம் வாய்ந்த இருதயமார்பு சத்திர சிகிச்சை நிபுணர்களாலேயே மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இச்சேவையும் வட கிழக்கு மாகாண மக்களின் நலன்கருதியே குறைந்த கட்டணத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

---

# நொதேர்ன் சென்றல் கொஸ்பிற்றல்



வடக்கில் எமது வைத்தியசாலையில் (தனியார்) முதற்தடவையாக

## இரத்த சுத்திகரிப்பு (Dialysis) சேவை
## ஆரம்பம் — 09.05.2015



சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்டவர்கள் நலன்கருதி எதிர்வரும் 09.05.2015 முதல் இச் சேவை ஆரம்பிக்கப்படவுள்ளது. இச்சேவையானது வடக்கில் தனியார் வைத்தியசாலையில் ஆரம்பிக்கப்படுவது இதுவே முதற்தடவையாகும். இச்சேவைக்கு குறைந்த கட்டணமே அறவிடப்படும்.

10.05.2015 அன்று எமது வைத்தியசாலையில் இடம்பெறும் சிறுநீரக நோய்கள் சம்பந்தமான இலவச வைத்திய முகாமில் ஆலோசனைகள் பெறவிரும்புபவர்கள் முற்கூட்டியே உங்கள் பதிவுகளை கீழ் உள்ள தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பினை மேற்கொள்ளவும்.

**இவற்றை விட பின்வரும் சேவைகள் வைத்திய நிபுணர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.**

- நரம்பியல் சிகிச்சை
- நரம்பியல் சத்திர சிகிச்சை
- முறிவுதெறிவு சிகிச்சையும் சத்திர சிகிச்சையும்
- சாதாரண மற்றும் சத்திர சிகிச்சை மூலமான பிரசவ சேவை
- கண் சிகிச்சையும் சத்திர சிகிச்சையும்
- தோல் சிகிச்சை
- பற்சிகிச்சை பல்முக சீராக்கல்
- காது, மூக்கு, தொண்டை நோய்களுக்கான சிகிச்சை
- சிறுநீரக சிகிச்சைகளும் சத்திர சிகிச்சையும்
- 24 மணிநேர அவசர சிகிச்சைப்பிரிவும் மருந்தகம்
- ஆய்வு கூட சேவை மற்றும் எக்ஸ்றே சேவைகள்
- இருதய நோய் சிகிச்சை
- பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சை
- சகல பொது சத்திர சிகிச்சை
- மன நல நோய்கள்
- குழந்தை நோய்களுக்கான சேவைகள்
- பெண்களுக்கான நோய்களும் மகப்பேற்று சிகிச்சைகளும் (Fertility clinics)
- EEG, EMG, Endoscopy, Laproscopy, Echo, Cardiography, E.T.T. சேவைகள்)

# நொதேர்ன் சென்றல் கொஸ்பிற்றல்

*இல: 342, பலாலி வீதி, பரமேஸ்வராச் சந்தி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.*

**T.P.: 0212219988, 0212219977, 0212222263**

# ESOFT METRO CAMPUS இனது இனிய சித்திரைப் புத்தாண்டு வாழ்த்துக்கள்

## சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட கற்கை நெறிகள்






### DiTEC INTERNATIONAL
**Diploma in Information Technology**

- IT Fundamentals
- Microsoft Office
- PC Hardware
- Networking Essentials
- Internet & Email
- Web Designing - HTML
- Graphics and Animation
- Software Engineering
- C#.net
- Java
- Web Applications
- ASP.net
- Project

### DiE
**Diploma in English**
Grammar | Spoken | Comprehension

**கற்கைநெறியின் சிறப்பம்சங்கள்**
- 10 பாடப் பிரிவுகளை உள்ளடக்கியது
- பாடப்புத்தகங்கள் இலவசம்
- அனுபவமிக்க விரிவுரையாளர்கள்
- 2008 முதல் 20,000 மாணவர்கள் பெற்றுக்கொண்ட தகைமை
- ESOFT இன் 10 பாடப் பிரிவுகள் சான்றிதழுடன் Edexcel UK, BCS-UK போன்ற பிரித்தானிய சான்றிதழ்களையும் பெறலாம்.

**யாருக்குப் பொருத்தமானது ?**
- A/L பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கு
- IT துறைக்கான உயர்கல்வி வெற்றிக்கான ஆரம்ப அடித்தளத்தை எதிர்நோக்குவோருக்கு
- பல்கலைக்கழக மாணவர்களுக்கு
- வேலைவாய்ப்பு ஒன்றினை எதிர்நோக்குவோருக்கு

FREE DVD With Role-play Videos

Special Offer
**Diploma in English 50% கழிவு**
சாதாரண கட்டணம் ~~Rs.19,500~~
கழிவுடனான கட்டணம் Rs.9,750
*Condition Apply

Free Text Books | Duration : 04 Months

Diploma in Software Engineering · Diploma in Hardware & Networking · Diploma in Business Management · Diploma in Business English · Diploma in Web Engineering · Diploma in Academic English · Diploma in Computerized Accounting

**6 DIPLOMAS** assured by PEARSON
Only @ ESOFT

## PEARSON EDEXCEL HND PROGRAMMES

### HND in Computing & System Development
**Duration 18 -20 Months**

Entry Requirement :
O/Level, A/Level or Working Experience

Final Year Option @ ESOFT
- B.Eng (Hons) in Software Engineering
- B.Sc (Hons) in computing

LONDON metropolitan university

### HND Business Management
**Duration 18 -20 Months**

Entry Requirement :
O/Level, A/Level or Working Experience

Final Year Option @ ESOFT
- B.A (Hons) in Business Administration

LONDON metropolitan university

**MBA**
Masters in Business Administration
(18 Months)

MSc | MBA
Degree - Final Year
HND in Computing & System Development
HND Business Management
OL's / AL's / DiTEC / DiBM

**ESOFT**
*Shaping Lives, Creating Futures.*

**ESOFT METRO CAMPUS**
No. 137, K.K.S Road, Jaffna.
Hotline : 077 309 9 308  Tel : 021 222 4142

**ESOFT METRO CAMPUS**
17/1, Brown Road Jaffna (Inquiry Office) Tel : 021 750 1120

**ESOFT METRO COLLEGE**
No.01.Kanagapuram Road, Kilinochchi Tel : 021 228 5444

*Sri Lanka's Largest Higher Education Network*

## கட்டார் நாட்டில் வேலைவாய்ப்பு

டிரைவர் GCC லைசன் (Light Vehicle), டிரைவர் GCC லைசன் (HeavyVehicle, அலுமினியம் டெக்னீஷன், பினிஷிங் காப்பெண்டர், லைப் காட், லிப்ட் மெய்ன்டனன்ஸ் திருத்த வேலை, கிளீனர் (வங்கி / பாடசாலை)

திறமைக்கான சம்பளம் வழங்கப்படும். சாப்பாடு, தங்குமிட வசதி, வைத்திய வசதி இலவசம், சேவைக்காலம் 2வருடம். .

நேர்முகப்பரீட்சை காலை (9.00 மணி - மாலை 5 மணிவரை)

- 25/04/2015 சனிக்கிழமை கிளிநொச்சியில் நடைபெறும்.
- 26/04/2015 ஞாயிற்றுக்கிழமை யாழ்பாணம் இல 20, உதயன் விருந்தினர் விடுதி, கன்னாதிட்டி வீதி,யாழ்ப்பாணம். என்ற முகவரியில் நடைபெறும்

மலேசியாவிலும் உடனடி வேலைவாய்ப்புக்கள் உண்டு

விண்ணப்பதாரர்கள் பாஸ்போட் சகிதம் நேரில் வரவும்

தொடர்புகளுக்கு: அரசாங்க அங்கீகாரம் பெற்ற அனுமதி இல. 1636

அபிராட் ஜெனரல் சர்விசஸ்,

399,1/1 காலி வீதி,பம்பலப்பிட்டி, கொழும்பு - 4 தொலைபேசி : 077 772 1440 / 011 259 1496

## RAINBOW TILES STORES

றெயின்போ ரைல்ஸ் ஸ்ரோர்ஸ்

பருத்தித்துறை வீதி, சிலையடி, மந்திகை - புலோலி



பெயின்ற் வகைகள், மாபிள் வகைகள்,
எஸ்லோன் பி.வி.சி பைப் வகைகள்,
கட்டடப் பொருள்கள், விவசாய மருந்து வகைகள்,
துவிச்சக்கர வண்டி உதிரிப்பாகங்கள் மற்றும்
மின்சாரப் பொருள்கள் என்பன
மலிவு விலையில் கொள்வனவு செய்யலாம்.

021 226 2696 077 869 5418

வாடிக்கையாளர் அனைவருக்கும்
சித்திரைப் புத்தாண்டு
வாழ்த்துக்கள்

## Coral போத்தல் குடிதண்ணீர் விநியோகம்

CORAL போத்தலில் அடைக்கப்பட்ட சுத்தமான குடிதண்ணீரை பின்வரும் அளவுகளில் ½L, 1 L, 1 ½L, 5 L, 19.5 L மொத்தமாகவும் சில்லறையாகவும் எம்மிடம் பெற்றுக்கொள்ள முடியும்.

திறுவனங்கள், திருமண மண்டபங்கள், விருந்தினர் விடுதிகள் மற்றும் விசேட நிகழ்வுகளுக்கு விலைக்கழிவுகள் வழங்கப்படும்.

எம்மிடம் Water, Dispensers களையும் பெற்றுக் கொள்ள முடியும்.



குறிப்பு

19.5 L போத்தலில் அடைக்கப்பட்ட குடிதண்ணீர் வீடுகளுக்கு கொண்டு வந்து தரப்படும்.

Jo Enterprises,
#23, Chappel Street,
Jaffna.
021 320 2928

தொடர்புகளுக்கு 077 254 3253
077 075 5005

## செல்வி நகைஅகம்

தங்கப்பவுண் நகை வியாபாரம்

Manufacturers of Gold Jewels

Chelvi
Nakai Agam



22 கரட் தங்க நகைகள்
ஓடருக்கு உத்தரவாதத்துடன்
செய்து கொடுக்கப்படும்.

T.P: 021 222 9441

1/3, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

1/3, Kasthuriar Road,
Jaffna.

## நிஷானந்தா ஜுவல்லறி



Nishananthaa
Jewellery

அன்பர்கள், நண்பர்கள்,
வாடிக்கையாளர்
அனைவருக்கும்
இனிய
சித்திரைப் புத்தாண்டு
வாழ்த்துக்கள்

அட்சய திருதியையை முன்னிட்டு
நகை ஓடர்கள் பெற்றுக்
கொள்ளப்படும்.

Dealers in 22 Ct,
Gold, Jewelleries
Game & Jewellers

51, Kasthuriyar Road,
Jaffna.
T.P: 021 222 7985

# மன்மதப் புத்தாண்டு மனமகிழ்வு தரட்டும்



மது

எந்த மாதத்துக்கும் இல்லாத சிறப்பு சித்திரைக்கு மட்டும் உண்டு. சித்திரையில் மட்டும் அப்படி என்ன விஷேசம்? சித்திரை முதல் நாளுக்கு உள்ள முக்கியமானதும் முதன்மையானதுமான சிறப்பு சித்திரை வருடப் பிறப்பு.

தமிழர்களது காலக்கணிப்பு முறையின்படி ஒரு ஆண்டுக்குரிய பன்னிரண்டு மாதங்களில் சித்திரை முதலாவது மாதமாகக் கருதப்படுகிறது. தமிழ் மாதங்கள் சூரிய மாதங்கள் எனப்படுகின்றன.

ஏன் என்றால், இந்த மாதங்கள் பூமிக்குச் சார்பாகத் தோற்றுகின்ற சூரியனுடைய இயக்கத்தை அடிப்படையாக வைத்தே கணிக்கப் படுகின்றன. இராசிச் சக்கரத்தில் மேட இராசிக்குள் சூரியன் நுழைவதிலிருந்து அந்த இராசியை விட்டு வெளியேறும் வரையில் உள்ள காலம் சித்திரை மாதமாகும்.

சித்திரை மாதம் 31நாள்களைக் கொண்டது. ஆங்கில நாள்காட்டியில் ஏப்ரல் மாதம் 14 ஆம் நாள் முதல் மே மாதம் 14 ஆம் நாள் வரை தமிழ் சித்திரை மாதமாகும். சூரியன் மேட இராசிக்குள் நுழைவது சித்திரை மாதப் பிறப்பு எனப்படும். சித்திரை முதல் மாதம் என்பதால் இதுவே புதிய ஆண்டின் தொடக்கமும் ஆகும்.

இதனால் சித்திரை மாதம் முதல் நாளை உலகத் தமிழர்கள் அனைவரும் தமிழ் வருடப் பிறப்பாகச் சிறப்பாகக் கொண்டாடுகின்றனர். இலங்கையில் தமிழ்– சிங்கள மக்களால் கொண்டாடப்படும் வைபவமாக புதுவருடப் பிறப்பு இருப்பதால், இது ஒரு தேசியப் பெருவிழாவாகவும் முக்கியத்துவம் பெறுகிறது. புதிய எதிர்பார்ப்புகளையும் நம்பிக்கைகளையும் வைத்து மங்களகரமான திருநாளாக சித்திரைப் புதுவருடம் வரவேற்கப்படுகிறது.

சித்திரை மாதம் பிறந்ததுமே இளவேனில் காலம் என்னும் வசந்த காலம் தொடங்குகிறது.

வசந்த காலத்தில் மாமரங்களில் மாந்தளிர்களும், மலர்களும் பூத்துக் குலுங்கும். அந்தச்சமயம் வேப்ப மரங்களில் வேப்பம் பூக்கள் பூத்துக் குலுங்கும். மனித வாழ்க்கை இனிப்பும், கசப்பும் கலந்தே இருக்கும் என்பதை எடுத்துக் காட்டும் அம்சமாக இந்தச்செயற்பாடு கருதப்படுகிறது.

ஐக்கியம், சமய, சமூக, கலாசார உறவுகள், பண்பாட்டுக் கோலங்கள் என்பவைகளை எடுத்துக் காட்டும் வகையிலும் நல்லெண்ணம், நல்லுறவு, ஐக்கியம், அன்புப் பரிமாற்றம், குதூகலம், விருந்தோம்பல் போன்ற மனிதப் பண்பாட்டின் உயர்ந்த அம்சங்களை வெளிப்படுத்தும் வகையிலும் கொண்டாடப் படும் சமூக விழாவான புது வருடத்தில் இறைவழிபாடு, தானதர்மம், ஆசிபெறுதல் என்பவைகளையும் நாம் கடைப்பிடிப்பது வழக்கம்.

அறுபது தமிழ் வருடங்களின் சுற்றுவட்டத் தொடரில் வரும் மன்மத என்ற பெயரிலான சித்திரைப் புதுவருடம் இம் மாதம் 14 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மலருகிறது.

சித்திரை முதல் நாளன்று வீட்டை நன்றாக கூட்டித் தூய்மை செய்ய வேண்டும். வாசலில் கோலமிட்டு அழகுபடுத்த வேண்டும். வாயிற்படிகளுக்கு மஞ்சள் குங்குமம் இட்டு, மாவிலை தோரணங்களைக் கட்டி மங்கலம் சேர்க்க வேண்டும். வாயிற்படி நிலை வாயிலில் மஞ்சள் பூசி, சாணத்தால் மெழுகி, அழகிய மாக்கோலமிட்டால் திருமகள் வாசம் செய்வாள் என்பது நம்பிக்கையாகும். அத்தோடு மஞ்சள், குங்குமம் ஆகியவை நோய்க்கிருமிகளும் துஷ்ட தேவதைகளும் வாசல்படியை தாண்டி வராமல் தடுக்கும் சக்திவாய்ந்தவை. புதுவருட தினத்தில் நம் நலம் காக்கவே இந்த நடைமுறை வழக்கத்துக்கு வந்தது.

## மருத்து நீர்

இந்தப் புண்ணிய காலத்தில் சகலரும் மருத்து நீர் தேய்த்து சிரசில் கொன்றை இலையையும், காலில் புங்கம் இலையையும் வைத்து ஸ்நானம் செய்தல் வேண்டும். மருத்து நீர் வைத்தல் என்பது முக்கிய விடயமாக புது வருட தினத்தில் கருதப்படுகிறது.

இந்த மருத்துநீர் தாழம்பூ, தாமரைப்பூ, மாதுளம்பூ, துளசி, விஷ்ணு கிராந்தி, சீதேவியார் செங்கழுநீர், வில்வம், அறுகு, பீர்க்கு, பால், கோசலம், கோமயம், கோரோசனை, மஞ்சள், திற்பலி மற்றும் சுக்கு என்பவற்றை நீரிலே கலந்து காய்ச்சப்படும். மருத்து நீர் வைத்து நீராடினால் புத்தாண்டின் நல்ல பலன்களைப் பெறலாம் என்பது நம்பிக்கை ஆகும்.

## ஆடை

பச்சை நிறப் பட்டாடை அல்லது வெள்ளைக் கரை அமைந்த புதிய பட்டாடையையும், மரகதம், வைரம் பதித்த ஆபரணங்களையும் அணிந்து ஆலயங்களுக்குச் சென்று இறைவழிபாடு செய்தல் வேண்டும் என வாக்கிய பஞ்சாங்கத்தில் தெரிவிக்கப் பட்டுள்ளது. திருக்கணித பஞ்சாங்கத்தில் வெண் மஞ்சள் பட்டாடை அல்லது மஞ்சள் கரை வைத்த வெள்ளைப் புத்தாடையையும் வைரம் பதித்த ஆபரணங்களையும் அணிந்து ஆலயங்களுக்குச் சென்று இறை வழிபாடு செய்தல் வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



சித்திரைப் புதுவருடத்தன்று எமது எதிர்கால பலன்களை அறிவது அவசியம். புத்தாண்டுப் பஞ்சாங்கம் வாங்கி அதற்கு சந்தனம், குங்குமம் ஆகியன இட்டு, பூசையில் வைத்து வணங்க வேண்டும். பின்னர் குடும்ப சோதிடரையோ, புரோகிதரையோ கொண்டு புத்தாண்டுப் பூஜைகளைச் செய்யவேண்டும். பூஜை முடிந்த பின்பு அவர் புத்தாண்டுப் பஞ்சாங்கத்தைப் படிப்பார். அதன் மூலம் அந்த ஆண்டில், நவக்கிரக சஞ்சாரத்தினால் உலகத்துக்கும், மக்களுக்கும் நிகழவிருக்கும் பலன்களை அறிந்து கொள்ளலாம். சில தோஷங்களையும் நீக்கிக் கொள்ளலாம்.

## அறுசுவை உணவு

சித்திரை மாதத்தில் சூரியன் மேடராசியில்மிகவும்உச்சமாகப் பிரகாசிப்பதால் அன்றைய தினம் பானகம், நீர், மோர், பருப்புவடை ஆகியவற்றை நைவேத்தியம் செய்ய வேண்டும். இனிப்பு, கசப்பு, உவர்ப்பு, புளிப்பு, துவர்ப்பு, கார்ப்பு என அறுசுவை கொண்ட உணவுகளைச் சமைத்து உண்பர்.

மதியஉணவில்வேப்பம்பூப் பச்சடி, மாங்காய்ப் பச்சடி, பருப்பு வடை, நீர்மோர், பருப்பு, பாயாசம், மசால்வடை போன்றவை இடம்பெறுதல் அவசியம். வேப்பம் பூ கசக்கும் என்றாலும் மனித உடலிலுள்ள இரத்தத்தைத் தூய்மை செய்வதில் வேப்பம் பூவுக்கு நிகராக வேறு எந்த மூலிகையும் இல்லை. இதற்காகவே இந்த உணவு உண்ணப்படுகிறது. அத்துடன் உணவை விருந்தினருடன் உண்டு மகிழ்ந்தால் அந்த ஆண்டு முழுவதுமே குதூகலமாக இருக்கும் என்பது மக்களின் முக்கிய நம்பிக்கையாகும். இதற்காகவே விருந்தினர் வருகையும் விருந்தோம்பலும் நம் பாரம்பரியமாக மாறியது.

## கைவிஷேடம்

சித்திரை முதல் நாளன்று பெருவாரியாக மக்கள் கோயில்களுக்கு சென்றும் வாழ்த்துக்களைப் பரிமாறிக்கொண்டும் மற்றும் பல வகைகளிலும் வருடப் பிறப்பை சிறப்பாகக் கொண்டாடுவர். சித்திரைப் புதுவருடத்தின் மற்றொரு சிறப்பு அம்சம் கைவிசேடமாகும். ஆரம்ப காலத்தில் வீட்டின் தலைவி உரிய சுப நேரத்தில் சிறிய மூலிகைப் பொட்டலம் ஒன்றைக் கிணற்றுக்குள் போட்டுவிட்டு பிறக்கும் புத்தாண்டு நிமித்தம் முதல் முறையாக தண்ணீரைக் கிணற்றிலிருந்து வெளியில் எடுப்பதையே கை விசேடமாகக் கருதப்பட்டது. ஆயினும் நாளடவில் கைவிசேடம் என்பது சுபமுகூர்த்தத்தில் பணத்தை கொடுப்பதும் எடுப்பதும் என்ற நிலை ஏற்பட்டுள்ளது. நல்ல நேரத்தில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் தங்கள் குடும்பத் தலைவரிடமிருந்தும், வயதில் மூத்தவர்களிடமிருந்தும், அலுவலகங்கள், விற்பனை நிலையங்கள், தொழிற்சாலைகள் என்பவைகளில் வேலை செய்வோர் தங்கள் வேலை கொள்வோரிடமிருந்தும் கைவிசேடம் பெற்றுக்கொள்வர். புதுவருடத்தில் முதல் அன்பளிப்பாக வெற்றிலையில் பாக்கு, நெல், காசு என்பவற்றை வைத்து குத்து விளக்கின் முன்னாலே வைத்து கொடுப்பார்கள். பணத்தை கைவிசேடமாக பெற்றுக்கொள்வார்கள். கொடுக்கப்பட்ட எல்லாவற்றையும் எண்ணி (நெல் உட்பட) அது ஒற்றை விழுந்தால் நல்ல பலன் என்பது ஐதீகம். கைவிசேடம் பரிமாறிக்கொள்வது என்பது ஒரு பாரம்பரியமான வழக்கமாகும்.

மூத்தோர்களிடமிருந்து கைவிசேடம் பெற்றால் அந்த ஆண்டு முழுவதும் பணவரவும் பல நன்மைகளும் கிடைக்கும் என்பது நம்பிக்கை. கைவிசேடமாகப் பெற்ற பணத்தை அந்த ஆண்டு முழுவதும் பத்திரமாக வைத்திருக்க வேண்டும் என்பதும் நம்பிக்கையாக கடைப்பிடிக்கப் பட்டு வருகிறது.

சித்திரைப் புதுவருடம் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பெருவிழாவாக இங்கு சிறப்புப் பெறுவதுடன், தமிழ், சிங்கள மக்களுக்கு இடையிலான நெருங்கிய தொடர்புகளை எடுத்துக் காட்டுவதாகவும் அமைந்திருந்தாலும் கொண்டாடுவதில் சில தனித்தனியான பாரம்பரிய கலாசார நடைமுறைகளைப் பின்பற்றி வருகிறார்கள்.

சிங்கள மக்களின் புத்தாண்டுக்கான ஏற்பாடுகள் அதற்கான சுபநேரத்தில் அரிசி இடித்து அடுப்புக்கட்டி பலகாரம் சுடுவதுடன் ஆரம்பிக்கப்படுவது வழக்கமாகும். அடுத்ததாக பழைய வருடத்துக்கான ஸ்நானம் இடம் பெறும். உடலையும் உள்ளத்தையும் சுத்தப்படுத்தும் நோக்கில் இடம் பெறும் இந்த குளியல் பழைய வருடத்திற்கான இறுதிக் குளியலாகும். புத்தாண்டுக்கான விசேட நீராடல் சிங்கள வர் மத்தியில் வழக்கத்தில் இருந்து வருகின்றது.

புத்தாண்டு பிறப்பதற்கு முன் எழுந்து மருந்து எண்ணை வைத்து குளிப்பார்கள். விகாரைக்குச் சென்று வழிபட்டு புத்தாண்டு பிறப்பு நேரத்தில் பட்டாசு கொளுத்துவர். புத்தாடை உடுத்தி பால் பொங்குதல், பால்சோறு சமைத்தல் அத்துடன் தின்பண்டங்கள் தயாரித்தலில் ஈடுபடுவர். இத்துடன் பணியாரம், வாழைப்பழம் மற்றும் தின்பண்டங்களும் வைத்து படையல் இடுவார்கள். இந்தப் படையலில் முக்கியமாகப் பால்சோறு இருக்கும்.

நல்ல நேரத்தில் குத்து விளக்கேற்றி ஊதுவர்த்தி கொளுத்தி சாம்பிராணிப் புகைகாட்டுவர். குடும்பத்துடன் உணவு பரிமாறி உண்பர். அயலவர்களுக்கிடையேயும் உணவு பரிமாறிக்கொள்வர். பெரியோரை மதித்து வணங்குவர். அத்துடன் கைவிசேடம் பெறுவர். புண்ணியக் காலம் என்று குறிக்கப்பட்டிருக்கும் நேரத்துக்கு கொடுக்கல் வாங்கல்கள் செய்வர். ஒரு சம்பிரதாயத்துக்காக தத் தமது வேலை அல்லது தொழில் செய்வர். பின்னர் அனேகமானோர் புத்த விகாரைகளுக்கு பௌத்த உரை (பன) கேட்பதற்காகவும் வேறு விசேட நிகழ்வுகளுக்காகவும் செல்வர். இந்தப் புண்ணியக் காலம் முடிந்த பிறகு, புத்தாண்டு கலாசார மற்றும் விநோத விளையாட்டுப் போட்டிகளை நடத்துவர். பெண்கள் றபான் அடிப்பர். இது தமிழரிடம் இல்லாத ஒரு வழக்கமாகும். சிலவேளை புண்ணியகாலம் இரவில் முடிவடையுமாயின், இந்த நிகழ்வுகள் அடுத்த நாளிலோ அல்லது அடுத்து சில நாள்களிலோ தமது வசதிக்கேற்ப வைத்துக் கொள்வர்.

சிங்கள பௌத்தர்கள் சித்திரைப் புத்தாண்டை பகைமை ஒழிப்புக்கான சிறந்த வாய்ப்பாக உபயோகப்படுத்திக் கொள்வது வழக்கத்தில் இருந்து வருகின்றது. நீண்ட காலமாகப் பகைமை கொண்டிருந்த நண்பர்கள், உறவினர்கள் ஆகியோரைப் பார்க்கச் சென்று பகைமையைப் போக்கிக் கொள்வர்.



# மன்மத புத்தாண்டு பலன்கள் உங்களுக்கு எப்படி?

## மேடம்



இந்த வருடம் கடக லக்னத்தில் குரு உச்சம் பெற்று சந்திரனை பார்ப்பதால் தங்களுக்கு எல்லா வகையிலும் வெற்றி மேல் வெற்றி உண்டாகும்.தங்களிடம் போட்டி போடுபவர்கள் காணாமற் போய்விடுவர்.சுக்கிரன் ஆட்சி பெற்று உள்ளதால் பூர்விக சொத்துகளிலே இருந்த பிரச்சினைகள் நீங்கி சொத்து சேர்க்கை உண்டாகும்.ஒரு சிலருக்கு புதிதாக வீடு. மனை வாங்கும் யோகம் உண்டாகும். தந்தையால் ஒரு சிலருக்கு நன்மை உண் டாகும். ஒரு சிலர் புதிதாக வாகனம் வாங்குவார்கள். வழக்குகளில் வெற்றி பெற்று அதன் மூலம் ஒரு சிலர் நன்மை அடைவார்கள். அதே சமயம் இந்த ராசிகாரர்களுக்கு அஷ்டம சனி நடைபெற்று வருவதால் உடல் நலத்தில் அக்கறை கொள்ள வேண்டும். உஷ்ண சம்பந்தப்பட்ட நோய்களால் அவஸ்தைப்படுவார்கள்.


## இடபம்



இந்த மன்மத வருடம் தங்களுக்கு பல வழிகளில் நன்மை செய்யும். பிரிந்த தாய்,தந்தையருடன் சேர்வர்.தாய், தந்தையருக்கு இருந்து வந்த உடல் உபாதைகள் நீங்கி பூரண நலம் பெறுவார்கள். பிள்ளைகளால் அவர்களுக்கு நன்மை உண்டாகும். ஒருசிலர் வேலை நிமித்தமாக வெளிநாடு போகும் வாய்ப்பு பெறுவார்.

வேலை இல்லாதவர்களுக்கு வேலை கிடைக்கும்.குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டாகும்.திருமணம் ஆகாதவர்களுக்கு திருமணம் கைகூடும்.பொன்,பொருள் சேர்க்கை உண்டாகும்.அதே சமயம் தங்களுக்கு கண்டசனி நடைபெற்று வருவதால் கணவன், மனைவி இடையே கருத்து வேறுபாடு ஏற்பட வாய்ப்பு உண்டு. குடும்பத்தில் விட்டுக் கொடுத்து வாழ பழகிக் கொள்ளவேண்டும்.

## மிதுனம்




தங்களது சுய பலத்தினால் பல வெற்றிகளை செய்து சாதனைகள் புரியும் வருடமாக அமைகிறது. சொந்தமாகத் தொழில் செய்து பல வழிகளில் உழைக்கும் நபராகத் திகழ்வீர்கள். பலரது பாராட்டையும் பெறுவீர்கள்.ஒரு சிலர் நிலம், வீடு, மனை வாங்கி மகிழ்வீர்கள்.

ஒரு சிலருக்கு கிரகப்பிரவேசம் செய்யும் நேரமாக அமையும். வாகனங்கள் புதிதாக வாங்கி சந்தோஷப்படுவீர்கள். அரசின் மூலமாக ஒரு சிலர் ஆதாயம் பெறுவார்கள்.ஒரு சிலருக்கு விருதுகள் கிடைக்கும். பிள்ளைகளின் படிப்புக்காக ஒரு சிலருக்கு இடமாற்றம் ஏற்படும். ஜுலை மாதத்திற்கு பின்னர் சகோதரர்களின் திருமணம் ஒரு சிலருக்கு கைகூடும். அதன் மூலம் ஆடம்பர செலவுகள் ஏற்படும். கையில் அடிபட நேரிடும். கவனமுடன் செயல்படவும். தாய். தந்தையரை ஒரு சிலர் பிரிந்து செல்ல நேரிடும்.

நோய் அல்லது கடன் ஏற்பட வாய்ப்பு உண்டு. உடல் ஆரோக்கியத்தில் கவனமுடன் இருக்கவும். கண்டதையும் வாங்கி சாப்பிடாதீர்கள்.

## கடகம்




தங்களுக்கு பல வழிகளில் அலைச்சல் உண்டாகும். உத்தியோகத்தில் மாறுதலாகி செல்ல நேரிடும். அதன் மூலம் ஒரு சிலர் குடும்பத்தை பிரிந்து செல்ல நேரிடும் .

குடும்பத்தில் இடையே ஒரு சில கருத்து வேறுபாடுகள் ஏற்பட வாய்ப்பு உண்டு.

ஒருவருக்கொருவர் கோபத்தைக் குறைத்துக் கொண்டு விட்டுக் கொடுத்து வந்தால் வாழ்க்கை சந்தோஷமாக அமையும். ஜுலை மாதத்துக்கு பின்னர் ஒரு சிலர் புதிய வீடு வாங்கி குடியேறுவர். வாகன யோகமும் ஏற்படும்.திருமணம் ஆகாதவர்களுக்கு திருமணம் கைகூடும். புத்திரபாக்கியம் இல்லாதவர்களுக்கு புத்திர பாக்கியம் உண்டாகும். உத்தியோகம் இல்லாதவர்களுக்கு வேலை கிடைக்கும். மாணவர்கள் கல்வியில் மேன்மை அடைவர்.ஒரு சிலர் புதிய தொழில் தொடங்குவர்.

## சிம்மம்



உங்களுக்கு நன்மையும், தீமையும் கலந்து நடக்கும் வருடமாகும். முதலில் உடல் நலத்தில் கவனமுடன் இருக்க வேண்டும்.தேவை இல்லாத பதற்றம் உண்டாகும்.அதனால் உடல் நலம் பாதிக்கக் கூடும். அதில் இருந்து விடுபட ஆன்மிகத்தில் ஈடுபாடு கொள்ள வேண்டும்.

தெய்வ வழிபாட்டின் மூலமாக பதற்றத்தைக் குறைக்கலாம். வழக்குகளில் பிரச்சினைகள் இருந்தாலும் தங்களுக்கு சாதகமான சூழ்நிலை ஏற்படும்.தெய்வ வழிபாடுகள் விடாமல் செய்யவும். கண்டம் ஏற்பட வாய்ப்பு உண்டு. உடல் நலத்தில் அதிக அக்கறை எடுத்துக் கொள்ளவேண்டும்.


உங்களது சகோதர,சகோதரிகளிடம் மனம்கோணாமல் நடந்து கொள்ளவும். சொத்துப் பிரச்சினைகளில் அவர்களுக்கு சேர வேண்டிய பாகத்தைக் கொடுத்து விடவும்.

## கன்னி




நினைத்த காரியங்களை நிறைவேற்றும் காலமாகும்.தாங்கள் எந்தத் துறையில் இருந்தாலும் அதில் நல்ல பெயரும் புகழும் ஏற்படும். திருமணம் ஆகாதவர்களுக்கு திருமணப் பாக்கியம் ஏற்படும். புத்திர பாக்கியம் உண்டாகும். ஒரு சிலருக்கு இடமாற்றம் ஏற்படும். ஒரு சிலர் குடும்பத்தை பிரிந்து வாழநேரிடும். கணவன்-மனைவி இடையே கருத்து வேறுபாடுகள் உண்டாகும். இருவரில் ஒருவருக்கு உடல் நலம் பாதிப்பு ஏற்படும். உடல் நலத்தில் கவனம் தேவை. ஒரு சிலருக்கு வீடு கட்டும் யோகம் உண்டாகும். அல்லது பழைய வீட்டை இடித்துத் பராமரிக்கும் வேலை ஏற்படும். ஒரு சிலர் வாகனம் வாங்கி மகிழ்வார்கள்.பொருளாதாரத்தில் மேன்மை உண்டாகும்.

## துலாம்



நன்மையும் தீமையும் கலந்து பலன்கள் நடைபெறும்.தந்தைக்கும் மகனுக்கும் கருத்து வேறுபாடுகள் ஏற்படும். ஒரு சிலர் தாய், தந்தையரை விட்டுப் பிரிந்து செல்ல நேரிடும்.ஒரு சிலர் வெளிநாடு செல்வர்.ஒரு சிலருக்கு கண் பார்வை கோளாறு ஏற்படும். ஒரு சிலருக்கு கண் அறுவைச்சிகிச்சை செய்ய நேரிடும். உடல் நலத்தில் அக்கறையுடன் இருக்க வேண்டும். காது. மூக்கு,தொண்டையில் ஒரு சிலருக்குப் பிரச்சினை உண்டாகும். ஒரு சிலர் வீடு,மனை வாங்கி மகிழ்வார்கள்.ஒரு சிலர் பழைய வீட்டை புதுப்பித்து வீடு கட்டுவார்கள்.திருமணம் ஆகாதவர்களுக்கு திருமணம் கூடி வரும். பொருளாதாரத்தை பொறுத்தவரை நல்ல உழைப்புக் கிடைக்கும். அதற்குத் தகுந்தாற்போல் செலவீனங்களும் அதிகமாக இருக்கும். முடிந்த வரை சிக்கனமாகச் செலவு செய்வது நன்மை பயக்கும். புனித யாத்திரை குடும்பத்துடன் சென்று வருவீர்கள். குலதெய்வவழிபாடுமிகவும் நன்மை அளிக்கும்.

## விருச்சிகம்




உங்களுக்கு அதிக அளவில் தொல்லைகள் தராத வருடமாகும். ஜென்ம சனி நடைபெற்று வருவதால் பணம்,பொருள்,ஆபரணங்கள் விடயத்தில் மிகவும் கவனமாக இருக்கவும். உத்தியோகத்தில் உள்ளவருக்கு உழைப்பு அதிகமாக இருக்கும். உழைப்பின் மூலமாக பணவரவு அதாவது சம்பளம் உயர்வதற்கு வாய்ப்பு உண்டு. தொழில் செய்பவர்கள் உழைப்பின் பலனாக லாபம் அதிகரிக்கும்.

வாகனங்கள் வாங்குவதும்,விற்பதும் நடைபெறும்.ஒரு சிலருக்கு வாகனங்கள் பழுதடைவதாலும் பராமரிப்புச் செய்ய நேரிடும். கம்பனிகளில் வேலை புரிபவர்களுக்கு அலைச்சல் அதிகமாக இருக்கும்.

குடும்பத்தில் உள்ளவர்களுக்குள் ஒருவருக்கொருவர் மனக்கசப்பு ஏற்படும் வாய்ப்பு உண்டு. உறவினர்களுடன் பகை ஏற்படும். கவனமாக பேசவும்.


## தனுசு



எதிரிகளின் தொல்லை ஓரளவு குறையும். பங்காளிகளுக்குள் இருந்து வந்த பிரச்சினைகள் நண்பர்களின் ஒத்துழைப்பால் தீரும். செய்தொழிலில் முன்னேற்றம் ஏற்படும். அதிகாரிகளின் அனுசரணையால் அரச ஊழியர்களுக்கு பதவி உயர்வுகள் கிடைக்கும். வெளியூர் பயணங்கள் நன்மைதரும். ஐப்பசி மாதத்தில் புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். வாகனம் போன்றவற்றில் முதலீடு செய்யலாம். மாசி மாதத்தில் ஆரோக்கியம் சீராகும். சகோதரரால் நன்மை உண்டு.

சந்தோஷமும், சௌகரியங்களும் பல்கிப் பெருகும். தடைக் கற்கள் எல்லாம் படிக் கற்களாக மாறும். எடுத்து வைக்கும் ஒவ்வோர் அடியும் வெற்றிப் படியாக இருக்கும். அதைத் தொடர்ந்து வரும் காலங்களில் வெளிநாட்டுப் பயணங்களால் அல்லது வாணிபத்தால் இலாபம் கிடைக்கும். பொருளாதார நிலை உயரும். புகழும் ஓங்கும். புத்தி தெளிவுற்று, அறிவுத் திறன் கூடி. உயர்கல்வியில் முன்னேற்றமிருக்கும். ஓர் அரசனைப் போல் இவர்களுக்கு பணியாள்கள் அதிகமிருப்பர். அடுத்து வரும் மாதங்களில் செய்யாத குற்றத்திற்காக பழிச் சொல்லுக்கு ஆளாக நேரிடலாம். பேச்சாளர்களுக்கு வாக்குவன்மையால் வருமானமும், புகழும் உயரும்.

## மகரம்



நல்ஆரோக்கியம், சந்தோஷம், மன அமைதி, இலாபம் ஆகியவை ஏற்படும். ஐப்பசி மாதத்தில் எதிர்பாராத வெற்றிகள் கிடைத்து உள்ளம் மகிழும். செல்வநிலை உயரும். நோயிலிருந்து விடுதலை பெற்று சுகம் பெறுவீர்கள். புதிய தொழில் முயற்சிகள் எதிர்பார்ப்புக்கு மேலான வெற்றிகளைத் தரும். உயர் அதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும்.

பொருளாதார உயர்ச்சி ஏற்படும். தனியார், அரசுப் பணியாளர்களுக்குத் தங்கள் தகுதிக்கு ஏற்ப பதவி உயர்வுகள் கிடைக்கும். பூமிலாபம், மகிழ்ச்சியான குடும்ப வாழ்க்கை மற்றும் நவநாகரிக, நவீன சுக சாதனங்களோடு வீடு நிறைந்திருக்கும். பின்னர் உணர்ச்சி மிகுதல். பெண்களால் தொல்லை. அதிக வெப்பத்தால் வரும் வியாதிகள் ஆகியவை ஏற்பட்டு சிறிது இன்னல் தரும். வழக்குகளில் வெற்றி. காரிய வெற்றி. கட்டுப்பாடற்ற சுதந்திர சுகமும் உண்டாகும்.

நிதானமாகப் பொழியும் மழை போலப் பொருளாதார நிலை சீராக இருக்கும். அன்புப் பெற்றோர்க்கு ஆரோக்கியக் குறைவு ஏற்படும். சிலருக்கு அவப்பெயர் உண்டாகலாம். எதிர்காலத்தில் கல்வியில் முன்னேற்றம் உண்டாகும். கௌரவம் ஓங்கும். அழகிய மனைவி அமைவாள். பல்வகை யோகமும், சந்ததி விருத்தியும் ஏற்படும். கௌரவப் பட்டங்கள் தேடிவரும்.

## கும்பம்



காரியங்கள் யாவும் வெற்றியின் திக்கை நோக்கியே செல்வதால், அச்சமின்றி அனைத்துக் காரியங்களிலும் ஈடுபடலாம். நீண்ட தூரப்பயணங்களைத் தவிர்ப்பது நல்லது. தொழில் விருத்தி உண்டு. கார்த்திகை மாதத்தில் பணம் கொடுக்கல் வாங்கலில் எச்சரிக்கை தேவை.

தொழில் முன்னேற்றங்களால் பொருளாதார நிலை மிகவும் திருப்திகரமாக இருக்கும். வசதிகள் அனைத்தும் நிரம்பிய அழகிய வீடு அமையும். புத்திர பாக்கியம் ஏற்பட்டு மனமகிழ்ச்சியும் ஏற்படும். தீயவர்கள் தரும் தொல்லைகள் ஒரு முடிவுக்கு வரும். எல்லாக் காரியங்களிலும் வெற்றி கிடைக்கும்.

மாணவர்கள் மெத்தனமாக இராமல், கவனமாகப் படித்தால் நன்றாக மிளிரலாம். குடும்பத்தில் சுபகாரிய நிகழ்வுகளுக்கான நல்ல தருணங்கள் அமையும். உறவினர், நண்பர்களின் வரவு உற்சாகம் தரும். கலைஞர்களின் கௌரவமும், புகழும் கூடும். உயர் அதிகாரிகளோடு ஒத்துப் போகமுடியாத நிலையால், வரவேண்டிய பதவி உயர்வுகளில் இடையூறுகள் ஏற்படும்.

## மீனம்



உடல் ஆரோக்கியம் உன்னதமாக இருக்கும். தொழில் நிலைகள் மேம்படும். எதிலும் துணிந்து இறங்கும் மனோதைரியம் கூடும். ஆவணி மாதத்தில் பகைவர்களை வெல்வீர்கள். நோய்கள் குறைந்து ஆரோக்கியம் பெருகும். மன விருப்பங்கள் அனைத்தும் நிறைவேறும். மார்கழி மாதத்தில் வெற்றி மேல் வெற்றிகள் குவியும். எடுக்கும் காரியங்கள் அனைத்தும் சிறப்பாகவே முடியும்.நல்லதொழில்கிடைக்கும்.புதியபதவி,கௌரவம் மற்றும் அதனால் ஏற்படும் சந்தோஷம் ஆகியவற்றைக் குறிக்கும்.


எதிர்காலத் திட்டம் எனும் காய் கனிந்து, சுவைதரும் காலம் கண்ணுக்குத் தெரியும். முறையற்ற உணவுப் பழக்க வழக்கங்களால் அஜீரணக் கோளாறுகள் ஏற்படலாம். சிலர் தேவையற்ற குற்றச்செயல்களில் ஈடுபடுவர். பொருளாதார உயர்வு ஏற்படும். எல்லாத் துறைகளிலும் இலாபம் ஏற்படும். பகைவரால் ஏற்பட்டு வந்த அச்சங்கள் நீங்கும். தகராறுகள், வழக்குகள் எல்லாம் தங்களுக்குச் சாதகமாகவே முடியும்.



# தீபன் பதிப்பகம்

சகல விதமான அச்சு வேலைகளும் சிறந்த முறையில்
குறிப்பிட்ட தவணையில் செய்து கொடுக்கப்படும்

வாடிக்கையாளர் அனைவருக்கும் இனிய சித்திரைப்புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்



உரிமையாளர்
சி.தீபானந்

தொ.பே - 077 652 0315

வி.எம். றோட், பருத்தித்துறை.

பிரதான வீதி, பருத்தித்துறை.

theepanoffsetprinters@gmail.com

அனைத்து வாடிக்கையாளர்களுக்கும்
இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்

அனைத்து மருந்து வகைகளுக்கும் பால்மா வகைகளுக்கும்
நாடவேண்டிய இடம்

# நெல்லியடி மெடிக்கல்ஸ்

N.M.M.V.Road,
Nelliady.

T.P: 021 226 2975



அன்பர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும்
எமது புதுவருட வாழ்த்துக்கள்.

# ஸ்ரீ சுசிலா ஆபரண மாளிகை

# Sri Susila Gold House

(916 KDM) தங்க நகைகள் மொத்தமாகக் கிடைக்கும்.
239, பிரதான வீதி, பருத்தித்துறை

239, Main Street, Point Pedro.

T.P. No: 077 721 0206, 021 226 1003, 021 320 7437

239, பிரதான வீதி, பருத்தித்துறை.

# EAGLE PAINT SHOP NELLIADY

அன்பர்கள், ஆதரவாளர்கள்,
வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
எமது இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்.

உங்கள் வாகனங்கள், இல்லங்கள் மற்றும்
அலுவலகங்களை அழகுபடுத்த

- ★ ஸ்பிறே பெயின்ற் வகைகள் (Debeer, Sunny, Metalic)
- ★ கட்டட பெயின்ற் வகைகள் (Colour box, GLO, Shield Kenlux)

நீங்கள் பெற்றுக் கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்.

இல. 24, கொடிகாமம் வீதி, நெல்லியடி, யாழ்ப்பாணம்.

T.P: 021 226 1226, 077 149 2439



Real Italian **Vinmeen**

# Pizza

அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்.

நவீன உயர்தர வெதுப்பக உற்பத்திகளை
மொத்தமாகவும் சில்லறையாகவும்
எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

மங்கலகரமான நிகழ்வுகளுக்குத்
தேவையான உணவுகளை
ஓடர் செய்து பெற்றுக் கொள்ளலாம்.

Vinmeen
RESTAURANT & BAKERY
Delivery Time: 11.00 a.m to 8.30 p.m

No.83, MAIN STREET, NELLIADI, KARAVEDDY
T.P: 021 226 1051.

கிளை : பஸ் நிலையம் முன்பாக [இலங்கை வங்கி அருகில்]
கொடிகாமம் வீதி - நெல்லியடி,
T.P: 021 226 1354.

# SINGER Plus

அனைவருக்கும்
சித்திரைப்புதுவருட வாழ்த்துக்கள்.



Point - Pedro Road, Nelliady. T.P: 021 226 4937

# பிரியங்கா டிஜிற்றல் கலர் லாப்

பருத்தித்துறை வீதி, நெல்லியடி. தொ.இல: 0094 021 226 2737

வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்.

- Digital Photo Printing. (6x4 - 12x36)
- Album Designing, Album Making.
- Chrystal Making.
- Photo Frame Making. (Chrystal, Velvet, 3D, Duro, Glass)
- Cool, Hot, Uv, 3D, Velvet Lemination.
- Indoor & Outdoor Photography.



**வாடிக்கையாளர் நலன் கருதி சிறப்பு சலுகை**

மங்கலகரமான நிகழ்வுகளுக்கான அல்பம்
செய்து வழங்குதல்.

Album - 10x24 - 01 Sheet - 800/=
Album - 10x30 - 01 Sheet - 1000/=
Album - 12x30 - 01 Sheet - 1200/=

# தாரிகை பியூட்டி பார்லர்

ஃபேஷியல், ஐபுறோ
மேக்-அப் மற்றும்
அழகுபடுத்தும் சேவைகள்
யாவும்....

வாரத்தில் 7 நாட்களும்



மத்திய கல்லூரி வீதி
நெல்லியடி

அன்பர்கள் அனைவருக்கும் இனிய புத்தாண்டு நல் வாழ்த்துக்கள்.
சகல விதமான சிற்றுண்டி வகைகளுக்கும்
நாடவேண்டிய இடம்

**Green Leaf Cream House**

N.M.M.V.Road, Nelliady, Karavedy.
T.P: 077 377 3197

அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்களுக்கும்
இனிய சித்திரைப் புத்தாண்டு வாழ்த்துக்கள்
கர்ப்பிணிப்பெண்களுக்கான ஆடை வகைகள்
மற்றும் மழலைச் செல்வங்களின் மகிழ்ச்சித் தெரிவிற்கு
தனித்துவமான ஒரே இடம்

**சாயிராம்**

மதர் அன் பேபி நீட்ஸ்
Hospital Road, Manthikai.
T.P: 021 300 1790

அன்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
எமது இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்.

**கீரன் இந்தியன் பெசன்**

ஆடவர், நங்கையர், சிறுவர்கள், பெரியோர்கள் அனைவரின்
விருப்பத்திற்கு ஏற்ற வகையில் ஆடைகளைத் தெரிவு
செய்ய நாடவேண்டிய இடம்.
இல. 06, நவீன சந்தை, வல்வெட்டித்துறை T.P: 077 344 1590

அனைவருக்கும் இனிய புத்தாண்டு நல் வாழ்த்துக்கள்!

**சந்நிதி மெடிக்கல்ஸ்**

சகல விதமான மருந்து வகைகளும்
பால்மா வகைகளும் நியாய விலையில்
பெற்றுக்கொள்ளலாம்.

**SANNITHY MEDICALS**

Main Street, Point Pedro. T.P : 077 248 7230

# நெல்லியடி சரவணா ரெக்ஸ்

அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
எமது இதயம் கனிந்த புத்தாண்டு வாழ்த்துக்கள்



பண்டிகைக்
காலங்களுக்கேற்ற
ஆடை
வகைளினதும்
பாரம்பரியத்தின்
கைராசியான
திருமணப் பட்டுப்
புடைவைகளினதும்
சாம்ராச்சியம்

171, பிரதான வீதி, நெல்லியடி, 021 226 2992,
(சம்பத் வங்கி அருகில்) கரவெட்டி.

**திருக்குமரன் உணவகம்**
**மதுஷன் பேபி நீட்ஸ்**
அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்கள்.
மந்திகை வைத்தியசாலை
முன்பாக, பருத்தித்துறை.
T.P : 077 468 3226

**வசந்தம் நெற் & மொபைல் பிளாசா**
வாடிக்கையாளர் அனைவருக்கும் இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்.
கணினி பழுதுபார்த்தல், கணினி உதிரிப்பாகங்கள்,
கையடக்கத் தொலைபேசி பழுதுபார்த்தல் ஆகியன
சிறந்த முறையில் செய்து கொடுக்கப்படும்.
வசந்தம் நெற் அன்ட் மொபைல் பிளாசா
உடுப்பிட்டிச்சந்தி, உடுப்பிட்டி. T.P: 021 226 3508

இனிய சித்திரைப் புத்தாண்டு வாழ்த்துக்களைத்
தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம்

**Saai Pc** For Computer Solution

Computer Repairing All Phone Unlocking &
Repairing & All Satellites Receivers Receivers
Recharge Available Here
skype
Chavakachcheri Road,
Manthikai.
T.P 021 226 2345
077 636 5882
Fax 021 226 2345
e.mail saaipc@yahoo.c0m

அனைவருக்கும் இனிய தைப்பொங்கல் நல்வாழ்த்துக்கள்.

**நந்தினி பழக்கடை**

சகல விதமான உள்நாட்டு, வெளிநாட்டு பழவகைகள்
மற்றும் வெளிநாட்டுக்கு அனுப்பக்கூடிய பருத்தித்துறை தட்டை
வடை மற்றும் பலகார வகைகள், சுத்தமான பனங்கட்டி,
எள்ளுப்பாகு, கேக் வகைகள், பிஸ்கற் வகைகள் என்பவற்றை
ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
நந்தினி பழக்கடை
நவீன சந்தை, (பஸ் நிலையம் அருகில், பருத்தித்துறை)
T.P: 077 273 7514

**EASY SOLUTIONS**
www.easysolutions.lk

பண்டிகைக் கால
விசேட விலைச்சலுகை

கணினி விற்பனை,
கணினி திருத்தம்,
லப்டொப் விற்பனை, திருத்தம்
இணைய தள வடிவமைப்பு
இணைய விளம்பரம்
டொமைன் சேவர் இடவசதி
மென்பொருள் வடிவமைப்பு
நெற்வேர்க்கிங்
அன்ரிவைரஸ் தீர்வுகள்

**EASY SOLUTIONS**
MMV Road, Nelliady. TP : 021 226 1120 , 0774386599

**ANNAI MUTHUMARI TRAVELSS**
COLOMBO - JAFFNA - POINT PEDRO
POINT PEDRO - JAFFNA - COLOMBO



அன்பர்கள், ஆதரவாளர்கள்,
வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
எமது இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்.

Colombo Seat Reservation
Tel: 077 772 4053
Jaffna Vadamarachi Seat Reservation
Tel: 021 226 3770, 077 285 0285
(தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெற்ற சேவை)

அனைவருக்கும் இனிய சித்திரைப்புத்தாண்டு நல் வாழ்த்துக்கள்.

துஷானி கிளாஸ் ஹவுஸ்

சகல விதமான ஹவுஸ் பேணிச்சர்ஸ், பிற்றிங் வேலைகள், கிளாஸ் வகைகள், மெத்தை வகைகள் அனைத்தையும் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்.

இல.114, பிரதான வீதி, நெல்லியடி,
தொ.பே: 021 226 3076

அனைவருக்கும் எமது இனிய சித்திரைப் புத்தாண்டு வாழ்த்துக்கள்.

இயற்கைப் பூக்கள் விற்பனை

நுவரெலியா இயற்கைப் பூக்கள், பூங்கொத்துக்கள் உங்கள் தேவைக்கேற்ப முற்பதிவு செய்வதன் மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.

T.P:- 0772543253, 077 3907335

JO ENTERPRISES
#23, CHAPEL STREET
JAFFNA
021 320 2928

அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்கள்.

Sai Photo & Video Modaling Studio

திருமணவிழா, பூப்புனித நீராட்டு விழா, பிறந்தின வைபவம், புதுமனைப் புகுவிழா, எந்த விழாக்கள் ஆயினும் சிறந்த முறையில் வீடியோ, போட்டோ செய்து கொடுக்கப்படும்.

T.P: 075 040 9344 M.M.V.Road, Nelliady.

R.K & SONS ELECTRONICS

Dealers in All Kind of Electronic & gift Items Etc....

TV, Deck, DVD, CD Player, Radio, Dish TV, Washing Machine, Fan, Fridge, Grinder, Cassette Recorder, Oven, Rice Cooker, Etc...

No.120, Main Street, Nelliady.
T.P: 021 226 2981

அன்பர்கள், வாடிக்கையாளர்களுக்கு இனிய சித்திரைப் புத்தாண்டு வாழ்த்துக்கள் உரித்தாகுக.

மனோகரன் ஹாட்வெயார்

உங்களுக்குத் தேவையான கட்டடப் பொருள்கள், பெயின்ற் வகைகள், pvcபைப், மாபிள்வகைகள் என்பவற்றுடன் துவிச்சக்கரவண்டிகள், எலெக்ரிக் பொருள்கள் என்பவற்றை மொத்தமாகவும், சில்லறையாகவும் குறைந்த விலையில் பெற்றிடலாம்.

சாவகச்சேரி வீதி, மந்திகை, புலோலி.
தொ.பே:021 226 4192

e Mobile & Lap Mart

- Unlocking
- Spare Parts
- All Kind Of Cellular Phone Sales
- Software & Hardware Solutions
- Lap Accessories & Lap Repair

airtel Dialog HUTCH etisalat

Main Street
Nelliady,
T.P : 021 226 1414

அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் புத்தாண்டு நல் வாழ்த்துக்கள்.

யாழ் நகரில் தொலைபேசி விற்பனையில் முன்னோடியான

யாழ் போன் சொப்

இல. 05, கஸ்தூரியார் வீதி, யாழ் மாநகரசபை, புதிய கட்டடத் தொகுதி, யாழ்ப்பாணம்.

09, ஆஸ்பத்திரி வீதி, நவீனசந்தை வெளிப்புறம், யாழ்ப்பாணம்.

அன்பர்கள், நண்பர்கள், நல் ஆதரவாளர்கள் அனைவருக்கும் சிவகணேசன் ரெக்ஸ்ரைல்ஸ் நிறுவனம் வழங்கும் இதயம் கனிந்த இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்.

SIVAKANESAN TEXTILES

யாழ் நகரில் மக்கள் போற்றும் மகத்தான ஜவுளிகளின் மனம் கவரும் மாளிகை.

T.P: 021 222 2063 # 41, Grand Bazaar, Jaffna.

இனிய சித்திரைப்புத்தாண்டு வாழ்த்துக்கள் உரித்தாகுக.

தரமானதும் சுவையானதுமான உணவு வகைகளைப் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்

அருள் நாயகி
சைவ உணவகம்

பிரதான வீதி, நெல்லியடி

அனைவருக்கும் எமது இனிய சித்திரைப் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்.

த சசிகா லேணர்ஸ்

THE SASIKA DRIVING SCHOOL

அரச அங்கீகாரம் பெற்ற சாரதிப் பயிற்சிப் பாடசாலை - DS No 332

வாகனப் பயிற்சிகள் அவர்களுக்குத்தகுந்த நேரத்தில் அளிக்கப்படும்.

உரிமையாளர்:B.போல்

T.P. No: 021 221 7678
077 722 6247

இல 57, வேம்படி வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ்திருக்குடும்ப கன்னியர் மட பாடசாலை முன்பாக)

நேரடியாக கொழும்பிலிருந்து தருவிக்கப்பட்ட பொருள்களை யாழ் விலையில் சாவகச்சேரி நகரில் பெற்றுக்கொள்ள....

பாடப்புத்தகங்கள் விசேட கழிவு விலையில்

வாரீர் வந்து பெறுவீர்... தனங்கிளப்பு வீதியில்

# பொதிகை

புத்தகசாலை

கொம்பியூட்டர் கிராபிக்ஸ்

இல. 03, தனங்கிளப்பு வீதி, சாவகச்சேரி.(நவீனசந்தை அருகாமை)

வியாபாரிகளுக்கு விசேட விலைக்கழிவு வழங்கப்படும்

ஒரு முறை விஜயம் செய்து பாருங்கள் உண்மை புரியும்

T.P 0212270447
email : phothigai@gmail.com

All Kinds of Computers, Electronic Items & Accessories

# அல்டி எலக்ரோனிக்ஸ்

hp Kingston intel ASUS SONY SAMSUNG

CCTV

BEST CHOICE

No:15, Stanley Road, Jaffna. Tel: 021 222 2676

யாழ். நகர் மத்தியில் நவீன வசதிகளுடன் கூடிய

# அண்ணாமலையான் ஸ்ரீ ராகவேந்திரர் கலாசார திருமண மண்டபம்

## ASR Cultural Wedding Hall



- முற்றிலும் குளிரூட்டப்பட்ட மண்டபம்.
- 700 பேர் இருக்கைகளில் அமர்ந்திருந்து திருமணத்தைப் பார்க்கும் வசதி.
- கீழ் மண்டபத்தில் 350 பேர் அமர்ந்திருந்து நிகழ்வினைப் பார்க்கக் கூடிய வசதி.
- ஒரே நேரத்தில் 200 பேர் உணவருந்தும் வசதி.
- Lift வசதி, விசாலமான வாகன தரிப்பிட வசதி.
- அனைவரும் திருமணத்தைப் பார்க்கும் தொலைக்காட்சி வசதி.
- உணவுகளை தாங்களே பரிமாறிக் கொள்ளும் வசதி. மற்றும் உங்கள் விருப்பத்திற்கு ஏற்ற முறையில் அனைத்து வசதிகளும் செய்து கொடுக்கப்படும்.

## ASR Enterprises (PVT) Ltd

இல.542, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 373 4116, 021 222 1355, 021 222 1356.
மின்னஞ்சல்: asrhall@holmail.com
Find us on: Facebook.com/jaffnaasrenterprises

# Computer Corner

*Quick way to solutions*

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு சிறப்பு விலைச் சலுகை



**Laptop HP**
- intel core i3 4th G
- 4GB DDR111 RAM
- 500 GB HDD
- DVD Writer Optical
- 15.6" LED Display
- WLAN/ BT

61,999/=

**System 1**
- intel core i3 4th G
- Mother Board H81M P 33
- 2GB DDR111 RAM
- 500 GB HDD
- DVD Writer Lite ON
- Monitor HP 19"
- Casing
- Keyboard
- Mouse
- UPS Power 111

56,499/=

**System 2**
- intel Duo Core 3.00 GHz 4th G
- Mother Board H81M P 33
- 2GB DDR111 RAM
- 500 GB HDD
- DVD Writer Lite ON
- Monitor HP 19"
- Casing
- Keyboard
- Mouse
- UPS Power 111

47,499/=

**System 3**
- intel Core 2 Duo 2.93 GHz
- Mother Board
- 2GB DDR11 RAM
- 160 GB HDD
- DVD Writer
- Monitor HP
- Casing
- Keyboard
- Mouse

19,999/=

உங்கள் கணனி பிரச்சனைகளைத் தீர்க்க உங்கள் இல்லங்களுக்கே வந்து சரி செய்து தருகிறோம்

சேவைக்கட்டணங்கள் யாவும் இலவசம்

K7 Antivirus
1 User 1,299/=
3 User 2,699/=


HP Monitor 12,499/=
4GB Pendrive 599/=
8GB Pendrive 799/=
16GB Pendrive 1,650/=
32 GB Pendrive 2,750/=
Mouse 199/=
Web camera 750/=
2GB Micro SD card 275/=
4GB Micro SD card 300/=
Head Phone 350/=

Free for Laptop : Head Phone, Mouse, Laptop Bag
System for Laptop : Speaker, Card Reader Head Phone, Webcam

K.K.S Road Mallakam

TP No :- 021 205 9044
021 561 8547
077 353 7126

# KANDY HOMES & Construction





நவீன வடிவமைப்புக்களில் உங்களது விருப்பத்திற்கு அமைய எண்ணம் போல அழகிய வீட்டினை வாஸ்துசாஸ்த்திர முறைப்படி நாம் அமைத்துக் கொடுக்கின்றோம்.

- 15 வருட கால அனுபவம் வாய்ந்த சேவைத்துறையில்
- தற்பொழுது எமது நிறுவனத்தால் கட்டி முடிக்கப் பட்ட வீடுகளினையும் கட்டிக் கொண்டிருக்கும் வீடுகளையும் நேரில் பார்வையிடலாம்.



81. Pallaly Road,
Illupaiyadi Junction,
Jaffna.

T.P :- 0777462889
0777463469
0217917623

Email :- kandyhomes11@gmail.com



# "தேர்த்திருவிழா"



> "என்னங்க.... நாளை விடிஞ்சால் சித்திரை வரிசம்.... அதோடை மருதடியாரின் தேரும் ஒன்பது பத்து வருசங்களுக்குப் பிறகு நாளைக்குத் தானே நடக்கப் போகுது.... நல்ல நாள் பெருநாளெண்டு போன வரிசமும் நாங்க போகேல்லை..... மருதடிப்பிள்ளையாரேண்டு பெரு மூச்சு விட்டுக்கொண்டிருந்தால் முடிஞ்சிடுமா...."

**தேவி பரமலிங்கம்**

**நா**ளைய பொழுது விடிந்தால் சித்திரை வருடப் பிறப்பு. மானிப்பாய் மருதடிப் பிள்ளையார் கோயில் தேர். ஒன்பது பத்து வருடங்களுக்குப் பின்பாக மருதடியான் தேரில் ஆரோகணிக்கப் போறார்.

புத்தாடை தரித்துப் பக்தகோடிகள் மருதடியான் திருத்தேரின் ஊர்வலத்தில் கலந்து நிற்கும் காட்சியே ரம்மியமானது. வீதிகளின் மருங்கெல்லாம் சிதறிக் கிடக்கும் தேங்காய்த் துகள்களுக்கு எண்ணிக்கையே கூற முடியாது. பக்த கோடிகள் போவதும் வருவதுமாக அக்காட்சி விழாக்கோலம் பூண்டிலங்கும்.

"மருதடிப் பிள்ளையாரே...."

நீண்டதொரு பெருமூச்சின் முடிவாக இவ்வார்த்தைகள் வேலுப்பிள்ளையின் வாயில் இருந்து சிதறின.

"அப்பு... போன சித்திரை வருசத்துக்கு எனக்குப் புதுச்சட்டை வாங்கித் தந்து மானிப்பாய் மருதடிப் பிள்ளையார் கோயிலுக்குக் கூட்டிப் போவதாகச் சொல்லி ஏமாத்திப் போட்டாய்.... அதுதான் போனது போகட்டும்... அப்ப சொன்னாயே வாற வரிசம் கட்டாயம் உனக்குப் புதுச்சட்டை புதுச் 'சோக்கான' மணிக்கூடு. மோதிர மெல்லாம் வாங்கித் தாறனெண்டு...."

நிலைமையைச் சமாளிக்கப் போனவருடம் வேலுப்பிள்ளையர் அப்படி எல்லாம் சொல்லி வைத்தார். அதை இன்னாமும் மறக்காமல் நினைவு வைத்திருந்து நேற்றுக் கேட்டுப்போட்டான் அவரின் ஒரேமகனான அரியம்.

அரியத்துக்கு இப்பொழுது பன்னிரண்டு வயதாகிறது. வேலுப்பிள்ளையருக்கு அரியத்துடன் இன்னமும் ஆணும் பெண்ணுமாய் இரண்டு பிள்ளைகள் பிறந்தனர். அதுகள் வேலுப்பிளையரோடோ. இவர் அதுகளோடோ சேர்ந்துவாழ இறைவன் விட்டுவைக்கவில்லை. அப்பிள்ளைகளின் மீதிருந்த பாசம் எல்லாவற்றையும் இவன் மீது செலுத்தி ஒரு குறை ஏதும் வராமல் கவனித்து வந்த வேலுப்பிள்ளையருக்குப் போன சித்திரை வருடத்துக்கு உடுபுடைவை வாங்கிக் கொடுக்கவோ. கோயிலுக்குக் கூட்டிச் சென்று விளையாட்டுப்பொருள்களை வாங்கிக் கொடுத்து அவனை மகிழ்ச்சிப்படுத்தவோ வசதிப் படாததை நினைத் தால் நெஞ்சை உறுத்தும்.

கைவசம் இருந்த கொஞ்ச நஞ்சப் பணத்துடன் மனைவி பார்வதியின் உடமைகளையும் வித்துச் சுட்டு. தரிசாசக் கிடந்த மூன்று ஏக்கர் காணியில் வாழையைப் பயிரிடுவதற்கு செலவு செய்ததால் அவரிடம் கிட்டி வந்த சித் திரை வருசத்துக்கு மகனுக்குப் புது உடுபுடை வையோ. நல்ல உணவு வகைகளையோ வாங்கிக் கொடுத்து மகிழ்வுறச் செய்யும் வசதி இருக்கவில்லை.

அடுத்த வருடம். பயிரிட்டிருக்கும் வாழைத்தோட்டம் செலவு செய்துள்ளது போல் இன்னமும் இரண்டு மடங்கை கூடுதலாகத் தருமென்னும் எண்ணத்தில் மகனுக்கு அந்த வார்த்தைகளைக் கூறிச் சமாதானப்படுத்துவதைத் தவிர. அவருக்கு வேறொன்றும் அப்போ புலப்படவில்லை.

அதற்கிடையே மார்கழியில் அப்படியொரு பேய்க் காத்தும் பெருமழையுமாக வந்து வாழைத் தோட்டத்தைச் சீர்குலைக்குமென்று கண்டாரா?

நல்ல விலையில் விற்கக் கூடிய வாழைக்குலைகள் எல்லாம் காவிலை. அரைவிலை விற்றதனால் தேறிய பணத்தோடை அயலட்டைகளில் கடனைத் தனியைப்பட்டு மீண்டும் வாழைகளையே பயிரிட்டு விட்டு வெறுங்கையோடை இருக்கும் அவரிடம் இம்முறையும் மகனுக்கு உடுப்புகள் வாங்கிக் கொடுத்து மருதடியாரின் தேருக்குக் கூட்டிச் செல்லும் நிலை எப்படி இருக்கும்?

"மருதடிப்பிள்ளையாரே..."

பெரு மூச்சுக்கு இடையில் இவ்வார்த்தைகளைக் கூறி நிமிர அவர் எதிரில் மனைவி பார்வதி வந்து நின்றாள்.

"என்னங்க.... நாளை விடிஞ்சால் சித்திரை வரிசம்.... அதோடை மருதடியாரின் தேரும். ஒன்பது பத்து வருசங்களுக்குப் பிறகு நாளைக்குத் தானே நடக்கப் போகுது.... நல்ல நாள் பெருநாளெண்டுபோனவரிசமும்நாங்கபோகேல்லை..... மருதடிப்பிள்ளையாரோ எண்டு பெரு மூச்சு விட்டுக்கொண்டிருந்தால் முடிஞ்சிடுமா...."

"என்ன பார்வதி சொல்லுறாய்.... உனக்குத் தெரியாதே வீட்டு நிலைமை.... அவன் பிள்ளையைத் தான் போன வரிசமும் ஏமாத்திப் போட்டன். இந்த வரிசமும்...."

"இப்ப நான் சொல்ல வந்ததும் அதுதானே.... எனக்கோ உங்களுக்கோ வரிசம் கொண்டாட முடியேல்லை எண்டே அழ வந்தன்....."

" இப்ப அழவும் வேண்டாம்... சிரிக்கவும் வேண்டாம்.... என்னையிப்ப என்ன செய்யச் சொல்லுறாய்....."

"பெருநாளெண்டால் குழந்தைகளுக்குத்தானே குதூகலம்.... ஊரில எல்லாப் புள்ளைகளும் புதுச் சட்டையும் பெருமிதமாகவும் திரியேக்கை எங்கடை புள்ளைஅதுகளைப் பாத்து ஏங்க வைப் பதே எங்கட கடமை"

"அது சரி கையிலை ஒர சதமுமில்லையே. இப்ப என்ன பண்ண...."

"நீங்கள் நினைச்சா ஆகாத ஏண்டா இது... சும்மா உதாலை வெளிக்கிட்டுப் போயாவது பாத்துக் கொண்டு வாருங்க.... இப்புடியே இருந்து யோசித்துக் கொண் டிருந்தால்முடிஞ்சிடுமே.... எழும்புங்க எழும்பிப் போய் எப்படியாவது பார்த்துக் கொண்டு வாருங்க சீக்கிரம்...."

"உம்... ம்.... ம்......"

ஏதோ மருதடியான் மனம் வைத்தால் நாளைக்கு மருதடியானிட்டைப் போகலாம்.... என்னமோ போய்ப் பாப்பம்....

கீழே திண்ணையில் விரித்துக் கிடந்த சால்வைத் துண்டை எடுத்து உதறித் தலைப் பாகை கட்டிக் கொண்டு நடந்தார் வேலுப்பிள்ளை.

செம்பாட்டு மண் தரையில் நின்று வெட்டிப் பாத்தி அமைத்து. நாள் தோறும் பாத்திகளை திறந்து விட்டு நீர்பாய்ச்சி அடைத்து வாழைத் தோட்டம் ஒன்றுக்கே உழைப் பெல்லாம் நல்கும் அவரது மேனித் தசை நரம்புகள் விம்மிப் புடைத்துக் காட்சி தருகின்றன.

அவரின் பாதங்களின் அடிப் பகுதிகள் செம்பாட்டு மண்ணுக்கே உரிய செந்நிறமாய் தெரிகிறது. நடந்து வந்து தெருவில் கால் வைத்தவரின் சிந்தனையில் ஏதோபடவே மடியில் கையை விட்டுத் துளாவுகிறார்.

இரண்டு ரூபாய்க் குத்தியொண்டு கையில் அகப்படுகிறது எடுத்து பார்த்து விட்டு மீண்டும் மடியில்வைத்துக் கொண்டு நடந்தவர் நினைவில்....

"அப்பு... போன சித்திரை வருசத்துக்கு எனக்குப் புதுச்சட்டை வாங்கித் தந்து மானிப்பாய் மருதடிப் பிள்ளையார் தேருக்குக் கூட்டிக்கொண்டு போவதாகச் சொல்லி ஏமாத்திப் போட்டாய்... அதுதான் போனது போகட்டும்... அப்ப சொன்னாயே வாற வரிசம் கட்டாயம் உனக்குப் புதுச் சட்டை புதுச் 'சோக்கான' மணிக்கூடு மோதிரமெல்லாம் வாங்கித் தாறனெண்டு..."

மகன் அரியம் சொன்ன வார்த்தைகள் மீண்டும் நினைவுக்கு வந்து தைக்கின்றன.... மெல்ல நடந்து சந்திக்கு வந்தபோது சரவணை அண்ணரின் பார்வையில் பட்டு விடுகிறார் வேலுப்பிள்ளையர்.

"ஏய் வேலுப்பிள்ளை... என்ன யோசித்துக் கொண்டு வாறாய்....?" சரவணை அண்ணைதான் கேட்டார்.

"ஆரது... சரவணை அண்ணையே.... தெரியாதே நாளை சித்திரை வருசமும் வருது... அதுதான்...."

"சித்திரை வருசமெண்டா அதுக்கேன் யோசிப்பான்...?"

"யோசிக்காம என்னமும் செய்ய முடியுமே.... மகன் பொடியன் புது உடுப்பு வாங்கித்தரச் சொல்லி ஒற்றைக் காவில் நிக்கிறான்.... அதுதான் யோசிச்சுக்கொண்டே இப்புடி வெளிக்கிட்டன்... பெரிய கடைப்பக்கமாப் போய்ப் பாப்பமெண்டு.. போறதுக்கும் பஸ்ஸுக்குக் காசு போதாது... அண்ணே காசிருந்தா ஐம்பது ரூபா தாறியே பிறகு தாறன்...."

சரவணை அண்ணை மடியைத் துலாவிக் காசெடுத்துக் கொடுக்கவும். பஸ் சந்திக்கு வருவதற்கும் சரியாக இருக்கிறது. ஓடிப்போய் ஏறிக் கொண்டவர் மனதுக்குள்.... "மருதடிப் பிள்ளையாரே...."என்று சொல்லிக்கொள்ளவும் தவறவில்லை.

"வேலுப்பிள்ளை என்ன இங்காலை.... போன மழைக்கு உன்ரை தோட்டம் நல்லாப் பாதிக்கப்பட்டதெண்டும் கேள்விப் பட்டன்.... இப்ப என்ன செய்கிறாய்...?" சந்தையுள் நுழைந்த வேலுப் பிள்ளையரைக் கண்ட வாழைக்குலை வியாபாரி கேட்டான்.

"வேறை என்னத்தைச் செய்ய... அதைத்தான் கடன் பட்டுக் கிட்டு மீண்டும் துவங்கிருக்கிறன்... ஏதோ அந்த மருதடியான் கண்ணை முளிச்சாப் பிழைச்சிடலாம்..." வேலுப்பிள்ளையர் சொல்லி முடிக்கிறார்.

"அப்புடியே சங்கதி... ஆ.... ஹா... இதுலை இரண்ணை...." தானிருந்த 'பக்கூஸ்' பெட்டி ஆசனத்தை வழங்கி அவன் எழுந்து நின்று கொண்டான். "அனேகமாக எந்த மட்டிலை குலை வெட்ட லாம்..."

"வாற ஆவணிக்கெல்லாம் சந்தைக்கு வந்திடுமெண்டு நினைக்கிறன்..."

"அப்புடியெண்டா இந்த முறை உங்கடை தோட்டத்திலை உள்ள குலையள் எல்லாத்தேயும் எனக்கே தந்திடுங்க.... நல்ல விலை போட்டும் தாறன்... இந்த ரெண்டாயிரம் ரூபாவை முற்பணமாக வைச்சிருங்க"

பிடித்த பிடியிலேயே வேலுப்பிள்ளையரை விடாமல் காசை எடுத்து அவரின் கைக்குள் வைத்தும் அனுப்புகிறான். அந்த இரண்டாயிரம் ரூபாவில் மகனுக்கு காற்சட்டை, மேற் சட்டை வாங்கிக் கொண்டு மீதி ஆயிரத்து ஐந்நூறு ரூபாவுடன் பஸ்ஸுள் ஏறி இருந்து கொண்டவர் சிந்தனையில் மிதந்தார்.

மறுநாள்

மகன் அரியத்துக்கு புதுக் சட்டைகளை அணிவித்து வேலுப்பிள்ளையரும் மனைவியும் வயல் வெளிகளூடாக கால் நடையாக மருதடிப் பிள்ளையார் ஆலயத்துக்குச் செல்கிறார்கள்.

"ஆ...ஹா... ஜில்... ஜில்... தும்பு மிட்டாய்...."

"ஐஸ் சர்பத்.... சோடா... ஐஸ் சர்பத்... சோடா.."

"ஸ்டார் ஐஸ்கிறீமையே என்றும் சுவையுங்கள்..."

"ஓயில் கலப்பில்லாத சுத்தமான மினரல் வாட்டர்... ஓடி வாங்க..."

வீதியில் வந்து மிதந்த அவர்களின் காதுகளில் தேர்த்திருவிழாக் கோலாகல காட்சிகள் தென்பட்டன. கோஷங்கள் காதுகளில் வீழ்ந்து மகிழ்ச்சியை ஊட்டின.

"அரோகரா... மருதடியானுக்கு... அரோகரா...."

கோயிலை அண்மித்த அவர்களது காதுகளில் பக்த கோடிகளின் கூக்குரல்களும் காற்றில் மிதந்து வந்து விழுந்தன.

பக்தர்களுடன் சேர்ந்து கோயிலுள் சென்றவர்கள் ஆலயத்தின் புதுக்கோலங்களைப் பார்த்துப் பூரித்தே போயினர். நாற்புறம் கோபுரங்கள் நுழைவாயில்கள். வீதிகள் பளிங்கு பதித்துப் பாதங்களை ஸ்ரித்தது.

உள்ளே முன்போன்று நெருக்கடி இருள் மண்டிய நிலைமைகள் தோன்றாவண்ணம் அகலித்தும் கூரைகளை உயர்ந்தி அமைந்தும் ஆலயம் புதுப் பொலிவுடன் வரவேற்றது.

வழிபாடுகளை நிறைவேற்றித் திரும்புகையில் வேலுப்பிள்ளையர் முன்னேற்பாடாக மகன் அரியத்தை மணிக்கடையுள் அழைத்துச் சென்றார்.

மீதியாக வைத்திருந்த பணத்தில் அரியத்துக்கு 'ஓட்டமெற்றிக்' கைக்டிகாரம் 'றோல்கோட்' மோதிரம். சங்கிலி என்பன வாங்கி அணிவித்துப் பார்த்துச் சிரிக்கிறார். அரியமும் சிரிக்க தாயார் பார்வதியும் சேர்ந்து சிரிக்கின்றனர்.

"ஆ....ஹா... நவாலி சேச்சடி இறங்குங்கோ...."

கண்டக்டரின் குரல் வேலுப்பிள்ளையரின் கற்பனையில் குறுக்கிட்டுக் குளப்பியது.

சந்தியில் நின்ற பஸ்சால் இறங்கி வீடு நோக்கி நடந்துகொண்டிருந்தார் வேலுப்பிள்ளையர். இம்முறை சித்திரை வருடப் பிறப்பு மருதடியான் ஆலயப் புனருத்தாரண தேர்த்திருவிழாவுடன் நேர்த்தியாக அமைந்ததை மனதில் நினைத்து வேலுப்பிள்ளையர் "மருதடிப் பிள்ளையாரே... எங்கள் எல்லோரேயும் காத்தருளல் வேணடுமையா..." என்றார்.



# மன்மதப் புத்தாண்டே உமது வருகை அமைதியையும் சமாதானத்தையும் தரட்டும்

"புத்தாண்டுகள் பல பல கண்டோம்
ஜய ஆண்டைப் போல ஜயங்கள் கண்டதில்லை
ஜனாதிபதி தேர்தல் கண்டோம்
அரசியல் மாற்றங்கள் கண்டோம்
அரச ஊழியர்கள். சம்பள அதிகரிப்பு. விலைக் குறைப்பு.
மீள் குடியேற்றத்துக்கான வழி பிறக்கக் கண்டோம்

பரிசுத்த பாப்பரசர் நல் வரவு கண்டோம்
பாரினில் அன்பு. கருணை. இன நல்லிணக்கம் மலரக் கண்டோம்
பாரதப் பிரதமர் மோடியும் வந்து சென்றார்- இனியாவது
மோட்சம் ஏதும் கிடைக்குமா தமிழ் மக்களுக்கு?
ஜய ஆண்டே உம்மை வாழ்த்தி அனுப்புகிறோம் சென்று விடு
